அன்பு மலர் 24.

நா
371

# அன்பின அற்புதம்

(இன்னிசைச் செந்தமிழ் நாடகம்)

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.
1939

உரிமை பதிப்புற்றது.]

[விலை { அணா 10
cts. 50

அன்பு மலர் 24.

12-39 — 193 — 67.

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை
பால ஷண்முகானந்த சபா.

# அன்பின் அற்புதம்

(இன்னிசைச் செந்தமிழ் நாடகம்)

To The Proprietor
Sri Bala Shanmukananda Sabha.
With the best Compliments.

சுவாமி சுத்தானந்த பாரதியார்
இயற்றியது

Shuddhananda
31/10/39.

காமராசர் பல்கலைக்கழகம்
அய்யவை
தி. க. சண்முகம் நூலகம்.

அன்பு நிலயம்
இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.
1939

உரிமை பதிப்புற்றது]

[விலை { அணு 10. cts. 50.

*First Printed:* *July, 1939*

அவ்வை டி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 49
நன்கொடை எண்: 49

*Published by*
**THE ANBU NILAYAM,**
RAMACHANDRAPURAM
*Trichy Dt.*

Price: { **Ten Annas**
{ **Fifty Cents**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
டி.க. சண்முகம் நூலகம்

Shakti Press Ltd., (Shanti Press), Madras.

# பதிப்புரை

இந்நூல் 24-வது அன்புமலராக வெளிவருகின்றது. தமிழர் அன்பு - இன்ப மயமாக இறைவனை வணங்குவர். அன்பும் இன்பமும் "சிவம்" என்னும் செம்பொருளில் அடங்கும். இன்பம் வேண்டார் யார்? இம்மை மறுமைக்கு வழி காட்டுவதே சிவநெறி. தமிழர் தங்கள் அருமைச் சமயத்தை நன்கு அறிந்து தெளிந்து நின்று பயன் பெறும் பொருட்டே இந் நாடகம் எழுதப்பெற்றது. மற்றோர் எண்ணம்: தனித் தமிழ் நாடகங்களைத் தமிழர் நடித்துத் தனித்தமிழ்க் கலையை வளர்க்கவேண்டு மென்பது. பிறநாட்டார் இக்காலத்தில் நாடகக் கலைவளர்ச்சிக்குச் செய்துள்ள அரிய வேலையைத் தமிழரும் செய்யலாம். பதினாயிரம் ஆண்டுகளுக்கு மேல் நாகரிகச் செல்வியாகவும் இசை மடந்தையின் இளவரசியாகவும் விளங்கும் நமது தமிழ் உறங்கலாமா?

நாடகமேடையைப் புனிதமாக்கவேண்டும். நாடக மேடையைச் சமயசமூக ஆசார சீர்திருத்த மன்றமாகச் செய்தல் இன்றியமையாதது. சிவனும் நடராஜன்; விஷ்ணுவும் அரங்கநாதன். உலகமே அவர்களுடைய ஆனந்த நடனசபை. இந்த உயர்ந்த எண்ணத்துடன் நல்லொழுக்கமும் சிறந்த கல்வியும், அருட்பணியும், இசைத்திறனும், கலை நயமும், நடன சக்தியுமுள்ள இருபது தமிழ் வாலிபர்கள் முன்வருவார்களானால், தமிழ் நாட்டில் மிகவும் அரிய சீர்திருத்தங்கள் இயற்றலாம். மற்ற எந்தச் சாதனத்தினும் நாடகத்தின் வாயிலாக மிக எளிதாகச் சீர்திருத்தங்களைச் செய்யலாம்.

தமிழ் உறங்கற்க! தமிழ் தென் மொழிகளின் தாய்; தமிழ் விழித்தெழுக! தமிழ் தனிக் கலையாக வளர்க! நாடகம் என்பது இயல், இசை, ஓவியம், அழகு, இன்பம், அன்பு, காதல், கற்பு, உலகம் உள்ள விதம், அது திருந்த வேண்டிய விதம், வாழ்வின் போக்கு, வாழ்வின் கருத்து, வாழ்வு புனிதமுறும் வழி, சமயநெறி, சமதர்மம், கடவுளன்பு, ஆருயிரன்பு முதலிய பலப் பல விஷயங்களைக் கண் முன்னே நடத்திக்காட்டிக் கருத்திற் பதிய வைப்பதாம். நமது தமிழகம் அருட்செல்வஞ் செழித்தது; அருளடியார் இங்கே அற்புதஞ் செய்தனர். இன்றும் நமது தமிழகம் அருட்சுடர் நிலயமாக விளங்குகிறது. அதன் மாண்பையும், அருளடியார் திறனையும், நமக்கியல்பான அருட்கலை வளத்தையும், தமிழின் தெய்வ மணத்தையும், அன்பின் அற்புத சக்தியையும், இறைவன் அடியார்க் கெளியனாகத் துணைபுரியும் உண்மையையும் இந்நாடகம் தெளிவாக விளக்குகிறது.

தமிழ்க் கலை அமுதம் தழைத்தினி தோங்குக!

இப் பதிப்பு, பல சீர்திருத்தங்களைக் கொண்டது; நடை எளிது; நாடக லக்ஷணங்கள் இதில் கவனிக்க பெற்றுள்ளன. நகைச் சுவைக்காக '**தண்டாயுதம்**' என்றும் புதிய பாத்திரம் சேர்க்கப் பெற்றுள்ளது. இப்பதிப்பையே சுத்தப் பதிப்பாகக் கொள்க.

இந்நூலைப் பொதுநோக்குடன் பயில்க; எச்சமயத்தையும் குறைவாகக் கருதற்க; அததன் இடத்தில் அதது சிறப்பு. அருக சமயம் நற்காட்சி, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகிய மூவ்வழி பற்றியது. அதன் மாண்பும் மஹாவீர தீர்த்

தங்கரர் பெருமையும் **பாரதசக்தியிற்** காண்க. மனிதனுக்கு மனிதன் அறியாமையாற் செய்யும் பிழையையே முதல் பாகம் வர்ணிக்கிறது. பல்லவராஜனிடம் குற்றமில்லை; மனிதன் மனவிகாரமே குற்ற முடைத்து. அதுவே துன்மதி, குண்டன் முண்டனாக வர்ணிக்கப்படுகிறது; ஆதலின் இந்நூலைப் படிப்போர் எள்ளளவும் பிற சமயங்களைக் குறை கூறற்க. அவரவர் சமயத்தை அவரவர் சமரஸ வுணர்வுடன் அனுட்டிக்கவேண்டும். அடியார் அன்பின் அற்புதங்களை இந்நூல் விளக்குவதால், இதற்கு **அன்பின் அற்புதம்** என்று பெயர் வந்தது.

ஓம் சிவம்!

20—7—1939
இராமச்சந்திரபுரம்

**அன்பு நிலயத்தார்**

# நாடக பாத்திரர்கள்

தண்டாயுதம்
சிவபாதம் } அடியார்
சிவநேசன்
திலகவதியார்
வாகீசர் (திருநாவுக்கரசர்)
கோயில் அர்ச்சகர்
பல்லவராஜன்
சன்மதி
துன்மதி
சதிசேனன்
அதிகாயன்
குண்டன்
முண்டன்
தத்வசாகரர்
அடியார் கூட்டம்
திருஞான சம்பந்தர்
அப்பூதியடிகள், அவர் மனைவி, இரு மைந்தர்
திருநீலகண்ட யாழ்ப்பாணர்
சிவமுனிவர்
அரம்பையர்



திருநாவுக்கரசு சுவாமிகள்

அறிவு அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா

# அன்பின் அற்புதம்

—(o)—

## க.

## மலர்ச்சி 1.

[கோயில் பூந்தோட்டம்... சிவநேசன் பாடிக்கொண்டே மலர் பறிக்கிறான்.]

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி!
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி!
எண்ணும், எழுத்தும், சொல் ஆனாய் போற்றி.
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி!
விண்ணும் நிலனுந் தீ யானாய் போற்றி!
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி!
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி, போற்றி!

நமச்சிவாய வாழ்க.... நாதன் தாள் வாழ்க....!

தண்டாயுதம்:-(பேய்க்குர லெடுத்து ஓடிவருகிறான்) நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க....

சிவநேசன்:-அடியார் தொண்டைக்கு இன்றுக் கோரோசனை அதிகமோ?

தண்டாயுதம்:-எண்சாண் உடம்பிற்கு முதன்மை எது சொல்லட்டும் அடியார்?

சிவநேசன்:-எண்சாண் உடம்பிற்குத் தலையே முதன்மை....

தண்டாயுதம்:-அப்படியல்ல; காலம் மாறிப் போனது. எண்சாண் உடம்பிற்கு ஒருச்சாண் வயிறே முதன்மை. வயிறு வாடினால் தலை ஆடுமா? இரத்தம் ஓடுமா? இந்த வயிற்றில் கோயில் கொண்டுள்ள பெருமானுக்கு இன்று கொண்டாட்டம்....

சிவநேசன்:-என்ன கொண்டாட்டம்?

தண்டாயுதம்:-தயிர்வடை, பாயாசம், அப்பளாம், வெண்டைக்காய்க்குழம்பு, சேப்பங்கிழங்கு மோர்க்குழம்பு, பச்சைமிளகாய்த் துவையல் ற்ற்ட்ட ற்ட்ட! நாலு பட்டை மிளகுபொடிச்சாதமுந் தண்ணீரும் குடிக்கிற கட்டைக்கு, நாலு தொன்னைப் பாயாசமும், மோர்க் குழம்பும் கிடைத்தால் ற்ட்ட. ற்ட்ட....கேட்கவேண்டுமா........சிவோஹம், சிவோஹம்!

சிவநேசன்:-இன்றென்ன மகேசுர பூஜையோ?

தண்டாயுதம்:-தம்பி வாராங்களாம்....

சிவநேசன்:-யார்தம்பி? பேரென்ன?

தண்டாயுதம்:-அம்மா தம்பிதான்.... பேர் மருமரு.... என்னமோ சொன்னாங்களே வயிற்றிலே இருக்கிறது; ஒரு ஏப்பம் வந்தால் நினைவு வரும்.

சிவநேசன்:-தாங்கள் மருளவேண்டா. செய்தி தெரிந்தது. **திலகவதியார்** தம்பி **மருணீக்கியார்**, வடக்கேயிருந்து வருகிறார்?

தண்டாயுதம்:-வடக்கே காசியாத்திரையா, கைலாச யாத்திரையா போனார்?

சிவநேசன்:-இல்லை பாடலீபுரத்திலே அவர் தருமசேனராயிருந்து, அருகமதோபதேசம் செய்து வந்தார். சூலை நோய் வந்து மிகவும் வருந்தி இப்போது தமக்கையைப்பார்க்க வருகிறார். சிவனருளால் குடல் நோய் நீங்கவேண்டும்.

தண்டாயுதம்:-இதுதானா பிரமாதம்? இன்று நம்ப பக்கத்திலேயிருந்து நாம் சாப்பிடுவதுபோலே சாப்பிடச் சொல்லுங்கள். குடல்வலி, வயிற்றுவலி யெல்லாம் பறக்கும்.

சிவநேசன்:-அது சிவாபராதத்தால் வந்த நோய், திருவருளால் நீங்கும். இந்த அற்புதத்தைக் கொண்டாடவே இன்று மகேசுர பூஜை நடக்கிறது.

தண்டாயுதம்:-முதல் கொண்டாட்டம் இவனுக்குத்தான் (வயிற்றைக்காட்டி)—பிறகே அடியார், தலையார் எல்லாருக்கும். அதிருக்கட்டும், இந்த மருணீக்கியார் ஏன் வடக்கே போனார்? **திலகவதியார்** ஏன் இந்த வீரட்டானக் கோயில் மடத்தில் இருக்கிறார்?

சிவநேசன்:-இத்தனைநாள் திருமடத்தில் இருந்தும், இது உமக்கு தெரியவில்லையா?

தண்டாயுதம்:-தோட்டவேலை சாப்பாடு, சாப்பாடு தோட்டவேலை, உறக்கம்....நினைப்புவந்தால் நாமாவளி ஆனந்தக் கூத்து இவைதாம் இவனுக்குத் தெரியும். சொல்லுங்கள் விவரமாக. ஒரு பாட்டுப்பாடிப் பிறகு சொல்லுங்கள்....

சிவநேசன்:-

ஆட்பா லவர்க்கருளும் வண்ணமும், ஆதிமாண்பும்,
கேட்பான்புகில், அளவில்லை, கிளக்கவேண்டா....
கோட் பா லனவும், வினையும் குறுகாமை யெந்தை
தாட்பால் வணங்கித் தலைநின் றிவை கேட்கத்தக்கார்....

தண்டாயுதம்:-(நடமாடிக்கொண்டே) சொல்லட்டும் நமச்சி வாய வாழ்க, உம் நடக்கட்டும்....

சிவநேசன்:-உலகில் எல்லாரும் இன்பந் தேடுவர். இன்பம் என்பது சிவம். சாதிசமய வேறுபாடில்லாமல், இன்பம் வேண்டியோர் எல்லாரும் இச் சிவப்பொருளை யடையலாம். எந்த மதத்தினர் எப்பெயரால் வழி பட்டாலும் முடிவில் அடையும் இந்த இன்பப்பொருள் ஒன்றேயாம். இப்பொரு ளன்பிற் சிறந்தவர் **புகழனர்.** அவர் திருவாமூர் வேளாளப் பெருந்தகையார். அவர் மனைவி மாதினியார் கற்பரசி, சிவநேசச்செல்வி. இவர்களுக்கு, **திலகவதியாரும்,** நமது **மருணீக்கியாரும்** மக்கள் ஆவர். திலகவதியாருக்கு மணப்பருவம் வந்தது. அவரைக் கலிப்பகையார் என்னும் செந்தமிழ் வீரருக்குக் கொடுப்பதாகத் தீர்மானித்திருந்தார்கள். கலிப்பகையார், அரசன் கட்டளையேந்தித் தமிழர் படையை நடத்தி, வடநாட்டரசன் ஒருவனுடன் போர் செய்தார். போரில் உயிர்நீத்தார். அதேசமயம் புகழனரும் மாதினியாரும் இங்கே சிவபதம் சேர்ந்தனர். திலகவதியார் காதலன் பிரிவைப் பொருது உயிர்விடத் துணிந்தார்; தமக்கை யிறந்தால் தாமும் இறப்பதாக மருணீக்கியார் குறுக்கிடவே, திலகவதியார் துறவு பூண்டு, இங்கேவந்து, கோயிற்பணியும் அரனடிநேயமும் கொண்டு வாழ்கின்றார்.

தண்டாயுதம் :—என் சொத்தைவைத்துக்கொண்டு, நன்ருய்ச் சாப்பிட்டு வீட்டோடிருக்கலாமே....

சிவநேசன்:-மருணீக்கியார் உலக நிலையாமையறிந்து, தமது செல்வத்தையெல்லாம் வறியோருக்கு அள்ளிவிட்டு, தான் தருமங்களைச்செய்து, அனைத்தையும் துறந்து, மெய்ப்பொருளைத் தேடிப் புறப்பட்டார். அஹிம்ஸா தருமத்தை அடிப்படையாகக் கொண்டு, தூய அறிவு, காட்சி, ஒழுக்கம் ஆகிய மூன்று வழிகளை உபதேசிக்கும் அருகசமயம் அவருக்கு நன்றெனப்பட்டதால், அச்சமயம் புகுந்தார்; தருமசேனராஞர். இப்போது சிவபெருமான் அவரை ஆட்கொள்ளுகிருர்.

தண்டாயுதபாணி:—அதெப்படி ஆட்கொள்வது? தருமசேனருக்கு இங்கேவரும் எண்ணம் எப்படியுண்டாயிற்று? அங்கே சாப்பாடு வகையாயில்லையா?

சிவநேசன்:—அடியாருக்கு எப்போதும் வயிற்றிலேதான் மூளை. அதற்குமேலே நாலுவிரற்கடையில், **உள்ளம்** உள்ளதல்லவா? அதில் ஒருவன் உள்ளான்; அவனே எனக்கு இனியன்....

தண்டாயுதம்:—....அதற்கொரு தேவாரம் பாடுவீர்களே.... எங்கே நடக்கட்டும்....

சிவநேசன்:—

என்னில் யாரும் எனக்கினியார் இல்லை,
என்னிலும் இனியான் ஒருவன் உளன்....
என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து புக்(கு);
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே........

**தண்டாயுதம்:**—(வயிற்றைக் காட்டிப் பேய்த் தொண்டையுடன்) என் உள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே.... (தாண்டவம்)

**சிவநேசன்:**—தாண்டவம் போதும். அந்த உள்ளிறைவன் அவரவர் பரிபக்குவத்திற் கேற்றபடி ஆன்மாக்களை இழுத்து ஆட்கொள்ளுகிருன். இன்று மருணீக்கி யாரை ஆட்கொள்ளப் போகிருன்.

**தண்டாயுதம்:**—இன்று இங்கே (வயிற்றில்) யிருக்கும் ஈசன், பத்துத்தொன்னைப் பாயாசம் ஆட்கொள்ளப் போகிருன்....நாம் **அடியார்** ஆதலாலே, நெஞ்சிற்கு அடியிலுள்ள வயிற்றிலேயே திருக்குறிப்பு நாட்டுகிறோம்.

**சிவநேசன்:**—அப்படியல்ல; உள்ளம் நிலைத்து, தலை அவனுக்கு வணங்குக!....உலகில் அனைவரும் உணர்ந்து ஓதற்கு அரியவன் அவனே, சிவனே....

[திரைக்குப்பின்னே கோயில் மணியடிக்கிறது; தேவாரம் முழங்குகிறது. தண்டாயுதம் தாண்டவ மாடுகிருன்]

பித்தா பிறை சூடீ! பெரு மானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக் கின்றேன் மனத் துன்னை;
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்
[லூர் அருட்டுறையுள்
அத்தா வுனக் காளா யினி அல்லேன் எனலாமே!

**சிவநேசன்:**—மலர்கள் போதும்.காலைத் திருவிளக்குக் காட்சிக்குச் செல்வோம். நமப் பார்வதீ பதயே!

**தண்டாயுதம்:**—ஹர ஹர மஹா தேவ....இதோ அம்மாளிடம் இந்த மலர்களைக் கொடுத்து, ஒரு எட்டில் பொங்கல் விநியோகம் சாப்பிட வந்துவிடுகிறேன். ஹர ஹர மஹா தேவ! [திரைவிழுதல்]

# காட்சி : 2.

[திலகவதியார் சிவ சிந்தையிலிருத்தல்; எதிரே சிவலிங்கம், திருவிளக்கு, மலர்கள் உள்ளன.]

**திலகவதியார்:—**

மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி யுள்ளம்,
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
எனைக் கண்டு கொள்ளே!

தேனினும் பாலினுந் தெள்ளறிவில் தித்திக்கும் சிவமே! அடியார்க்கெளியனே! அல்லலைப் போக்கும் அருமருந்தே! அணுவினும் அணுவே, யாதினும் பெரிதே! மறவார் மனத்திற் பெருகும் இன்பமே, போற்றி, போற்றி நின்னருள் போற்றி!

எனது தம்பியை இன்றனது திருவடிக் காளாக்க அருள் செய். வழி தெரியாது மயங்கி யலையும் மாந்தர்களை, உனது திருநோக்காலே தடுத்தாண்டுக்கொள்வாயாக! நீயின்றி உல குயிர்க்கு யார் துணை?

அப்ப நீ, அம்மை நீ, ஐயனு நீ, அன்புடைய
மாமனு மாமியு நீ,
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளு நீ,
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூரும் நீ,

துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்றுவாய் நீ,
துணையாயென் னெஞ்சந் துறப்பிப்பாய் நீ,
இப்பொனீ, யிம்மணி நீ, யிம்முத்து நீ,
யிறைவனீ, யேறூர்ந்த செல்வனீயே!

[திரைக்குப் பின்னால்]

[“ அப்ப! அப்ப! ஐய!”]

யாரது! ஓ! மருணீக்கி! சிவம் வெல்க!

[வயிற்றைக் கையாற் பிடித்துக்கொண்டு,
நொந்து மெலிந்து **மருணீக்கி** வருகிறார்]

**மருணீக்கி:—**

அப்ப! அப்ப! ஐய! ஐய! பொறுக்கிலேன்! பொறுக்கிலேன்! அம்ம! உயிர் போகின்றதே! திலகவதீ இ! திலகவதீ இ இ இ!! அம்ம! அம்மம்ம!! அம்மவோ! ஓ! ஓ! குடல்நோய் வடவனல் போலக் கொதிக்கின்றதே! பொறுக்கிலேன்! அருந்தவக் கொழுந்தே! நறுங்குண வடிவே! சிவத் திருச் செல்வியே! சேவடி பணிகிறேன்! திலகவதீ இஇஇ!! திலகவதீ இஇஇஇ!

[காலில் விழுகிறார்]

**திலகவதி:**—தம்பீ! எழுந்திரு! எல்லாம் சிவன்செயல்; நமச்சிவாய என்று சொல்!

மருணீக்கி:—நமச்சிவாய! நமச்சிவாய! நமச்சிவாய! அப்ப! சற்று ஆறுதலடைந்தேன்! சிவ பெருமானே! நின் பெருமையே பெருமை! நின் பெயரே அமுதம்! நமச்சிவாய, நமச்சிவாய!

---

நமச்சிவாய என்பதை ‘नमः शिवाय’ என்று உச்சரிக்கவும்.

திலகவதி :—தம்பீ! சிவ நாமத்தின் பெருமை எல்லை யற்றது.

காத லாகிக் கசிந்து கண்ணீர் மல்கி,
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பது;
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னும நமச்சி வாயவே!
நம்புவார் நமர் நாவி னவிற்றினுல்,
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது;
செம்பொனுர் திலகம் உலகுக் கெல்லாம்
நம்ப னும நமச்சி வாயவே!

அழியா இன்பமே சிவம்! எல்லா வுயிர்களும் இன்பத்தையே நாடுகின்றன; அது சிவமே! அவ்வின்பப் பெருமானை உயிர்கள் வழிபட்டுய்யும் நெறியை நம: என்பது குறிக்கிறது. சிவாய நமவெனுங் குளிகையால் ஊனும், உள்ளமும் பொன்போல் ஒளிரும். தம்பீ, உடலை மற; உடையானுகிய சிவனை நினை. அவனை நினைத்தலே இன்பம்; அவன் பெயரே உனக்குச் சிறந்த மருந்து.

மருணீக்கி:—சிவ, சிவ, சிவ, சிவ, சிவ! ஆ! ஆ! ஆ! இன்னும் வலி பொறுக்க முடியவில்லையே! திலகவதீ இ! இ!

[காலில் விழுதல்]

திலகவதி :—தம்பீ! எழுந்திரு! இதோ உன் பாழ் நெற்றியை இத் திருநீற்றுல் விளக்கு. சிவ சிந்தையுடன் இதைப் பூசிக்கொள். விபூதியின் மகிமை அளவற்றது. அது அன்பிற்கும், தூய்மைக்கும் அறிகுறி. அன்பும் சிவமும் ஒன்றே!

*மந்திர மாவது நீறு; வானவர் மேலது நீறு;
சுந்திர மாவது நீறு; துதிக்கப் படுவது நீறு;
தந்திர மாவது நீறு; சமயத்தி லுள்ளது நீறு;
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

மந்திரம், சுந்திரம், தந்திரம், வேதப்பொருள், வெந்துயர் தீர்க்கும் மருந்து, போதந் தருவது, புன்மை தவிர்ப்பது, சத்தியமாவது—திரு நீறே! தம்பீ! இச் சிவ சின்னத்தைச் சிவ மந்திரத்துடன் அணிந்துகொள்.

[திருநீறு தருதல்.]

மருணீக்கி :—நமச்சிவாய! நமச்சிவாய! நமச்சிவாய!

[நீறணிதல்.]

அப்பா! பாதி நோய் குறைந்ததுபோ லிருக்கிறதே! சிவ பெருமானே, நீயே இறைவன்! நமச்சிவாய! நமச்சிவாய! சிவனே போற்றி! தெய்வமே போற்றி!

திலகவதி :—தம்பீ, இனிச் சிவனடி போற்றிச் சிவப்பணி புரி! அவனே அன்பர் களைகண்.

மருணீக்கி :—சிவனே போற்றி! சிவன் செயல் போற்றி! சிவன் பணி ஒன்றே என் பணி யாகுக!

[வருதல் தண்டாயுதம்]

தண்டாயுதம் :—நமக்குப் பணி இரண்டு: நன்றாகச் சாப்பிடுதல், ஆனந்தமாய்த் தூங்குதல்....ஆ இந்த ........ அடியார் யார்....?

திலகவதி :—தண்டாயுதம், மலர்களை இப்படி வை. இவர் நமது தம்பி மருணீக்கியார்.

---

*இப்பாசுரம் பிற்காலம் எழுந்ததாயினும், தற்காலத்திற்கேற்ப இங்கே வழங்கப்பெற்றது.

தண்டாயுதம்:—தம்பி வந்துட்டாங்களா! (வயிற்றைத் தடவி) சந்தோஷம்....அடியாருக்குத் தண்டாயுதபாணி வணக்கம், நமச்சிவாய.

மருணீக்கி :—வணக்கம், நமச்சிவாய.

திலகவதி :—தண்டாயுதம், இவரை அழைத்துச் சென்று காலை அனுட்டானங்கள் ஆனதும் கோயிலுக்கு அழைத்துவா.

தண்டாயுதம் :—இதோ ஒரு நொடியில்: அடியார் எழுந்தருளுக! குளித்துப் பூசி, சம்பாப் பொங்கல் விநியோகத்திற்குத் தயாராகச் சந்நிதியில் நிற்போம்.

[திரைக்குப் பின் கோயில் திருமணி, திருப் பாடல்கள் கேட்கின்றன.]

கோயில் அடியார் :—

போற்றி யருளுக நின் ஆதியாம் பாதமலர்!
போற்றி யருளுக நின் அந்தமாஞ் செந்தளிர்கள்!
போற்றி யெல்லா வுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்!
போற்றி யெல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்!
போற்றியெல்லா வுயிர்க்கு மீறும் இணையடிகள்!
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்!
போற்றியாம் மார்கழி நீ ராடேலோ ரெம்பாவாய்!

திலகவதி :—தம்பீ, விரைவில் திருப்பள்ளியெழுச்சி சேவிக்க வா. இதோ யான் திருவலகும், திருமெழுக்கும் தோண்டியும் எடுத்துச் செல்கிறேன். பரிசுத்தமாக நீ ஆலயம் புகுந்து, அரன் அடி பணிந்து முறையிட்டால் அவன் அடியார் குறை தீர்ப்பான்.

உங்கையிற் பிள்ளை, உனக்கே அடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்கும் எம் அச்சத்தால்,
எங்கள் பெருமான், உனக்கொன் றுரைப்போங்கேள்:
எங்கொங்கை நின் அன்ப ரல்லார்தோள் சேரற்க!
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க!
கங்குல்பக லெங்கண் மற்றொன் றுங் காணற்க!
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்,
எங்கெழிலென் ஞாயி றெமக் கேலோ ரெம்பாவாய்!

[எல்லாரும் செல்லல்]

## காட்சி: 3.

[திரு வீரட்டானேச்சுரர் சந்நிதி. சிவலிங்கத்திற்கு வழிபாடுகள் நடக்கின்றன. தேவாரம் முழங்குகிறது. திலகவதியும் தேவார கோஷ்டியுடன் பாடுகிறாள். சிவநேசனும் பாடுதல்.]

தோடுடை யசெவி யன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடி,...
காடுடை யசுட லைப்பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்...
ஏடுடைய மல ரான்முனை நாட்பணிந்
தேத்த வருள் செய்த
பீடுடைய பிர மாபுர மேவிய
பெம்மான் இவனன்றே!

[தீபாராதனை நடக்கிறது. கோயில் வழிபாடு முழுதும் தேவாரமந்திரம் ஓதியே நடக்கிறது]

*சந்தமா ரகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினி லுமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே!

[வருதல் தண்டாயுதம், மருணீக்கி.]

திலகவதி :—தம்பீ! சிவனைச் சரண் செய்!

மருணீக்கி :—நமச்சிவாய! நமச்சிவாய! பவப்பிணி தீர்க்கும் பகவனே போற்றி! சிவனே, இன்பமே! செழுஞ் சுடர்மணியே! அன்பே! நண்பே! அரனே போற்றி! வாய் மனங் காணு வள்ளலே போற்றி! என்னை யாளும் இறைவா யோற்றி! எல்லாம் வல்ல செல்வா போற்றி! நின் பெயர் உரைத்தேன்; நீளிடர் கடந்தேன்! என்னை வாட்டும் இன்னலைத் தீராய்! அரனே! சிவனே! அம்பலத் தரசே! அடைக்கலம்! அடைக்கலம்! அடைக்கலம்! ஆ! என் உள்ளத்தில் உன் பண் ஒலிக்கின்றது. கொற்றவனே! என் குடல் நோய் தீராய்! அன்பர் அல்லலைத் தீர்க்கும் அரனே! அந்தோ பொறுக்கிலேன்! ஆ ஆ! ஆ!

[வயிற்றுவலிக்காரன் போலே பாடவேண்டும்.]

கூற்றாயின வாறு விலக்ககலீர்;
கொடுமை பலசெய் தனநா னறியேன்.
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்,
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்;

---

*தேவாரப் பாக்களை, சிவநேசன், சிவபாதம் இருவரும் பாடலாம், தண்டாயுதம் இடையிடையே நாசூக்காக நடனமாடலாம்.

தோற்றுதென் வயிற்றி னகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட,
ஆற்றேன்! அடியேன்! அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே!

நெஞ்சம் உனக்கே யிடமாக வைத்தேன்;
நினையா தொருபோது மிருந் தறியேன்;
வஞ்சம் இதுவொப் பதுகண் டறியேன்;
வயிற்றோடு துடக்கி முடக்கி யிட
நஞ்சாகிவந் தென்னை நலிவதனை,
நணுகாமற் றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலு மென்னீர் அதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே!

அப்பனே! அம்மையே, அரும்பெருஞ் செல்வமே, நின்னை மறந் துய்யேன்! நின்னடி புகுந்தேன்! நலந் தீங்கிலும் உனது நாமம் மறவேன்; பண்ணோடு உன்னைப் பாட மறவேன்!

[பணிதல்.]

........அப்ப! நோய் முற்றும் பட்டென விலகியதே! என்ன வியப்பு! சிவபெருமானே, நீயே இறைவன்! நோய் முற்றுந் தீர்ந்தது! அன்பர்க்கருளே! ஆனந்தக்கடலே! நின் கருணைக்கு என்ன கைம்மாறு செய்வேன், சிவசிவ! நீ அடியார்க்கெளியனென்பது விளங்கியது. கருணைப்பெருமானே, பாமலர் சூட்டிப்பணிபுரிந்து, நின்னையே வழிபடும் இன்பமருள்....சிவ, சிவ....சிவ!

[அசரீரி]

அன்பனே, உன் ஆர்வம் நன்று! தேனினும் இனிய தேவாரத்தைப் பாடி எம்மைப் பண்ணாற் பணிந்தனை! பாகி ளந் தமிழார் பண்பனே! உலகெலாம், 'வாகீசன்' என்ன வழங்குக நின்பெயர்!

வாகீசர் :—

எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி!
எரி சுடராய் நின்ற இறைவா போற்றி!
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி!
கொல்லுங் கூற் றொன்றை யுதைத்தாய் போற்றி!
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி!
கற்றார் இடும்பை களைவாய் போற்றி!
வில்லால் வியனரண மெய்தாய் போற்றி!
வீரட்டங் காதல் விமலா போற்றி!

[பணிதல்]

அருட்பெருங் கடலே! அறிவுச் சுடரே, நின் கருணைப் பெருக்கை எங்ஙனம் உரைப்பேன்! அடியனைத் தடுத் தாண்ட என் அரசே! கொடுமையாய் அன்பர் குற்றங் களை வாய்! அன்னை யன்புடன் ஆதரவளிப்பாய்! போற்றி, போற்றி பூதமுதல்வா!

திலகவதி :—தம்பி, இனி அருட்பணி செய்து வாழ்.

வாகீசர் :—என்கடன் பணிசெய்து கிடப்பதே!

தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக் கணிந்து;
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்!

மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம்

கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை!
எண்டோள் வீசிநின் றாடும் பிரான் றன்னைக்
கண்காள் காண்மின் களோ!

நெஞ்சே நீ நினையாய்—நிமிர்
புன்சடை நின்மலனை!
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்!

எல்லாரும்:—வாகீசர் வாழ்க! சிவ னருள் வெல்க!

சிவமயம்! சிவமயம்! நமப் பார்வதீ பதயே! ஹரஹர மஹாதேவ!

[தீபாராதனையாகி விநியோகம் நடக்கிறது]

எல்லாரும்:—

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே,
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய,
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே!

[அடியார் எல்லாரும் விநியோகம் பெற்றுச் செல்லல்.]

தண்டாயுதம்:—இருக்கட்டும். அடியார் அங்கமாலை பாடினாரே, அதிலே தலை முதல் கால்வரை சேர்த்து, என் அருமை வயிற்றைமட்டும் விட்டுட்டாரே! இதென்ன ஓரகம்? வயிற்றுக்கு வஞ்சனை கூடாதல்லவா? நான் அதைப் பூர்த்திபண்ணுகிறேன், கேளுங்கள்:

[விநியோகம் சாப்பிட்டுக் கொண்டே]

வயிறே சாப்பிடுவாய்—நீ
வாடச் சகிப் பேனே....
வயிறு லேயிந்த மேதினி வாழ்வது
வயிறே சாப்பிடுவாய்....
ஹர ஹர மஹாதேவ.... ஹேவ், ஹேவ் !

[செல்கிறான்.]

## காட்சி : 4.

[பல்லவராஜன் கொலுவிருக்கை. மந்திரி, சன்மதி, துன்மதி, சபையோர் அருகனைத் தொழுது அமர்தல்.]

எல்லாரும்:—

அருகா சரணம்! அமலா சரணம்
முருகார் திருவே! முதல்வா சரணம்!
பெருமா தவனே பெரியோய் சரணம்!
உருகும் அடியார்க் கொளியே சரணம்
அமைதிக் கடலே, அறிவே! நிறைவே!
அமணர்க் கொளியே! அருகா! அருகா!
அமரர்க் கரியோய்! அரஹந் தாணம்!
சமவச் சரணத் தரசே சரணம் !

ஓம் அரஹந்தாணம், சித்தாணம் ஆயுரியாணம்! உவஜ்ஜாணம்! நமோ லோயே சவ்வ ஸாஹூணம்!

[அமர்தல்]

---

ஜைனர்களின் காட்சிகளை நடிக்கும்போது, அச்சமயப் பற்றுள்ளோரின் மனம் புண்ணாகாதவாறு கவனமாக நடிக்கவும்.

பல்லவராஜன்:—மந்திரி சன்மதி, அருகன் அருளால் நமது குடிகள் நலமா? நமது செங்கோல் செழித் தோங்கு கிறதா?

சன்மதி:—அரசே தங்கள் அன்பாட்சியில் அனைவரும் நலந் தழைக்கின்றனர்.

குடிகளிற் குடியே யாவன் ; கோக்களுட்கோவே யாவன் ;
அடியவர்க் கடிய னுவன்; அற்றவர்க் கரும்பொன் னுவான்;
கொடியவர் கொடியனுவன்; குவலயத் துயிரின் உள்ளத்
துடிதன துள்ளத் தன்பில் துடித்திடு நீதி மன்னன்.

அத்தகைய மன்னனைப் பெற்ற குடிகளுக்குக் குறை யேது முளதோ? அரசிற்கு ஆட்படையினும் அன்புப் படையே அதிக வலிமையாகும். தங்கள் அன்பால் எங்கும் அமைதி நிலவுகிறது. அரசிறை வருவாயைத் தக்கவாறு கல்வி, தொழில், வாணிபம், சுகாதாரம் ஊர்க்காவல், அற நிலையங்கள், தருமப் பிரசாரம் முதலியவற்றிற்கு வழங்குவதால், நாட்டில் கல்வியும், கலைகளும், ஆற்றலும் ஒழுக்கமும் ஓங்குகின்றன.

பல்லவன் :—கிராம ஜனங்கள் குறைவில்லா திருக்கிறார் களா?

சன்மதி:—அரசே! கிராமமே நாட்டின்வேர்; நமது கிராமங் கள் எல்லா வகையிலும் செழிப்புற் றோங்குகின்றன. ஒவ்வொரு குடிலும் தொழில் நிலயமா யிருக்கிறது; எங்கும் கல்வியொளி பரவியுள்ளது; கிராம வாசிகள் தங்களை வாழ்த்துகின்றனர். மேலும், தர்ம ப்ரசாரம் ஒழுங்காக நடப்பதால், ஐம்பெரும் பாதகங்களும் குறைந்து வருகின்றன. சிறு தெய்வங்களுக்குப் பலி

யிடல், கள், புலால், இவை பெரிதும் குறைந்து வருகின்றன. குடிகளின் முறையீடுகள் அவ்வப்போது கேட்டுத் தீர்க்கப்படுகின்றன. அருட்கொடி வேந்தன் கருணையால் அனைவரும் க்ஷேமமாயிருக்கிறார்கள்.

பல்லவன் :—சந்தோஷம்........

“ பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து ”

[சேவகன் வருதல்]

சேவகன் :—மகராசா, பாடலிபுரத்தினின்று பண்டிதர்கள் வந்திருக்கின்றனர்.

பல்லவன் :—உடனே வணக்கமுடன் அழைத்து வா........

சேவகன் :—மகராஜா உத்திரவுப்படி !

[சேவகன் செல்கிறான்]

(வருதல் பண்டிதர்)

தத்வசாகரர் :—மஹராஜ் நமோத்து !

எல்லோரும் :—நமோத்து !

பல்லவன் :—பண்டிதாச்சாரியரே, இப்படி வீற்றிருங்கள்.

[ஆசனமளித்து, பிறகு]

ஏதேனும் புதுமை யுண்டோ ?

தத்வசாகரர் :—மஹராஜ் ! மிகவும் உன்னதமான பரமேஷ்டிகளால் போற்றப்பட்ட நமது மதத்திற்குப் பெரிய சிறுமையுற்றது !

பல்லவன் :—ஆ! என்னே!

தத்வசாகரர் :—நமது மதத்திற்குத் தலைமைவகித்துக் கண்ணு யிருந்த தருமசேனர், சடையானுக் காளானுர்.

பல்லவன் :—ஆ! இச் செய்தி எனது பெருமையில் இடி விழுந்தது போலிருக்கிறதே! அன்பீர், இது எப்படி நிகழ்ந்தது?

அதிகாயன் :—மகராஜ்! தெரியாதா; பழையவாசனையால் படு தந்திரஞ் செய்து, குடல் நோய் கொதிப்பதாக வெகு பாடுபட்டார்! மந்திரம் மருந்து எல்லாம் வழங்கினேம்.

சதிசேனன் :—மஹராஜ்! எல்லாம் சூழ்ச்சி! நமது மந்திரங் கள் பலிக்கவில்லை யென்று கம்பி நீட்டி விட்டார். தமக்கை திலகவதி தம்பிக்கு விபூதிப்பட்டை போட்டுவிட்டாள்!

பல்லவன் :—ஹா! அப்படியா! நாம் அவரை உயர்ந்த நிலை யில் வைத்திருந்தோம்; இப்படி மோசம் செய்து பொறுப்பை யுதறிச் செல்வது துரோகமல்லவா?

சதிசேனன் :—இப்படி ஏமாற்றியவனை என்னதான் செய்யக்கூடாது?

அதிகாயன் :—அனைவரும் நம்மை எளனஞ் செய்வா ரன்றே? ஆதலின்............

துன்மதி : அரசே! தயையும் தாமதமும் வேண்டா. உடனே தகுந்தபடி அவனை............

[கைச்சமிக்கையால் 'வெட்டல்']

பல்லவன் :—தெரிந்தது! அதுவே நமதுறுதி. சன்மதி, சேனையுடன் சென்று நமக்குப் பிழை செய்தவனை எப்படியேனும் கொண்டுவந்து, நம் முன் நிறுத்து வாயாக!

சன்மதி :—காவல, நினது கட்டளை புரிகுதும்.

[செல்கிறான்]

பல்லவன் :—துன்மதி, இவனை எவ்வணம் இளக்கலாம்?

துன்மதி :—சுட்ட செங்கல்லை இளக்கமுடியுமா? அதை நொருக்குவதே சூழ்ச்சி!

பல்லவன் :—தத்துவ சாகரரே, வாதில் அவரை வெல்ல லாமே?

தத்வசாகரர் :—அப்பா! தருமசேனர் கரைகடந்த அறி வாளி. அவரோடு வாது செய்வதார்? மேலும் அவ் வாதில் நாம் தோற்றால் இன்னும் இழிவு!

சதிசேனன் :—வாதா? அவன் செய்தது சூது? அதற்கு நாம் செய்வது தீது! இன்றேல் நமது மானம் பிழைக் காது!

பல்லவன் :—முதலில் என்ன செய்யலாம்?

சதிசேனன் :—நீறு பூசி வருவான்; அதை அழிக்கச்சொல் லுங்கள்.

பல்லவன் :—நீற்றை அழிக்காவிடில்!

துன்மதி :—அவனையே அது வாக்கவேண்டும்.

அதிகாயன் :—அது சரி!

பல்லவன் :—துன்மதி, பண்டிதர்களுக்கு நல் விருந்து செய்தனுப்பு.

துன்மதி :—அப்படியே மஹாராஜ்! வயிற்றிற்கும் மனத்திற்கும் நல்ல விருந்து செய்விக்கிறேன்.

[எல்லாரும் செல்லல்]

பல்லவன் :—ஒருவன் பிறந்த மதத்தினின்று மனத்தைத் திருப்புதல் கடினமே! ஆயினும் நமது மதத் தலைமை வகித்து, நம்மை வஞ்சித்த இத்தருமசேனனைச் சரியானபடி தண்டிக்க வேண்டும். மனமே, இரும்பாகி விடு!

[செல்கிறான்]

## காட்சி : 5.

[வாகீசர், சிவநேசன், சிவபாதம், தண்டாயுதம்]

வாகீசர் :—(உழவாரப் பணி செய்துகொண்டே)

நம்பனே! யெங்கள் கோவே, நாதனே ஆதி மூர்த்தி!
பங்கனே! பரமயோகி! யென்றென்றே பரவி நாளும்
செம்பொனே, பவளக் குன்றே, திகழ்மலர்ப் பாதங் [காண்பான்
அன்பனே யலந்துபோனேன் அதிகைவீ ரட்ட னீரே!

அன்பர்காள், அறிவும், அன்பும், பணியும் உண்மையும் சிவ நேயமுங்கொண்டு உய்மின்! உலகெலாம் அவன் கோயில்; உயிரெலாம் அவன் மேனி; உணர் வெலாம் அவன் அறிவு; மனமெலாம் அவன் அன்பு, செயலெலாம்

அவன் வழிபாடாக்கி, சிவ சிந்தையிற் சிவக் கலப்புடன் வாழுமின் !

சிவநேசன் :—அடிகாள், சிவக்கலப்பின் தன்மையைத் திருவாய் மலர்ந்தருள்க! ஆன்மா சிவனுடன் அத்துவித நிலையில் எப்படி யுள்ளது? எப்படிக் கூடுகிறது? அருள் புரிக.

வாகீசர் :—நமச்சிவாய !

அல்லிமலர் நாற்றத் துள்ளார் போலும்,
அன்புடையார் சிந்தை அகலார் போலும்,
சொல்லின் அருமறைகள் தாமே போலும்,
தூநெறிக்கு வழிகாட்டுந் தொழிலார்போலும்,
வில்லிற் புரமூன் றெரித்தார் போலும்,
வீங்கிருளு நல்வெளியு மானார் போலும்,
எல்லி நடமாட வல்லார் போலும்,
இன்னன்பர்த் தான்தோன்றி யீச னாரே!

நல்லீர், அன்பால் உருகி அருளைப் பெறுமின்! அருளால் சிவன் உம்மை ஆண்டு கொள்வான்! ஆணவம், மாயை, கன்மமாகிய பாசத் தளையிற் பட்டார் பரமனைக் காணார்; அவருள்ளும் அரன் மறைந்துள்ளான். மறக் கருணையாலே பிறப்புக ளீந்து, மெல்ல மெல்லத் தொல்லழுக் கறுத்து, ஆன்மாக்களை அவன் ஆண்டுகொள்கிறான். பாசம் விலகிற் பசு, பதி கூடும். கமலம் மலர்வது சூரியன் கதிரால். அன்பர் மனமலர்ச்சியும் அவனருளாலே யாம். அன்பு சிவமே! சிவமே அன்பு. பதியறிவிற்கு ஒளிகாட்டுவது அன்பு; இறைவன் பூவில் மணமும், புனலில் தண்மையும்,

விறகில் தீயும் போல் விரவியுள்ளான்—அவன் அத்துவிதப் பொருள் ; அனைத்துளுங் கலந்துளான்.

சிவபாதன் :—அடியாரே, சிவன் மாற்றமும், திரிபு மற்ற ஒருவனே யாவனன்றோ? அவன் எங்கு மிருத்தல் எங்ஙனம்? எல்லாம் புரிதல் எங்ஙனம்?

வாகீசர் :—அடியார் கேட்கட்டும். இன்பமேயான அம் பலவாணன், ஆகாயத்தை அணிந்து விளங்குவான் ; அது தகராலயம், சிற்றம்பல மெனப்படும். அப் பர மாகாய தேவதையே பராசக்தி, ஆணை, அம்பிகை யாம். சிற்சக்தி, ஆனந்த சக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என ஐந்தும் அப் பராசக்தியிற் போந்து, சிவபெருமான் ஆணையை நிறைவேற்றுகின் றன. அவருடைய அருட்சக்தி யெங்குமுள்ளது; செகமனைத்தும் சிவசக்தி யாடல்.

சிவநேசன் :—ஆனால் சிவனுக்கும் ஆன்மாக்களுக்கும் எப் படி யுறவு?

வாகீசர் :—அவன் தனது அருட்சக்தி மூலம் அனைத்துமா யுள்ளான் ; அவனன்றி அருளில்லை ; ஆணையில்லை ; அனைத்தும் அவனே; அவன் எல்லாமாய், அல்லவுமாய், ஏகமாய், அநேகமாய் உள்ளான். இச்சா, கிரியா சக்தியால், அவன் அனைத்தையும் ஆக்குகிறான்; ஞான சக்தியால் உடலுடன் உயிர்போல அவன் அனைத்தி லும் கலந்து விளங்குகிறான். சிவன் சூரியன்; அவ னுடைய சைதன்ய சக்தியான சிவை பகலொளி போன்றவள். அவன் பரிபூரணன், நின்மலன், நிச் சலன், ஞானானந்த மயன். அவனன்றி யாதுமில்லை;

அவனுடைய சக்திக்கதிரே இயல்பாகப் பரவி உலக மாய் விளையாடுகிறது.

சிவபாதன்;—அவனைக் காண்பதெப்படி?

வாகீசர்:—அருளாலன்றி அவனைக் காணர்! அன்பால் அருளாம்; அருளால் அறிவாம்; அறிவால் ஒளியாம்; ஒளியால் இன்பாம்; இன்பால் உண்மையாம்; உண்மை அவனேயாம்.

[இந்த ஞானவிசாரம் நடக்கும்போதெல்லாம், தண்டாயுதம், கடலைச்சுண்டலை ஒவ்வொன்ருகப் போட்டுக்கொண்டே கொட்டாவிவிட்டுக் கொண்டிருக்கிருன்]

சிவநேசன்:—அவன் அருளை அடைவதெப்படி? ஆன்மாவை அழுக்குச் சூழ்ந் துள்ளதே? அழுக்கற்று அறிவு முற்றுவதெங்ஙனம்? அடியார் அருளுக!

வாகீசர்:—"ஊனக் கண் பாசம் பதியை யுணராது", ஞானக் கண் மலரவேண்டும். சரியை கிரியையாற் பக்குவப் பட்டு, யோகத்தால் உறவளாவி, இருவினை மாறி, தவத் தால் ஆணவ அழுக்கற்றுச் சுத்தமுற வேண்டும். குருலிங்க சங்கமத்தாலும், பரிபாக மெய்தும். மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக வணங்கினேர்க்கு, உப தேசிக்க சற்குரு வாய்ப்பான். சரியை, கிரியை, யோகம், ஞானம், இந்நான்கும் அரும்பு, மலர், காய் கனி போன்றன. இவற்ருல் இருவினை யொப்பும், மல பரிபாகமு மெய்தி, ஆன்மா பழுக்கும்; புறத்தளை யற்றுச் சிவநேசம் முதிரும். எம்பெருமானை ஓங்காரம் அல்லது ஐந் தெழுத்தால் உள்ளே எப்போதும் வழி படும் இடையரு அன்பு பெருகப் பெருக, அவனை ஞான சொரூபியாயும், நிர்க்குண, நின்மல, தற்பர,

சதாசிவனுகவும் உணரலாம். உணர்வால் அவனுள் உறையலாம். அவனுள் உறையும் விஞ்ஞான கலர்க்கு அவன் தானே ஞானம் விளக்குவான்; பிரளயா கலர்க்குத் தெய்வ வடிவாகவும், சகலர் களுக்கு மனித வடிவாகவும் வந்து அவன் ஞானம் புகட்டுவான். அன்பால் அவனைப் பற்றினேரை அவனே நடத்துவான். அன்பர்க்கு யாதும் குறை யில்லை.

சிவநேசன்:—இத்தகைய சிவகதி விளைவ தெப்படி?

மெய்ம்மையாம் உழவைச் செய்து,
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனு நீரைப் பாய்ச்சித்
தம்மையு நோக்கிக் கண்டு,
தகவெனும் வேலி யிட்டுச்
செம்மையுள் நிற்ப ராகிற்
சிவகதி விளையு மன்றே!

ஆ! எனது வேகங்கெடுத்தாண்ட வேந்தா! பரமா னந்தப் பாற்கடலாக எனது உள்ளத்தே நிறைந்த சிவானந் தமே! அன்பீர், அவன் கழலடியே நமது வீடு.

சிவபாதம்:—கழலடி காண்பதெப்படி?

உடம்பெனு மனையகத்துள், உள்ளமே தகளியாக,
மடம்படும் உணர்நெய் யட்டி, உயிரெனுந் திரி மயக்கி,
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்,
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே!

(வாகீசர் தியானத்தில் ஆழ்தல்)

[தண்டாயுதம் குறட்டை விடுகிறான்]

சிவநேசன்:—அங்கே நிட்டை, இங்கே குறட்டை. ஞானவிருந்துண்ணாமல், இந்தக்கட்டை இப்படி உண்டு உறங்கி....உம். சிவ, சிவா....அடியாரே....

தண்டாயுதம் :—ஞொர்....(குறட்டை)

சிவநேசன்:—எழுந்திரும்

தண்டாயுதம்:—(சட்டென் றெழுந்து)விநியோகமா? இதோ....

சிவநேசன்:—நாவரசு ஞானவிருந்தளிக்கையில், நீர் என்ன செய்கிறீர்....

தண்டாயுதம்:—இதோ மடி நிறைய வைத்துக் கொண்டு கைவிருந் துண்டேன்; காது கேட்கக் கையுண்க, மனம் சுழல, கண்உறங்கக் கட்டை படுக்க....என் கடமை சரியாகத் தானே நடக்கிறது....

சிவநேசன்:—சரி இந்தப் புல்லைக்கொண்டு மாட்டிற்குப் போடும்....

தண்டாயுதம் :—ஹர ஹர மஹாதேவ!

(அடியார் செதுக்கிய புல்லைக் சுமந்து செல்கிறான்)

நமச்சிவாய! நமச்சிவாய!

[அடியார்களும் தியானித்தல்]

[வருதல்—குண்டன், முண்டன்.]

குண்டன்:—அட, இந்தா இருக்காரடா!

முண்டன்:—என்னமா இருந்தவர் இப்படி மாறி விட்டார். அட இதைக்கண்டாலும் கண்டு முட்டு என்பாங்களே!

குண்டன்:—பூசனிக்காய்ச் சாமியாராய் விட்டாரடா! என்ன பூச்சு! அடே யப்பாண்டே! உடம்பெல்லாம் ஒரே சுண்ணும்பா அடிச்சுக்கொண் டிருக்கிருரடா!

முண்டன்:—அத்தோடு விட்டாரா? இன்னம் பாரடா! தாவடம் போட்டிருக்கார். கையிலே முன்னே பீலி; இப்போ துடைப்பம்; ஆள் உதித்திருக்கிருரடா! சந்தோச்சமா?

குண்டன்:—நமக்கேனடா வம்பு. மந்திரி எஜமான் வந்திருப்ப தாகச் சொல்லுவோ மாடா! நம்ம வேலே நமக்கு!

[மெல்ல, மெல்ல அணுகி]

தருமசேனரே! ஐயா! சாமி! ஐயா அஅ! சே பேச்சு மூச்சைக் காணேம்!

[சிவபாதமும், சிவநேசனும் விழித்து]

சிவபாதம்:—நீர் யார்! எங்கு வந்தீர்?

முண்டன்:—இரண்டு பேர் விழித்துக் கொண்டாங்க! செய்தியைச் சொல்லுவோம். ஐயா, மந்திரி எஜமான் வந்திருக்காங்க—தருமசேனரை அழைத்துச் செல்ல.

சிவநேசன்:—மந்திரி இங்கு வரட்டும். அடியார், நிட்டையினின் றெழுந்ததும் அவர்களைக் காண்பார்.

குண்டன்:—சரி அண்ணே வா, போவோம்!

முண்டன்:—இவர் வராட்டி என்ன செய்வதடா! மஹாராஜா கடுமையாக உத்திரவு போட்டிருக்கிருரே!

குண்டன்:—ஒரே கட்டு! ஒரே தூக்! காஞ்சீவரம்!

முண்டன்:—ஆம் ஒரே தூக்! ஒரே தூக்!

[செல்கின்றனர்]

[வாகீசர் விழித்தல்]

வாகீசர்:—

காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக,
வாய்மையே தூய்மையாக, மனமணி யிலிங்க மாக,
நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவிக் காட்டி னேமே!

[சுற்றி நோக்கல்]

நமச்சிவாய! நமச்சிவாய!

சிவபாதம்:—அடியாரே இப்போதிங்கு இரண்டு ஆட்கள் வந்தனர்.

வாகீசர்:—எதற்காக?

சிவபாதம்:—பல்லவராஜன் மந்திரி, தம்மை அழைத்துச் செல்ல வந்திருக்கிருராம்.

[சன்மதி வருதல்]

சன்மதி:—தருமசேனரே நமோத்து!

வாகீசர்:—அடியார் வருக!

சன்மதி:—அரசர் தங்களை அழைக்கிருர்.

வாகீசர்:—அரசர் யார்?

சன்மதி :—இத் தொண்டை நாட் டரசர்.

வாகீசர் :—அகண்ட வுலகில், இத்தொண்டை நாடு ஒரு கை யளவு கூட இல்லை. எல்லையற்ற புவனங்களுக்கு யார் முதல்வனே அவனே எமது அரசன்.

சன்மதி :—இப்போது பல்லவராஜனே எமதரசனும், உம தரசனும் ஆவன். அவன் அருள் உமக்கு வேண்டும்.

வாகீசர் :—அவன் உமதரசனு யிருக்கலாம். எமக்கு அரசன் ஒருவனே, இறைவனே, எல்லாம் வல்ல சிவனே. எமக்கு வேண்டுவதும் அவன் அருளே........

சன்மதி :—அரசன் சமூகத்தில் தங்களுக்கு ஒரு கடமை யுள்ளது.

வாகீசர் :—எமது கடமை இறைவனைப் போற்றலும், அருட் பணி யாற்றலுமே யாம்.

சன்மதி :—எமது அரசன் கட்டளையை நிறைவேற்றுதல் எனது கடமை. அதற்கிணங்குதல் உமது கடமை....

வாகீசர் :—எனது அரசன் கட்டளை, பாமாலை சூட்டிப் பணி தலும், அன்பை அணிதலுமே யாம்.

சன்மதி :—பல்லவராஜன் குடைக்கீழ் வாழும் நீர்........

வாகீசர் :—நிறுத்தும். மேலே பாரும் ஆகாசக்குடையை. எம்பிரான் அஷ்டமூர்த்தங்களில் அது ஒன்று. அந்த விண் குடைக் கீழ் நான் உள்ளேன். வேறு எந்த வெண்குடைக் கீழும் அன்று. மேலே யிருக்கும் அருட்குடை யில்லாமல், உமது அரசன் வாழ முடி யுமா? உலகம் வாழ முடியுமா? ஐய, கதிரும், காற்றும் மழையும் இல்லாமல் உலகம் வாழுமா, உயிர் வாழுமா?

உமது அரசனும் நீரும் வாழ முடியுமா? பஞ்சபூதங் களும், இரு சுடர்களும், வேள்வி முதல்வனும் இறை வனுக்கு எட்டு உருவங்கள் ஆவன. அவற்றுள் நீர் செருக்காடும் அரசன் நிலம் எவ்வளவு? வான் பொழிந்து, பூமி விளைந்து உயிர்கள் செழிக்கின்றன. இத்தொழிலெல்லாம் செய்வது திருவருள். அவ்வரு ளுக்குத் தலைவனான இறைவனே எமது அரசன். அவ னடியைப்பற்றி வாழும் அடியாருக்கு, இன்றிருந்து நாளைச் செல்லும் மண்ணரசால் என்ன ஆகும்? சிவ னடி பற்றி, அவன் பணி புரியும் திருத்தொண்டருக்கு, ஆடம்பரக் கூத்தாடும் ஒரு சிறு மண்ணரசன் முன்பு என்ன வேலை?

வாகீசர் :—எம்மரசன் முன்னிலையில் உமக்கொரு காரியம் உள்ளது.

வாகீசர் :—ஐய, ஆடுவோர், பாடுவோர், முகமன் கூறு வோர், சலுகை வேண்டுவோர், பரிசில் வேண்டுவோர் ....இவருக்கு மண்ணரசன் முன்னே காரியம் உண்டு. எமக்கு அவனால் பெறத்தக்கது யாதும் இல்லையே. எமது உடை ஒரு கோவணம். எமது அணி திருநீறு, உருத்திராக்ஷம். எமது உண்டி **அவன்** பிரசாதம். எமது திருமாளிகை **அவன்** திருவடியாம். எமது தொழில் **அவனை** அன்பு செய்வதாம். எமது இன்பம் **அவனருட்** பெருக்கேயாம். இந்த இன்பத்தின் முன், உமது அரசச் சுக போகங்கள் கால்தூசி பெறா. ஐய, அமுத முண்போர் கள்ளை விரும்புவரோ? கற்பகக் கனி யுண்போர் கற்றாழையை விரும்புவரோ? பொன் மேருடையார் பரிசிலுக் கலைவரோ? சிவனடி பற்றி னோர் எவனடி பற்றுவர்?

சன்மதி :—தங்கள் மேல் ஒரு குற்றம் உள்ளது. தங்களை விசாரணை செய்ய அரசன் அழைத்து வரச் சொன்னார்.

வாகீசர் :—தன் குற்றம் பிறர் குற்றமாகக் காண்கிறது! யாம் யாருக்கும் எக்குற்றமும் செய்தோமல்லோம். இப்போது ஒரு குற்றம் செய்கிறோம். அதாவது எப்போதும் இறைவனை வழுத்தும் நாவால் இப்படி ஒரு மண்ணரசன் பேச்செடுப்பதே குற்றம். அவன் கட்டளையை நாம் பணிய முடியாதது உமக்குக் குற்றமாகத் தோன்றலாம். அதனால் வருவதை நாம் பொறுக்கிறோம். ஆனால் இறைவனைத் தவிர வேறு யாரையும் அரசனாகக் கொள்ளோம். அவன் அருட்குடை நிழல் தவிர வேறெவர் குடைநிழலிலும் ஒதுங்கோம். அவன் பெருமையைத் தவிர வேறெவர் பெருமையும் எமக்குப் பொருட்டல்ல. அவனடி தவிர வேறெவர்க்கும் தாழோம்........இந்த அன்புறுதி குற்றமானல், அக்குற்றத்தை வைராக்கியமாகச் செய்து மகிழ்வோம். அதனால் என்ன வந்தாலும் பொருட்டில்லை.

சன்மதி :—ஐய, அதிகம் பேசவேண்டா. தாங்கள் பல்லவ ராஜன் குடி.

வாகீசர் :—நாம் யார்க்கும் குடி யல்லோம்.

சன்மதி :—இப்படிப் பேசினல் இடர்ப்படுவீர். துன்பம் வரும் கவனம்........

வாகீசர் :—இடர்ப்படோம். எந்நாளும் துன்பமில்லை.

சன்மதி :—மீண்டும் சொல்லுகிறேன் நீர் எமது பல்லவ ராஜன் கீழ் உள்ள குடிகளில் ஒருவரே........வாரும்.

நாமார்க்குங் குடி யல்லோம்; நமனை அஞ்சோம்!
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை யில்லோம்!
ஏமாப்போம்! பிணியறியோம்; பணிவோ மல்லோம்!
இன்பமே யெந்நாளுந் துன்பமில்லை!
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரனற் சங்க வெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே!

சிவனடியார்க்குச் சிவனே இறைவன்! ஆருயிர்கள் அவன் குடிகளே யாவர். அஞ்செழுத்தாளர் எதற்கும் அஞ்சார்.

சன்மதி:—எம் மன்னன் ஏவலைத் தாங்கள் மறுத்த லாகாது.

வாகீசர்:—

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்!
ஆவாவென் றெமை யாள்வான் அமரர் நாதன்
அயனொடு மாற் கறிவரிய அனலாய் நீண்ட
தேவாதி தேவன் சிவனென் சிந்தை
சேர்ந்திருந்தான்; தென் றிசைக்கோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய் கென்றாலுங்
குணமாகக் கொள்ளோம் எண் குணத்துளோமே!

சிவநேசன் :—திருச்சிற்றம்பலம்!

சன்மதி :—அடிகளே, தயவு செய்க; எமது கட்டளை நிறைவேறத்தான் வேண்டும். எம்முயிரை காப்பாற்றுக! அரசன் ஆணை கடுமையானது. அன்பு கூர்ந்து புறப்படுங்கள்! தங்கள் சமாதானங்களைச் சமூகத்திற் சொல்லிக் கொள்ளலாம். நாங்கள் ஊழியரே.

**வாகீசர்** :—சிவனே, நீ எங்கு முள்ளாய்! எங்கிருப்பினும் உனது திருவடி நிழலே! அடியார்களே! சென்று லென்ன?

**சிவபாதம்** :—அந்தோ! தீங்கு நேர்ந்தால்?

**வாகீசர்** :—அச்சமெதற்கு? இவ்வுயிர் உடல் மனம் எல்லாம் இறைவன் உடைமையாம். எங்கும் சிவன் துணை யுண்டு!

அங்கத்தை மண்ணுக் காக்கி, ஆர்வத்தை உனக்கே தந்து,
பங்கத்தைப் போக மாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா, சாதனுள் நாயே னுன்னை
யெங்குற்று யென்ற போதாஇங்குற்றேன் என் கண்டாயே!

மேலும், என்சமயம் என்னை வளர்த்த சமயம், எனது தமிழ்நாட்டுச் சமயம் சைவம்; அதை அனுட்டிக்க எனக்கு உரிமை யுண்டு. அவரவர் பிறவிச் சமயத்தைக் கற்று நிற்க உரிமை யுண்டு என்று அரசன் முன்னே எடுத்துரைப்பது என் கடமையாகும். திருவருள் தூண்டுகிறது. எதுவரி னும் இறைவன் செயல்!

**சன்மதி** :—அடிகளே! அருள் புரிய வேண்டும்.

**வாகீசர்** :—அடியார்களே! யான் மீளுமட்டும் இவ்வுழ வாரப் பணியைச் செய்யுங்கள்! சிவனையே பற்றுக் கோடாகக் கொண்டிருங்கள்! எவ்விதத் தீமையும் அணுகாது!

திருவே, யென் செல்வமே, தேனே, வானோர்
செழுஞ்சுடரே! செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவே, யென் னுறவே, யென் ஊனே, ஊனின்
உள்ளமே, உள்ளத்தின் உள்ளே நின்ற

கருவே, யென் கற்பகமே, கண்ணே, கண்ணிற்
கருமணியே, மணியாடு பாவாய் காவாய்!
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே!

எனக்கு வரும் தீமைகளுக்கு எம்பிரான் உளன்.

நமச்சிவாய! நமச்சிவாய!

[சன்மதி, வாகீசர் செல்லுதல்]

அடியார் :—வாகீசர் நீடூழி வாழ்க! சிவனருள் வெல்க! அடியார் பெருமை விளங்குக!

அரனை யுள்குவீர், பிரம னூருளெம்
பரனை யேமனம், பரவி உய்ம்மினே!
நாத னென்பிர்காள், காத லொண்புகல்
ஆதிபாதமே ஓதி உய்ம்மினே!

[வருதல் தண்டாயுதம் நடனமாடிக்கொண்டே]

தண்டாயுதம் :—சாப்பாடு தயார்....எங்கே அடியார்?

சிவநேசன் :—பல்லவராஜன் மந்திரியுடன் சென்றார்....

தண்டாயுதம் :—ராஜா மகேசுர பூஜை செய்கிறாரா என்ன?

சிவநேசன் :—இல்லை தண்டாயுதம், ஏதோ சூழ்ச்சி நடக்கிறது. நமது நாவரசர் நலமுற இறைவனை வழுத்துவோம்.

தண்டாயுதம் :—பயித்தியக்காரரா யிருக்கிறீரே; அப்படி நமது அரசரை அந்த அரசனிடம் அனுப்பலாமா? நான் போய் இழுத்து வருகிறேன்....ஹர ஹர மஹா தேவ!

[தண்டாயுதம் ஓடுதல்]

சிவநேசன் :—எல்லாம் சிவன் செயல்....அடியாரை அரன் காப்பாற்றுக! [திரை விழுதல்]

## காட்சி : 6.

[பல்லவராஜன் கொலுவிருக்கை. துன்மதி, சதிசேனன், அதிகாயன் வீற்றிருக்கின்றனர்.]

பல்லவன் :—துன்மதி, இன்னுமேன் நமது ஆட்கள் வரவில்லை?

துன்மதி:—அங்கே எதிரிகள் என்ன வாது செய்கின்றனரோ?

பல்லவன் :—நாம் செய்த முடிவைத் துணிந்து நிறைவேற்ற வேண்டும்.

சதிசேனன் :—அதற்குத் தடையா! செங்கோல் தங்கள் கையிலிருக்கையில், தாங்கள் எங்கள் கையாயிருக்கையில், எதையும்செய்ய வல்லோம்! அவனுக்குச் சரியான பாடங் கற்பிக்க வேண்டும்.

[திரைக்குப் பின்னே]

அப்பன் நீ! அம்மை நீ! ஐயனும் நீ,
அன்புடைய மாமனும் மாமியும் நீ,
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ,
ஒரு குலமுஞ் சுற்றமும் ஓருரும் நீ,

துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ,
துணையாயென் நெஞ்சந் துறப்பிப்பாய் நீ,
இப்பொன் நீ, இம்மணி நீ, ; யிம்முத்து நீ,
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே!

பல்லவன் :—இனிய பாட்டு! அவனே போலும்.

[குண்டன், முண்டன் வாகீசரைத் தூக்கிப் பாய்ந்து வருதல்]

முண்டன், குண்டன்:—ஒரே தூக்! ஒரே தூக்! இதுதான் நம்ப மந்திரம். மகா ராஜா இதோ ஆசாமி!

பல்லவன்:—நல்ல காரியம் செய்தீர்கள். சன்மானம் பெற்றுக்கொள்ளுங்கள்.

இருவரும்:—கும்பிடுறோம் மகா ராஜா! (செல்லல்]

வாகீசர்:—

[ சிவ சிந்தையுடன் வணங்கி நின்று, ]

பண்டு செய்த பழவினையின் பயன்,
கண்டு கண்டு களித்திகாண் நெஞ்சமே!
வண்டு லாமலர்ச் செஞ்சடை யேகம்பன்
தொண்ட னாய்த்திரி யாய்துயர் தீரவே!

துன்மதி:—தருமசேனா! இது அரச சமூகம்! கண் தெரியவில்லையோ?

வாகீசர்:—

பண்ணில் ஓசை, பழத்தினில் இன்சுவை,
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்;
வண்ண மில்லி, வடிவுருவே றுயவன்,
கண்ணில் உண்மணி கச்சியே கம்பனே!

**அதிகாய்ன்:**—பாட்டை நிறுத்து, இதோபார்!

[ கையைப்பிடித்து இழுக்கிருன். வாசீகர் சுற்றி நோக்குகிருர். ]

**சதிசேனன்:**—என்ன மிரட்டல்! மகராஜா இவனை விசாரிக் கட்டும். அடே, வணக்கமாய் நில்!

**பல்லவன்:**—தருமசேனு! இதோபார்! இதென்ன வேடம்! என்ன பூச்சு! உனக்கு எவ்வளவு உயர்ந்த பதவி கொடுத்திருந்தோம். எல்லாம் விடுத்து இப்படிச் சாம் பலாண்டியாவது நலமா,பொருத்தமா? இக்கோலத்தை நீக்கு. அருகனை நினைந்துருகு. உனக்கு மீண்டும் பதவி தருவோம்.

**வாகீசர்:**—அரச, அருகனை யான் இகழவில்லை. சிவனைப் போற்றுகிறேன். அவனுக்கும் அவன் அடியார்க்கும் வணக்கம்! எம்மதத்திற்கும் யான் எதிர் செய்யவில்லை; அவரவர்நம்பியபடி இறைவனை வணங்கும் சுதந்திரமே வேண்டுகிறேன். நான் சிவனை அன்பு செய்கிறேன்.

சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து,
தரணியொடு வானுளத் தருவரேனும்,
மங்குவார் அவர் செல்வம் மதிப்போ மல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்லராகில்.
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,
கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவு ளாரே!

**சதிசேனன்:**—அரஹந்த அரஹந்த! ஆ! இதுகேட்டு முட்டு.

[ காதை மூடிக்கொள்ளல் ]

மன்னவ! அஹிம்சையை விரதமாகப் பூண்ட தமது தூய முன்னிலையில், ஆவுரித்துத் தின்பதைச் சொல்லும் நாவை அறுத்தால் என்ன?

பல்லவன்:—தருமசேனு, முன்னே தத்வார்த்தங்களே உபதேசஞ்செய்தாய், கேட்டோம்; இப்போது நீ மொழிவது அத்தனையும் எமக்கு விரோதம். எம்மைச் சிறுமை செய்தாய்;ஏமாற்றினுய்! பொய்க் கோலம் பூண்டாய்! போலித் தொழில் புரிந்தாய்!

சதிசேனன்:—இந்தத் தொழிலில் எத்தனை நிமிஷம்!

வாகீசர்:—ஐய, வாழ்வு நீரோட்டம் போலும்; அது இறைவனைப் பாடி இறைவனுக்கே திருக்குட முழுக்காகுக! வாழ்வைப் போலி யொழுக்கங்களால் வீணுக்க வேண்டா.

திருநாமம் அஞ்செழுத்தும் செப்பா ராகில்,
தீவண்ணர் திறமொருகாற் பேசாராகில்,
ஒருகாலுந் திருக்கோயில் சூழா ராகில்,
உண்பதன்முன் மலர் பறித்திட் டுண்ணு ராகில்,
அருநோய்கள் கெட வெண்ணீ றணியா ராகில்,
அளியற்ருர் பிறந்தவா றேதோ வென்னில்,
பெரு நோய்கள் மிக நலியப் பெயர்த்துஞ் செத்துப்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்ருரே!

சதிசேனன்:—என்ன அவச்சொல் அரச சமூகத்தில்! இறக்கின்ருர். யார்? இதோ பார்ப்போம்.

[மன்னனுக்குக் குறிப்புக் காட்டல்]

பல்லவன்:—இனிப் பொறுக்கோம்! உனக்குப் பித்தேறிவிட்டது.

வாகீசர்:—ஆம். அத்தன் பித்தன் அடியேன்!

பல்லவன்:—அத்தன் வீரட்டானத்தில்; இப்போது நீ என் கையிலிருக்கிறாய்!

வாகீசர்:—எவர் கையிலும் யானில்லை; எதற்கும் அஞ்சாமல், இறைவன் அஞ்சலிக்கையில் என்னையீந்துள்ளேன்.

பல்லவன்:—என் வாளுக்கும் அஞ்சாயோ? (வாளை உருவி)

வாகீசர்:—இவ்வாழ்வுக்கு அச்சமில்லை; வாளுக்கும், கோளுக்கும், தோளுக்கும், பாழுக்கும் அஞ்சேன்: அரன் தாளுக்கே அஞ்சுவேன்!

பல்லவன்:—இக் கொழுத்த நாக்கை அறுத்தால்?

வாகீசர்:—என் கரத்தால் சிவனைப் பூசிப்பேன்!

பல்லவன்:—கைகளை யறுத்தால்!

வாகீசர்:—எனது காலால் காலகண்டன் கோயிலைத் திருவலம் வருவேன்!

பல்லவன்:—அக் கால்களையும் தடிந்தால்!

வாகீசர்:—என் முண்டத்தால் சிவன் கோயிலை அங்கப் பிரதட்சிணம் செய்வேன்.

பல்லவன்:—உன் முதுகைப் பிளந்தால்........

வாகீசர்:—என் உள்ளத்தால் அவனை உண்மையாக வணங்குவேன்!

பல்லவன்:—உன் கழுத்தை அறுத்தால்!

வாகீசர்;—கழுத்தை யறுத்தால் தூலவுடல் வீழும்! பிறகு எனது சூக்ஷ்ம சரீரத்தால் சிவனை வழிபடுவேன். அன்பர்காள், பரம்பொருள் அத்துவாதீதன். மந்திரம், வர்ணம், பதம், புவனம், தத்துவம், கலை என்பன ஆறு அத்துவாக்கள். தத்துவம் முப்பத்தாறுகும். பூதங்கள், தன்மாத்திரைகள், அறிவுறுப்பு, செயலுறுப்பு இவை ஐந்தைந்து சேர்த்து இருபது; உட்கரணம் நான்கு. இருபத்தைந்தாவது தத்துவம் புருஷன்; பின்னே இராகம், வித்தை, நியதி, காலம், கலை, அசுத்தமாயை, சுத்தவித்தை, ஈசுரத்வம், சதாக்கியத்துவம், சத்தி தத்துவம், சிவதத்துவம் ஆகிய தத்துவங்களில் தாங்கள் சிதைப்பதாகக் கூறும் இவ்வூனுடல் ஐம்பூதக் கூடு. இது அழியும்; அழிக! இதில் என்றும் அழியாதுள்ள ஆன்மா, இறைவனடியைப் புல்லி நிற்கிறது. அதுவே இதன் வாழ்வு, இன்பம் எல்லாம்.

சதிசேனன்:—போதும்; தத்துவப் பித்தா! நீற்றை யழி!

வாகீசர்:—நீறு, வீறு! சிவப்பேறு! ஆதலால் யான் அணிந்தவாறு! எனது சமயச் சின்னத்தை யானேன் அழிக்க வேண்டும்?

பல்லவன்;—நாங்கள் சந்தனங் குங்கும மிடுகிறோம்; அவ்வாறு செய்!

வாகீசர்:—எமக்கு அவை வெறுப்பில்லை. நீறு சிவம்; குங்குமம் சக்தி, சந்தனம் சிவ மணம்; எல்லாம் எமது சர்வ சமரச மதத்திற்கு உடன்பாடாம்.

பல்லவன்:—எனது ஆணை! எதிர் பேசாதே! நீற்றை யழி!

வாகீசர்:—சமய சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டுமென்பது எனக்குச் சிவன் ஆணை. அதற்கே இங்கே வந்தேன்.

பல்லவன்:—நீற்றை யழி; இன்றேல் உன்னையே நீற்றி விடுவேன்! அச்சமில்லையா! உயிர் போய்விடும்! இதோ என் ஆணை பிறக்கப் போகிறது! மல்லர்காள்!

குண்டன்:—ஹா, ஒரேதூக்! இதோ!

பல்லவன்:—என்னை அஞ்சு! எனது ஆணை பொல்லாது.

வாகீசர்:—

வானம் துளங்கிலென்? மண்கம்ப
மாகிலென்? மால் வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென்? தண் கடலும்
மீனம் படிலென்? விரிசுடர்
வீழிலென்? வேலை நஞ்சுண்(டு)
ஊனமொன் றில்லா ஒருவனுக்
காட்பட்ட உத்த மர்க்கே!

அஞ்சாதே என்று அரன் ஆணையிடுகிறான்.

[சதிசேனன் மன்னனை நோக்க, மன்னன் துன்மதியை நோக்க அவன் மல்லரை விழிக்கிறான்]

மல்லர்:—ஹா, ஹூம் தூக்! ஒரேதூக்!

[வாகீசரை எடுத் தேகுகின்றனர்]

பல்லவன்:—என்ன துணிவு! என்ன வீரம், அஞ்சாமை! பசுப் போலத் தருமோபதேசஞ் செய்துகொண்டிருந்தவனுக்கு எவ்வளவு துணிவு பிறந்தது!

துன்மதி:—மஹாராஜ் இவனை உயிருடன் விட்டால் நமக்குக் கேடு நேரிடும்.

பல்லவன்:—இந்த நீற்றறைக்குத் தப்புவானே? அவன் நீற்றறையில் வருந்தும் கோலத்தைக் காண்போம்.

[ அனைவரும் செல்லல். ]

## காட்சி 7.

[ பல்லவன், தனித்து, துன்மதியுடன் பேசுகிறான்; சதிசேனனும் பக்கத்தில் இருக்கிறான் ]

பல்லவன்:—துன்மதி! இன்று அவனை நீற்றறையிலிட்டு எத்தனை நாட்கள் ஆயின?

துன்மதி:—ஏழு நாட்கள்.

பல்லவன்:—இதற்குள் நீறாகியிருப்பானே?

துன்மதி:—இருக்கலாம்.

பல்லவன்:—அதற்கும் தப்புவானோ?

துன்மதி:—தப்பினாலும் தப்பலாம்.

பல்லவன்:—எப்படி?

துன்மதி:—மந்திரங்கற்ற மாயாவி!

பல்லவன்:—அப்படித் தப்பினால் பிறகு அவனை என்ன செய்யலாம்!

துன்மதி:—மஹாராஜா சித்தம் போலச் செய்யலாம்!

பல்லவன்:—அந்தோ! எனக்கொன்றுந் தோன்ற வில்லையே! அவன் துணிவு என் மனதை நடுக்குகிறதே!

சதிசேனன்:—எல்லாம் மந்திரம் செய்யும்வேலை மஹாராஜா.

பல்லவன்:—நீற்றறைக்குந் தப்பினுல் என்ன செய்யலாம்?

சதிசேனன்:—அவ்வளவு துணிந்த நெஞ்சனை, நஞ்சு என்ன செய்கிறதென்று பார்ப்போம். நஞ்சு கலந்த பாலமுதை ஊட்டுவோம்.

பல்லவன்:—துன்மதி, இது சரியா?

துன்மதி:—அதுவே சரி.

பல்லவன்:—அதற்கும் தப்புவானே?

துன்மதி:—தப்பினுலுந் தப்புவான்.

பல்லவன்:—என்?

துன்மதி:—மாயாவி!

பல்லவன்:—பார்ப்போம்!

சதிசேனன்:—மஹாராஜ், வஞ்சித்தவன் நஞ்சுண்டிறக்கட்டும்!

பல்லவன்:—நீற்றறையைப் பார்க்கச் சென்ற மல்லர் என் இன்னும் வரவில்லை?

[மல்லர் வருதல்]

குண்டன்:—மகராசாஅஅஅ!

பல்லவன்:—என்ன? பகைவன் சாம்பலானுனு?

குண்டன்:—சாம்பலா? ஊறின மொச்சைக் கொட்டை மாதிரி உதிச்சிருக்கான்! மேனி பள பளா என்குது. பாட்டு, பாட்டு, பாட்டு! அப்படிப் பாட்டுப் பாடுகி ருன்!

பல்லவன்:—என்ன வியப்பு! எங்கே அவன்?

[முண்டன் வாகீசரைத் தூக்கி வருதல்.]

குண்டன்:—ஒரே தூக்! மகராசா பாருங்கள்! இவன் மாயத்தை!

[எல்லாரும் வியத்தல்]

பல்லவன்:—இவன் நீருவானென் றிருந்தோம்! ஆளே வேரு கக் காண்கிருனே! மலர்முகம், புன்னகை, கனல் விழி, சிறிதும் கவலேயற்ற பார்வை—ஆ! இவன் பொலிவு என் புகழை உண்பது போலிருக்கிறதே! அடா! நீற் றறைக்கு எப்படித் தப்பினுய்! எந்த மந்திரத்தால்?

வாகீசர்:—சிவன் திறத்தால்!

பல்லவன்:—நெருப்புச் சூழ்ந்த நீற்றறை எப்படி யிருந் தது? அது சுடவில்லேயா?

வாகீசர்:—

மாசில் வீணேயும் மாலே மதியமும்,
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணேயடி நீழலே!

அனலேந்திய தணல் வண்ணனே நினேந்தேன்; நீற் றறை குளிர்ந்தது. நீற்றறையில் எழும் கனல் மாலே மதி போன்றது. அது வேகும் ஓசை யாழொலி போன்றது;

அதன் வெப்பம் தென்றலும், வசந்தமும், வண்டுகள் பாடும் பொய்கையும் போன்றன. அதன் அழல் எம்பெருமான் திருவடி நிழல் போன்றது; துன்பம் இன்பமானது; வெம்மை தண்மையானது; அவம் சிவமானது....

பல்லவன்:—அடா உண்மை சொல்! ஏதோ ஒரு வித்தை கற்று இப்படித் தப்பினாய்; அல்லவா?

வாகீசர்:—

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்,
நமச்சி வாயவே நானறி விச்சையும்,
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே;
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே!

சதிசேனன்:—மந்திரத்தை உள்ளே உருப்போட்டு வெளிக்கு எதையோ பிதற்றுகிறாய்; உடனே திருந்து! இன்றேல், அரசன் வாளுக்கு விருந்தாவாய். எமது சினத்திற்கு இரையாவாய்.

வாகீசர்:—

பூக்கை கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாம நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி யலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே!

பல்லவன்:—என்னைப் பணி; நான்சொல்லும் சமயத்தைச் சேர்; என் மனப்படி வழிபடு.

வாகீசர்:—ஐய, நின்சமயத்தை நீ போற்று; அதை நான் ஆட்சேபிக்கவில்லை. என் சமயத்தை நான் போற்று வதைத் தடுக்காதே; ஒவ்வொன்றிற்கும் வழியுள்

ளது; என் உயிர் சிவநெறி பற்றிச் செல்கிறது. என்னுள்ளே சிவன் இடம்கொண்டான். அவனை மறந்து வேறு போலிப் பூசை புரியேன்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீ ருங் கண்டு
நக்கு நிற்ப ரவர்தம்மை நாடியே!

பல்லவன்:—நினது கடவுளைக் காட்டு பார்ப்போம். அவன் எப்படி யிருப்பான்? சொல்.

வாகீசர்:—அன்பரே, அவனை ஊனக் கண்ணால் காணமுடியாது. அவன் உயிர்க் குயிரானவன்!

விறகில் தீயினன்; பாலிற் படுநெய்போல்,
மறைய நின்றுளன்; மாமணிச் சோதியான்;
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே!

ஈசன் தனதருட் சக்தியால் சூரியன் கதிர்போல் எங்கும் பரவியுள்ளான்; ஒவ்வோ ருள்ளத்தும் அவனுள்ளான்; விறகில் தீ போலும், பாலில் நெய்போலும், மணியிற் சோதி போலும் ஆன்மாக்களுள் அவன் மறைந்துளான். ஆணவம், மாயை கன்மமாகிய அழுக்கால் மூடுண்ட மனம் அவனை உணராது. அன்பினால் உணர்வோங்கினால், அதனால் அவன் அருள் வடிவாக முன்னின்று நம்மை யாட்கொள்வான்! அவனே உலகிற் கிறைவன். அவனே சக்தி! சிவன், அவனே திருநீலகண்டன்!

பல்லவன்:—நீலகண்டனா?

வாகீசர்:—ஆம்! அன்று பாற்கடலிற் கொதித்து எழுந்த வெவ்விடத்தைப் பிறர் உய்யத் தானே உண்டு கண்டங் கறுத்தான்!

பல்லவன்:—ஆனால் அவன் அடியார்களும் விட முண்டால் அவனைப் போலவே பிழைத்திருப்பரோ?

வாகீசர்:—திரு நீலகண்டனை உறுதியாய் நம்பினால் விடமென் செய்யும்?

சதிசேனன்:—ஆனால் பார்ப்போமா?

துன்மதி:—மஹாராஜ், காரியம் நடக்கட்டும்.

பல்லவன்:—மல்லர்காள், ஊம் (இரகசியமாய்)இவனுக்கு.... பால் அமுதில் நஞ்சை........ஊம்........தெரியுமா?

மல்லர்:—மஹாராஜா சோற்றிற்கு வஞ்சனை யில்லாது பாடுபடுகிறோம்.

வாகீசர்:—

நடலை வாழ்வுகொண் டென்செய்திர் நாணிலீர்;
சுடலை சேர்வது சொற்பிர மாணமே;
கடலி னஞ்சமு துண்டவர் கைவிட்டால்,
உடலினார் கிடந்து ஊர்முனி பண்டமே.

திருநீலகண்டம்! திருநீலகண்டம்!

குண்டன்:—ஒரே தூக்! எமகண்டம்.

[வாகீசரை வாரிச்செல்கிறான்]

[எல்லோரும் செல்லல்]

(திரை விழுதல்)

# காட்சி 8.

[மல்லர்கள் வாகீசருக்கு நஞ்சமு தளிக்கின்றனர்.]

மல்லர்கள் :—பாலும் சோறும், வெள்ளிக் கிண்ணத்தில்; அடியார் வயிறு புடைக்க அள்ளட்டும்.

வாகீசர் :—அன்பர்காள், அறிவேன் சூட்சியை! இதனால் உம்மை எள்ளளவும் வெறுக்கப் போவதில்லை! இந்த அடக்கு முறைகள், எனது அருளன்பை அடக்குமா? எனது உள்ளமாய் நிற்கும் திருநீலகண்டனே! காலனை உதைத்தவனே, பாற்கடல் விடமுண்ட பரமனே, நினது அருளை இதிற் கலந் துண்கின்றேன்! உன் இச்சை இருந்தால் உடல் பிழைக்கட்டும். இன்றேல் விடத்தால் உடல் பிரிக! இவ்வுயிர் நின்னுயிர். நீ யின்றேல் உயிர்ப்பில்லை! கடல்விட முண்டவனே, இந் நச்சமுதை நின் பெயரால் நல்லமுதாக்கி உண்கிறேன். நின்பெருமை விளங்குக! நமச்சிவாய! நமச்சிவாய!

[அத்தனையும் உண்கிறார்.]

குண்டன் :—செத்தாய் நீ! அது பொல்லா நஞ்சு. மேலுங் கீழும் பிச்சிக்கும்! மயக்கம் வரும்! தலை சுற்றும்! ஆள் அத்தோடே எமலோகம்.

முண்டன் :—இன்னும் ஒரு விநாடியிலே ஆள் பம்பரம் போலச் சுற்றிக் கீழே விழுகிறான் பார். மகராஜாவை அழைத்து வருவோம்.

[செல்கின்றனர்.]

வாகீசர் :—விடம் என்னைக் கொல்லவில்லை; திருவருள் விடத்தைக் கொன்றது. ஐந்தெழுத்து, விடத்தை அமுதாக்கியது. சிவானந்தம்! சிவானந்தம்!

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்,
நினைப்ப வர்மனம் கோயிலாய்க் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனோ?

[வருதல் : பல்லவன், துன்மதி, சதிசேனன்.]

பல்லவன் :—இத்தடவை அவன் இறந்தே யிருப்பான்; கொடிய விடமன்றோ! பார்ப்போம்.

[அணுகி நோக்கல்.]

என்னே வியப்பு! ஆலமுண்டவன் அயர்ந்து வீழ்வான்; இவன் ஏராளமான விடமுண்டு கூத்தாடுகின்றானே; என்ன ஆச்சரியம்! துன்மதி, அவனைப் பார்!

வாகீசர் :—பனைக்கை மும்மத................

[பரவசமாக நடமாடல்.]

சதிசேனன் :—எல்லாம் மந்திரம் மஹராஜ்! இவனை விடக் கூடாது. நாம் யோசித்ததை அடுத்தபடியாகச் செய்வோம்; இவன் மதத்தை மதயானையின் காலில் வைத்து நசுக்குவோம்.

பல்லவன் :—அந்தோ, என் தலை சுழல்கின்றதே! இவனுடைய இரகசியம் புலப்பட வில்லையே; என் செய்வேன்!

சதிசேனன் :—மதயானைக்குத் தப்பமாட்டான், மஹராஜ்; காலதாமதமானால் மந்திரம் உருவேறி விடும். பிறகு வலிமை பெறுவான். உடனே............

பல்லவன் :—ஏன் இப்படிக் கூத்தாடுகிறாய்? விடம்........ உன்னை வீழ்த்த வில்லையா?

வாகீசர் :—விடம் அமுதாகி என்னை வாழ்த்திற்று! எல்லாம் திருநீலகண்டன் செயல்!

பொடியார்க்குந் திருமேனிப் புனிதற்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர் நீங்க முன்னைவிடம் அமுதானாற்
படியார்க்கும் அறிவரிய பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுத மாவதுதான் அற்புதமோ?

அன்பர்காள், அடக்கு முறையால் அருள்திறத்தை வெல்ல முடியாது. சிவனருளைப் பணிமின்! சிவனே, சோற்றிலிருந்த நஞ்சை விலக்கியதுபோல் இவர் நெஞ்சி லுள்ள நஞ்சை விலக்கியருள்! தீவினை தீர்த்தருள்.

தாயு மாயெனக் கேதலை கண்ணுமாய்ப்
பேய னேனையும் ஆண்ட பெருந்தகை,
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனா ரென நம்வினை நாசமே!

[மல்லர் வருதல்.]

குண்டன் :—மஹராஜ், தயார்! சரியான வெறியேற்றியுள் ளோம்; மதயானை குமுறிக் கொண்டிருக்கிறது; சங்கிலியை அவிழ்த்து 'சூ' என்னு முன்னே ஆள் அப்பளாமாவான்.

துன்மதி :—மஹராஜ், கால தாமதம் வேண்டா.

பல்லவன் :—மல்லர்காள், இம்முறை இவன் பிழைத்தால் உம்மைத் தண்டிப்பேன்.

மல்லர் :—மஹராஜா, பிழைக்கமாட்டான் ; இதோ ஒரே தூக், தூக்!

[வாகீசரை வாரிச் செல்கின்றனர்.]

பல்லவன் :—நாம் சென்று அடுத்ததை யோசிப்போம்.

[எல்லாரும் செல்லல்.]

## காட்சி 9.

வாகீசர் :—அச்சத்தாலே ஆருயிர் சாவது ; அச்சத்தாலே அடிமையாவது; அச்சத்தாலே அல்லல் வருவது. அச்சம் வென்றோன் அனைத்தும் வென்றோனவன். அன்று பகைவர் ஏவிய யானையை உரித்தோய்! அடியேனைக் கொல்ல, இவர்கள் வெறி மத யானையை வீறிட் டேவினர்! நின்னடியார் அஞ்சார், வருந்தார். சிவாய நமவெனில் அபாயமில்லை.

[திரைக்குப்பின்னே பெருங்கூச்சல் கேட்கிறது. யானை வீறிட்டு வெறிகொண்டு வருகிறது.]

ஆ! இதோ வெறி யானை, சிவனே! ஊழியிடி போலக் குமுறி வருகிறதே!

இடியுற்றெழு மொலியிற்றிசை யிப முட்கிட அடியில்
படிபுக்கற நெளியப்படர் பவனக்கதி விசையில்
கடிதுற்றடு செயலிற்கிளர் கடலிற்படு கடையின்
முடிவிற்கன லென முற்சின முடுகிக்கடு கியதே!

[மல்லர்கள் வருதல்]

மல்லர்கள் :—ஹாஹாய் ! ஹாய் ! ஹா அ அய் !........ முட்டு, நசுக்கு, தொக்கு, மிதி, நொறுக்கு, தேய், பிசை, கொல் ! ஓடு யானை ! போ, முந்து !

[யானை வாகீசர் முன்னே நிற்கிறது.]

வாகீசர் :—கரியமலை போல் என் முன்னிற்கும் யானையே, நான் கரியுரித்துப் போர்த்தவன் அடியான். அகந்தையென்னும் மதத் திமிர் யானையைப் பிளந்தவன் ; அரனுக்கும் ஆருயிர்க்கும் அன்பு பூண்ட தொண்டன்; இதோ உன் முன் நிற்கின்றேன். உன்னை விநாயகராகவே எண்ணி அன்பு செய்கிறேன் ? இவ்வுடலை நீ நசுக்கினும், திருவடிபற்றிய ஆன்மாவை நீ நசுக்கவியலாது. உன்மூலம் உயிர்க்குயிராயுள்ள சிவபெருமான் சித்தம் நடக்கட்டும். வெறி மத யானையே, யான் உனக்கு அஞ்சாது இதோ நிற்கிறேன். இதோ என் சித்தத்தை எம் பெருமான் சிந்தனையில் வைத்து நிற்கிறேன். அச்சமில்லை, அச்சமில்லை.........

சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்த்திங்கட்
[சூளாமணியும்
வண்ண வுரிவை யுடையும், வளரும் பவள நிறமும்,
அண்ண லரண்முர ணேறு மகலம் வளாய வரவும்,
திண்ணென் கெடிலப் புனலும் உடையா ரொருவர்
[தமர்நாம்....

அஞ்சுவ தியாதொன்றுமில்லை ! அஞ்சவருவதுமில்லை !
வாவா ! கணபதிக் களிறே வாவா—சிவ சிவ ! சிவசிவ !

நரம்பெழு கைகள் பிடித்து, நங்கை நடுங்க மலையை
உரங்களெல்லாங்கொண் டெடுத்தான் ஒன்பது
[மொன்று மலற,

வரங்கள் கொடுத்தருள் செய்வான் வளர்பொழில்
[வீரட்டஞ் சூழ்ந்து,
நிரம்புகெடிலப்புனலு முடையா ரொருவர் தமர்நாம்

அஞ்சுவதி யாதொன்றுமில்லை! அஞ்சவருவது மில்லை! வாவா, களிறே! மனப்படி செய்; இதோ வீற்றிருக்கின்றேன்.

[யானை திகைத்து நின்று வாகீசரை வலம் வந்து பணிகிறது.]

மல்லர் :—அடா இதென்னடா! இங்கே வெறி பிடித்து வீறிட்ட மதயானை பாரடா! பசுப்போலே அவர் முன்னே நின்று வணங்குகிறது! தும்பிக்யைாலே தடவுது! அதோ பாரடா, அதைத் தடவிக் கொடுக்கிறான்.

குண்டன் :—அடே மந்திரம் போடுராண்டா! யானையை மயக்கி விட்டான்! அடா செத்தோம்! யானை இதோ வீறிட்டு நம்மேல் வருகிறதடா!

[யானை வீறிட்டு வெஞ்சினத்துடன் மல்லர் மீது வருதல்.
அரங்கைச் சுற்றிச் சுற்றி மக்கள் அலறி ஓடி வருதல்.]

முண்டன் :—அந்தோ செத்தோம்! யானையை நம்மேல் ஏவிவிட்டான்! அது ஜனங்களைத் தாக்கி மிதித்துக் கொன்று நகரை நாச மாக்குகிறதே! ஆத்தா ஆ! ஆ! ஐயையோ!

[விரைந்து வருதல் : பல்லவன், துன்மதி]

பல்லவன்:—ஆ, என் குடிகள் ஏனிப்படிப் பதறிக் கதறி ஓடுகின்றனர்?

[ஓடிவருதல் : குண்டன் முண்டன், சில ஜனங்கள்.]

குண்டன்:–ஆ, ஹ, ஹம்மா, ஆத்தா........மஹ்ஹராசா....

குண்டன்:–போச்சுது மஹ்ஹ்ராசா....ஊர் போச்சுது....

பல்லவன்:–நேர்ந்த தென்ன? யானை அவனைக் கொன்றதா?

குண்டன்:–ஐயோ ராசாவே யானைஎங்களைத்தான் விரட்டிக் கொன்றது........பாருங்கள் அது செய்யும் அட்டகாசத்தை... ஊர் அலறுதே.

[திரைக்குப் பின்னால் யானைமுழக்கம். ஜனங்கள் கூக்குரல்]

பல்லவன்:–அட மாயாவி....உம்....யானைக்கும் அவன் அஞ்சவில்லையா?

குண்டன்:–அச்சமா? என்னமோ "அஞ்சுவயதிலே" என்றொரு தில்லானாப் பாடினான் மகராசா. யானை அவனைக் கும்பிட்டு எங்களைத் துரத்தி மிதித்தது. செத்தேன் பிழைத்தேன் என்று நெடுந்தூரம் ஓடி மூச்சுத்திணற வந்தேன் மஹராசா....

பல்லவன்:—மந்திரி, இப்படியும் ஒரு அதிசயம் உண்டா?

துன்மதி:–எல்லாம் கஜவஸ்ய சிம்மகர்ஜன ஸ்ரீமந்திரம் செய்த வேலை மஹராஜா? இவனை இனிச் சும்மா விடலாகாது. நாலாவது காரியம் நடக்கட்டும். அடே குண்டா....

குண்டன் :—இதோ, எசமான்....

துன்மதி :—கற்றூணைப் பூட்டி, நடுக்கடலிலேகொண்டு போய்....தெரியுமா?

குண்டன் :—ஒரே தூக்!

பல்லவன்:—என்தலை சுழல்கின்றதே. என் சூழ்ச்சி வீணானதே. கடலுக்கும் தப்புவானோ?

துன்மதி:—கல்லிருக்கிறது மஹாராஜா!

பல்லவன்:—நீற்றறை தென்றலானது போலக் கல்லும் தெப்பமாகுமோ?

துன்மதி:—அப்படியாவது இயற்கை விதிக்கு விரோத மல்லவா? நடக்காது மஹாராஜா....

பல்லவன்:—ஐயோ, என்மனம் கலங்குகிறதே....இவன் மாயம் எனக்கு விளங்கவில்லையே....

எதுகுலகாம்போதி] [தாளம் சாப்பு

பல்லவி

தந்திரமோ....? சிவ....மந்திரமோ?—இவன்
சக்தியை யான் அறியேன்.... (தந்தி)

அனுபல்லவி

எந்திறம் பயனில்லை....இனியொரு திறனில்லை
சிந்திக்கச் சிந்திக்கச் சித்தங் கலங்குதையே (தந்தி)

சரணம்

நீற்றறை இளமணக் காற்றிசை யென்றனன்;
நீல கண்டன்பேர் சொல்லி ஆலத்தைத் தின்றனன்.
கூற்றெனும் வேழமும் கும்பிட நின்றனன்;
குரவையில் இட்டாலும் அரஹரா என்பானே....
(தந்தி)

மந்திரீ! ஏதோ பார்ப்போம்.

[திரைக்குப் பின்னல் யானை முழக்கம். ஜனங்கள் ஓடிவருதல்]

ஜனங்கள்:—ஹா மஹாராஜா...செத்தோம்.

பல்லவன்:—பயம் வேண்டாம் எனதருமைக் குடிகாள்! இதோ யானையை வீழ்த்துகிறேன். அந்த மாயாவியைக் கடலில் ஆழ்த்துகிறேன்....

[சினத்துடன் செல்லல்.]

## காட்சி 10.

[திருப்பாதிரிப்புலியூர்க் கடற்கரை: சிவபாதம், சிவநேசன், தண்டாயுதம், திலகவதி ஆகிய அன்பர் கூடிக் கடலை நோக்கி நிற்கின்றனர்.]

தண்டாயுதம்:—அப்ப, கடல்காற்று கண்ணைச் சுழற்றுதடா; 'நினைத்த விடந் தூங்கி நீட்டுவதும் எக்காலம்....'

(காலைநீட்டி மணலில் படுக்கிறான்)

சிவநேசன்:—தண்டாயுதசாமிக்கென்ன நித்திராதேவி பிடித்ததோ?

தண்டாயுதம்:—காஞ்சீவரம் இட்டலி இருபது போட்டுக் கடல் காற்றும் மேலேபட்டால்....பரம சிவம்!

சிவநேசன்:—இப்படித்தான் தின்று தூங்கி, நமது அடியாரைக் கவனியாமல் வந்து சேர்ந்தீர்.

தண்டாயுதம்:—அடிமைதானே உங்களுக்குச் செய்தி தெரிவித்தது....

சிவநேசன்:—ஆமாம் பத்துநாளைக்குப் பிறகா செய்தி தெரிவிப்பது? அடியாரைத் திருப்பிவருவதாகப் போனீரே, என்ன செய்தீர்?

தண்டாயுதம்:—அடிமை செய்ததைக் கேட்டுப் பிறகு கோபம் வந்தால் கோபிக்கட்டும். வீரட்டானத்திலே

எடுத்தஓட்டம், இடையிலே நாலைந்து மகேசுர பூசையைப் பார்த்துக்கொண்டு கட்டை, காஞ்சீவரத்தில் வந்துநின்றது. அடியார் அரண்மனையில் பாலுஞ்சோறும் சாப்பிடுவதாக சொன்னார்கள். 'அடியாரை விடுதலை செய்யுங்கள்; அடிமையிருக்கிறேன். எவ்வளவு பாலுஞ் சோறும் வேண்டுமானாலும் போடுங்கள்' என்று வாசலில் சபதங் கூறினேன். அதற்குள் பாலுஞ் சோறும் அடியார் தின்று தீர்த்துப் பந்தயம் வென்றதாகக் கேள்விப்பட்டேன். அதன் பிறகும் அடியாரை அவர்கள் விடவில்லை. உடனே அரசருடனே போட்டி போட்டு, நமதுஅடியாரை விடுவிக்க முற்பட்டேன். அடிமை, கத்திச்சண்டை, வாய்ச்சண்டை போட வரவில்லை. அதற்கு எத்தனையோ புலிகள் உண்டு. தண்ணீர் குடிக்காமல், மிளகாய்த் துவையலைத் தொட்டுக்கொண்டு, காஞ்சீவரம் இட்டலி சாப்பிடுவது. பல்லவராசா பத்துத்தின்றால், அடிமை முப்பது தின்பது. போட்டியில் அடிமை வென்றால் நாவரசரை விடுதலை செய்துவிட வேண்டும். தோற்றுப் போனாலோ, அடிமையை அரண்மனையில் வைத்துப் பாலுஞ்சோறும் போட்டு, அடியாரை வீரட்டானத்திற்கு அனுப்பிவிட வேண்டும்" என்று சபதம் கூறினேன்....

சிவநேசன்:—யாரிடம்?

தண்டாயுதம்:—அரண்மனை வாசலிலே தடியைப் பிடித்துக் கொண்டு "டேய், உள்ளே போகாதே" என்று என்னை ஒருவர் மிரட்டினார். அவரிடம் "கூப்பிடு உங்கள் ராசாவை,ஒருகை பார்க்கிறேன், காஞ்சீவரம்இட்டலி" என்று இப்படிச் சபதம் கூறினேன்.

சிவநேசன் :—அட பயித்தியமே....அடியாரை நீற்றறையில் இட்டதும், விடங்கொடுத்ததும், யானைக்காலில் நசுக்க முயன்றதும் உனக்குத் தெரியாமல் போயினவா ?

தண்டாயுதம் :—ஆமாம், ஊரெல்லாம் "ஐயோ, அப்பா நான் முந்தி, நீ முந்தி" என்று அலறியடித்து ஓடினார்கள். "எங்கே, மகேசுர பூசைக்கா ஓடுகிறீர்கள் ?" என்று கேட்டேன். அப்புறந்தான் செய்தி தெரிந்தது. யானை அடியாரை ஒன்றும் செய்யவில்லை. கல்லைக்கட்டிக் கடலிலே போடப் போகிறார்கள் என்று சொன்னார் கள். கடலில் குதித்து அடியாரைக் கொண்டு வருவ தென்று சென்றேன். மறுபடியும் ஒரு யோசனை வந் தது. பெரியாரைக் கேட்காமல் தனியே கடலில் விழ லாமா ? தங்களைப் போன்ற அடியாரையும் சேர்த் துக் கொண்டு விழுவோம் என்றுதான் ஓடிவந்தேன். நமது நாவரசர் கடலில் மூழ்கினால் நாமும் இரண்டு மணங்கு வயிற்றில் ஏற்றிக்கொண்டு விழுந்து விடு வது, இது தீர்மானமான பேச்சு....

சிவநேசன் :—ஆ, அப்படியும் நடந்தால், சிவனே ? சைவம் நிலைப்பதெப்படி ? அம்மா, சிவன் செயல் எப்படியோ?

திலகவதியார் :— (ஜபம் செய்து கொண்டே) அச்சமில்லை, அரன்காப்பான். அவன் பணிக்கு வந்த அடியாரைக் கைவிடமாட்டான்.

மோகனம்] [ஆதி தாளம்

பல்லவி

அன்பரைத் தீண்டிடுமோ—இடர்கள் அரன்
ஆணையைத் தாண்டிடுமோ ? (அன்ப)

அனுபல்லவி

உன்பரம் என்றபின் துன்பமுண் டாகுமோ?
இன்பனை அடைந்தவர் இதயமும் நோகுமோ? (அன்ப)

சரணம்

முல்லை முறுவ லினால் முப்புரம் எரித்தவன்....
முனிந்தவெங் கூற்றினைப் பணிந்திட வுதைத்தவன்
கல்லையும் தெப்பமாக்கி அல்லலைத் தீர்த்தருள்வான்....
கவலையில்லை ஓம் நம சிவாயவெனச் சிந்திப்போம்
(அன்ப)

தண்டாயுதம்:—ஆ அதோ, அதோ கல்மேலே படுத்து........

சிவநேசன்:—ஆம்....அதோ நமது நாவரசர்தாம்!

[கடலில் கல்லைப் புணையாக்கி நாவரசர் மிதந்து வருதல்]

என்ன வியப்பு!

அம்மா தாங்கள் சொல்லியபடியே நடந்தது. அடியார் இதோ அருகே வந்துவிட்டார்.

எல்லாரும்:—வாகீசர் வாழ்க!!

[வாகீசர் கரையோரத்தில் மிதக்கிறார், பாடுகிறார்.]

வாகீசர்:—

சொற்றுணை வேதியன், சோதி வானவன்,
பொற்றுணைத் திருந்தடி பொருந்திக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே!

[வாகீசர் கரைக்கு வருதல்; தண்டாயுதம், சிவநேசன், அன்பர் நீரில் இறங்கிக் கல்லை நீக்கி வாகீசரைக் கரையேற்றுகின்றனர்.]

எல்லாரும்:—வாகீசப்பெருமான் வாழ்க! திருநெறிச்சைவம் வெல்க! அடியாருக்குப் புதிய ஆடையணியுங்கள்....

[வாகீசர் புதிய ஆடையணிந்து திருநீறு பூசி நிற்றல்]

திலகவதி:—தம்பீ, நீ பட்ட இடர்களெல்லாம் சிவனருள் விளக்கமாயின.

சிவநேசன்:—ஆ! எப்படித்தான் கடலில் நீந்தி வந்தீரோ!

தண்டாயுதம்:—அந்தப்பாவி கொஞ்சங் கட்டுச்சோற்றை யாவது வைத்தானா?

வாகீசர்:—அன்பர்காள்! இறைவனை நம்புங்கள். அவன் புகழே கூறுங்கள். அவனிடம் ஒரேவரம் வேண்டுங் கள்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்; இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்செய் பாதிரிப் புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கைச் செஞ்சடைமேல் வைத்த
[தீவண்ணனே.

நேராக இனித் தோன்றாத்துணைநாதரைத் தெரிசிப்போம்.

[வாகீசர் முன் செல்லல்]
[அடியார்களெல்லாம் அவர்புகழைப்பாடிப் பின்னே வருகின்றனர்.]

சிவநேசன், சிவபாதம், திலகவதி முதலிய அன்பர்:—

இராகம்-நாதநாமக்கிரியை] [ஆதி தாளம்

["கோலு கோலேனகோலே" என்ற கோலாட்டப் பாட்டுப்போல பாடுக]

நமச்சிவாய வாழ்க—எங்கள் திரு
நாவுக் கரசர் வாழ்க....

அமுதினும் இனியசெந் தமிழ்மொழி வாழ்க!
அறநெறிச் சைவம் வாழ்க!

[எல்லாரும் செல்லல்.]

## காட்சி 11.

[தோன்றாத் துணைநாதர் சந்நிதி. தமிழ் மந்திரத்தாலேயே அர்ச்சனை நடக்கிறது.]

**எல்லாரும் :—**

மூவா நான்மறை முதல்வா போற்றி!
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி!
காவாய் கனகக் குன்றே போற்றி!
ஆவா வென்றனுக் கருளாய் போற்றி!
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி!
இடரைக் களையும் எந்தாய் போற்றி!
ஈச போற்றி! யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி!
அரைசே போற்றி அமுதே போற்றி!
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேத போற்றி! விமலா போற்றி!
ஆதி போற்றி! அறிவே போற்றி!
உடையாய் போற்றி உணர்வே போற்றி!
கடையேன் அடிமை கண்டாய் போற்றி!
ஐயா போற்றி அணுவே போற்றி!
சைவா போற்றி! தலைவா போற்றி!
தோழா போற்றி, துணைவா போற்றி!
வாழ்வே போற்றி, வைப்பே போற்றி!

உரையுணர் விறந்த ஒருவ போற்றி!
விரிகடல் உலகின் விளைவே போற்றி!
தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி!
புரம்பல வெரித்த புராண போற்றி!
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி!
போற்றி! போற்றி! புயங்கப் பெருமான்
போற்றி! போற்றி! புராண காரண
போற்றி! போற்றி! சய சய போற்றி!

[தீபாராதனை நடக்கிறது]

அன்பர் :—

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும்என்னெஞ்சினீங்காதான்தாள் [வாழ்க!
ஏகன் அநேகன் இறைவ னடிவாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே;

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்!
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்;
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே தேனார் அமுதே சிவபுரனே!
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க!
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க!
எய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க!

[நிவேதனம் செய்தல்]

எல்லாரும் :—(நாமாவளி பாடல்)

ஹர ஹர ஹர ஹர மஹா தேவசிவ
பார்வதிரமணா சதாசிவோம் ஹர.

[குருக்கள் முதலில் வாகீசருக்கு விபூதியீந்து பிறகு மற்றவருக்கு அளித்தல்]

அன்பர் :—சிவன்செயல் வெல்க! வாகீசர் நீடூழி வாழ்க! சாம்பசதாசிவ,சாம்பசதாசிவ,சாம்பசதாசிவ, சாம்பசிவோம் ஹர!

[எல்லோரும் சிவநாமம் முழக்கல்]

சிவநேசன் :—நாவிற் கரசே! நன்னெறி விளக்கே! அக் கொடியர் துயர்களை எப்படிப் பொறுத்தீர்! அருளும் அன்பும் நிறைந்த இத் திருக்கோலம் நீற்றறையிலும், வெறியானை முன்னும், கடலிலும் எப்படி அஞ்சாது நின்றது! பெரியோய் போற்றி! அரியோய் போற்றி!

சிவபாதம் :—அடிகாள்! இத்துணை யிடர்களை எத்துணை கொண்டு கடந்தீர்?

வாகீசர் :—

ஈன்றாளுமா யெனக் கெந்தையுமாய் உடன் [தோன்றினராய்
மூன்று யுலகம் படைத் துகந்தான் மனத்துள் ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்னடி யோங்க [ளுக்கே!

சிவபாதம் :—அடியாரே! தீயும், நஞ்சும், வெறியும்,கடலும் தங்கள் அன்பை அசைக்கவில்லை. அன்பின் அற்புதம் தங்களால் விளங்கியது.

வாகீசர் :—

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றேன்;உனதருளால்

திருவாய்ப் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்;
தருவாய் சிவகதி நீ பாதிரிப்புலியூர் அரனே!

எல்லாரும் :—திருச்சிற்றம்பலம்!

[கோயில் பூசகர் வாகீசருக்குத் திருமாலை யணிதல்]

எல்லாரும் :—சிவம் வாழ்க! சிவனடியார் வாழ்க! சிவனருள் விளங்குக!

வாகீசர் :—அன்பர்காள்! நடந்ததெல்லாம் சிவன் செயல். அடியார் மூலம் அவன் அருள் விளங்கிற்று. இவ்வுடலும், உயிரும் அவனுக்கே அடைக்கலம். அவற்றுள் இருந்து, உலகில் அவன் அன்பை விளக்குகிறான். அடியார்களே, இன்று அவன் நமது நாட்டிற்கு ஒரு புதிய உண்மையை விளக்கியிருக்கிறான். அதுவே அன்பின் உண்மை. பகைவனைப் பகையாமல், பகையை வெல்லும் அருளுண்மை. முதலில் நமது உடல்பொருள் ஆவி அனைத்தையும் இறைவனுக்கே அர்ப்பணமாக்க வேண்டும். அந்த இறையன்பு தீவிரப்பட்டால், அவனருளே நம்மை நடத்தும். பிறகு அவனருள் உலகில் விளங்கும் பணிகளையே செய்யவேண்டும். அப்பணிகளிடையே வரும் பலவகை இடர்களுக்கும் அஞ்சக் கூடாது. வாய்மை, தூய்மை, அன்பு, அஞ்சாமை, பொறுமை இவையே திருவருள் வெற்றியின் ஐந்துயிர்கள் ஆகும். பல்லவன் ஏன் இடர்செய்தான்? அவன் இயல்பில் கொடியவன் அல்லன். அவன் அரிய நீதி மன்னன். அவன் புத்தியைத் துன்மதி மயக்கினான். அத்துன்மதியின் சூழ்ச்சிகளைத் திருவருள் முறியடித்தது. யாதொரு கடுஞ்சொல்லும் இன்றி, எள்ளளவும் பகையுணர்வின்றி, முகமலர்ந்த தைரியத்துடனே

அவன்முன் நின்றோம். சிவனைநம்பி, வந்த இடர்களைப் பொறுத்தோம். "அரனே! இம்மன்னனைப் பிடித்தலைக்கும் துன்மதியை விலக்கி, நன்மதி யளித்து, அவனையும் ஆட்கொள்ளவேண்டுமென்றே" வேண்டி நின்றனம். இறைவனருள் இடர்களை விலக்கியது. உண்மை, பொறுமை இரண்டின் ஆற்றலும் விளங்கியது. எந்த நாடு உண்மையும் பொறுமையும் அருளுறுதியும் கொண்டுள்ளதோ அந்த நாட்டை யாரும் அடக்கி அடிமைப்படுத்த முடியாது. உலகமே வாட்படை கொண்டு வந்தாலும், அந்நாட்டை வெல்லமுடியாது. உண்மையும், பொறுமையும், அஞ்சா அருளுறுதியும் கொண்ட இந்தப் புதிய சக்தியை ஆத்மசக்தி, அருளாற்றல் அல்லது **அஹிம்ஸா தர்மம்** என்கிறோம். அத்தருமந்தான் நமது நாட்டின் தாரகமாகும். தமிழ் நாட்டில் இன்றுதித்த இத்தருமம் உலகிற்கு எல்லா நன்மையும் செய்வதாகும்.

எல்லாரும்:—அஹிம்ஸா தருமம் வாழ்க! அஹிம்ஸா தருமமூர்த்தியான வாகீசர் வாழ்க! சிவனருள் வெல்க!

வாகீசர்:—அன்பர்காள்! இனி யாம் திருவீரட்டானஞ் செல்ல விடைதருவீர்.

சித்தத் துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தை யுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின்றார் பிணிதீர்த் தருள்வாய்!
மத்தத் தரக்கன் இருபது தோளு முடியு மெல்லாம்
பத்துற் றுறநெரித்தாய் யெம்மை யாளும் பசுபதியே!
நமச்சிவாய! நமச்சிவாய!

# காட்சி 12.

[பல்லவராஜன் பரிவு.]

பல்லவன்:—கல்லும் தெப்பமாகித் திருப்பாதிரிப்புலியூர் சேர்ந்து, பல்லாயிரம் அன்பரால் போற்றிப் புகழப் பெற்ருர் வாகீசர்! சீ-என்ன மதியீனமான கொடுமை புரிந்தோம்! இதனுல் நமக்குற்ற தென்ன? மாருப் பழியும், தோல்வியும், மனப்புண்ணுமே! இப்போது அறிவு வந்தது! வாகீசா, வாகீசா, என்னை மன்னிக்க வேண்டும்! நின் ஆத்ம சக்தியை நன்குணர்ந் தேன்! என் சிறுமையும், கொடுமையும், பழியும் என்னையே வாட்கொண் டறுக்கின்றன. அலைகளை அடக்கமுடியுமா? ஒரு ஆத்ம சித்தனை அடக்குமுறை வெல்ல முடியுமா? உணர்வு வந்தது! உலகை ஆளும் ஒரு பராசக்தி உண்டு, உண்டு! ஒரு சக்தி நாதன் உள்ளான், உள்ளான்! என் விழி திறந் தது! எங்கு மிருந்து அனைத்தையும் ஆளும் முதல்வா! இதோ, நின் திருவடிக்கே ஆளானேன். வாழ்வை அவமே கழித்தேன். துன்மதியே போ, போ! சதி சேனு செல் செல் செல்!

கொலைசெய்தேன்! வீண்! வீண்! வாழ்வைக் கொலை செய்தேன்; இறைவா என்னை மன்னிப்பாய்!

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன், கோலமாய
நலம் பொல்லேன் நான்பொல்லேன் ஞானியல்லேன்
நல்லாரோ டிசைந்திலேன். நடுவேநின்ற;

விலங் கல்லேன் ; விலங் கல்லா தொழிந்தே னல்லேன் ;
வெறுப்பனவு மிகப்பெரிதும் பேச வல்லேன் ;
இலம் பொல்லேன் இரப்பதே லீயமாட்டேன் ;
என் செய்வான் தோன்றினேன் ஏழையேனே !

[செல்கிருன்]

துன்மதி:—சீ ! என்ன நமது வாழ்வு ! நல்லோரைப் பொல்லாங்கால் நலிக்கப்பார்த்து வீண் பழி சுமந்தேன் ! யானும் வாகீசர் பாதத்தில் விழுந்து திருந்துகிறேன்.

[செல்கிருன்]

சதிசேனன் } அதிகாயன் } :—அந்தோ நமது சூழ்ச்சிகள் மண்ணுயின ! செய்தது பாதகம் ! வந்தது பழி ! யாரைக் கொடுமை செய்தோமோ அவர் உலகம் போற்ற வென்ருர் ! இறைவனடியாரை நாமும் சென்றடைவோம்.

[செல்கின்றனர்.]

[ குண்டன் முண்டன் வருதல்]

முண்டன்:—அப்பாண்டே ! அவர் தெய்வந்தாண்டா ! சத்தியமாத் துணியைப்போட்டுத் தாண்டுறேன்.

குண்டன்:—ஆமாண்டா ! இந்தப் பாழும் மகாராசாக்களுக்கு என்னவேலே ! இந்த வவுத்துக்காக இவங்க செய்யும் பழி யெல்லாம் நம்ம தலேயிலே வெடியுது ! பாவம் ! அவரை எப்படி யெல்லாம் கொலேசெய்யப் பார்த்தோம் - அவர் தெய்வந்தாண்டா !

முண்டன்:—இல்லாட்டி உன் பாட்டன் நாளிலேயும் கல்லு தெப்பக்கட்டைமாதிரி மிதந்ததைக் கேட்டிருக்கிருயா ?

குண்டன்:—ஆமாங்கிறேனே! மகாராசாவுக்கு இப்போது தான் புத்திவந்தது! சாமி உண்டு என்று நம்பிக்கை வந்தது. பாவம் அந்தப் புண்ணியத் தெய்வம்! நாமும் அவர்காலிலே விழுந்து சாவமடா!

முண்டன்:—(கன்னத்திற் போட்டுக் கொண்டு) மன்னிக்கணும், மன்னிக்கணும் தெய்வமே! அபராதம் செஞ்சிட்டோம்! வவுத்துக் கொடுமைக்காக இந்தப் பாழும் எசமாங்களைக் கட்டி அழுகிறோம். இவர்களுக்கு நல்ல புத்தி கொடு. தெய்வமே! இதோ உன் காலில் விழுகிறோம்.

மாடக்கருப்பண்ணனே மாமுண்டியோ
மயிலேறும் வேலவனே சாமுண்டனே
ஆடும் அழகண்ணனே சாமியாண்டே
அபராதம் பொறுத்தெம்மை யாண்டுகொள்வாய்!

[செல்கின்றனர்]

## காட்சி 13.

[வீரட்டானேசுரர் சந்நிதி—தேவாரம் முழங்குகிறது. வாகீசர் அடியார் சூழ விளங்குகிறார்]

அன்பர்கள்:—

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்!
இல்லையே யென்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்!

வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில் சூழ் குன்றையார் விறன் மீண்டாற்
[கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே!

[சந்நிதியில் தீபாராதனை நடக்கிறது.]

## தீப வழி பாட்டு மந்திரம்

அன்பர்:—

ஒளிவளர் விளக்கே, உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

அப்பர்:—

வெறிவிரவு கூவிளநற் றொங்கலானை,
வீரட்டத் தானைவெள் ளேற்றினானைப்
பொறியரவி னானைப்புள் ளூர்தி யானைப்
பொன்னிறத்தி னானைப் புகழ்தக் கானை
அறிதற் கரியசீர் அம்மான் றன்னை
அதியரைய மங்கை அமர்ந்தான் றன்னை
யெறிகெடிலத் தானை யிறைவன் றன்னை
யேழையேன் யான்பண் டிகழ்ந்த வாறே.

சிவநேசச் செல்வர்காள்! அருட் பெருமையும் ஐந்தெழுத்தின் மகிமையும் சிவனடியார் சிறப்பும், சிவப்பணியின் மேன்மையும் இன்று விளங்கின. இறைவன் திருவருளை யிறைஞ்சுவாம்! அன்பும் அருட்பணியும் மேற்கொள்வாம்.

அடியார் குழுவில் அன்புடன் சேர்மின்! இறைவனருளை யெண்ணி யுருகுமின்; சமயங்கள் எத்தனையோ அத்தனையும் தன்னுள் அடக்கிய சமயாதீதப் பழம் பொருளை அடைமின்; கடவுள் மணங்கமழும் தமிழ் மறைகளை எங்கும் பரப்புதற் கெழுமின்! அவற்றைப் பயின்று நின்று பயன் பெற்றுய்மின்! அருளைத் தேடுமின்!

பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள்நெஞ்சே துஞ்சா வண்ணம்,
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்,
உன்னையல்லால் ஒரு தெய்வம் உள்கே னென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்
பொழிலாரூ ராவென்றே போற்று நில்லே!

எல்லாரும்:—திருச்சிற்றம்பலம்! போற்றி போற்றி, சிவனே போற்றி!

[பல்லவராஜன் வருதல்]

பல்லவன்:—

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்;
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்;

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்.
திருவாரூர் பிறந்தார்க ளெல்லார்க்கும் அடியேன்.

[அழுதுகொண்டே]

திருநின்ற செம்மையே செம்மையாய்க் கொண்ட,
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்!

[வாகீசர் காலில் விழுதல்.]

பெரியோய், அரியோய்! சிவனருட் குரியோய்! சிறியேன் பெரும் பிழை பொருத்தருள்க! என் தெய்வமே! இறைவன் ஒருவன் உள்ளான்! அவன் அருள் அடியார்க்குத் துணை புரிகிறது! சிவப் பொருள் உண்மை! சிவ சக்தி எல்லாம் வல்லது! எனக்கு உணர்வூட்டிய பரமகுருவே! நாயினும் கேடனான இக்கொடிய புல்லனை ஆட்கொள்ளுக! நாவிற்கரசே! நலத்திற்கரசே!பொறுமைக்கரசே! உண்மைக்கரசே! பொல்லா வினையேன், கொல்கொலைக் கஞ்சேன். என் வினைகள் என்னையே சுடுகின்றன! தீவினையாளரைத் தீவினைவாட்டும்! அந்தோ! நீற்றறையிலிட்டாற்போல் என்னுடல் எரிகின்றதே! நெஞ்சு நஞ்சுண்டு பதைக்கிறதே! இறைவனருட் பெருக்கே! தங்களை இடரவிட்ட யானை, எனது நலத்தை யெல்லாம் வெறிகொண்டு நசுக்கியதே! கவலைக்கல் என் மனத்தைக்கட்டி மீளாத் துயர்க்கடலில் ஆழ்த்தியதே! அப்பனே, என்னையே யான் சுட்டுக்கொள்கிறேன்! ஐயனே அரன் பெருமையும், அடியார் பெருமையும், அன்பின் மாண்பும், அருளின் அருந்திறனும் விளங்கின, விளங்கின, நன்கு விளங்கின! தவ சக்தியே சக்தி! பொறுமையே ஆற்றல்! சிவனருளே வெல்லும்! அடக்குமுறை அவலப்படும்! கொடுங்கோல் முறியும்! சிவனருட் செங்கோல் செகமெலாம் புரக்கும். சிவனடி பிரியாச் சிறப்புடையரசே, இனி உன்னடி பிரியேன். உனது

புனிதமலரடியை எனது அன்புக் கண்ணீரால் கழுவு கின்றேன்! மன்னித்திடுக, மன்னித்திடுக! வாக்கின் மன்னு! சிறியேன் பிழைகளை மன்னித்திடுக. நமச்சிவாய நமச்சிவாய, சிவ சிவ சிவ சிவ!

[துன்மதி, சதிசேனன் வருதல்]

துன்மதி:—பெரியோய்! எங்கள் மடமையை அறிந்தோம்! அடியார் பெருமை உணர்ந்தோம்! இறைவன் உள் ளான்! ஒன்றே குலமும் ஒருவனே தேவனும். எங் கள் அற்பத்தனத்தை, கொடுங்கொடுமையை, மன்னி த்திடுக! சிவ சிவ சிவ சிவ!

[வருதல் மூண்டன், குண்டன்]

இருவரும்:—எஞ்சாமீ—சாமீ சாமீ சாமீ! தெண்டம், தெண் டம்! ஆவாவாவாவாவாவா: (வாயில் அடித்துக்கொள் ளல்) கன்னத்திலே போட்டுக்கிறோம். காலிலே முட் டிக்கிறோம். இந்தப் பாழும் எசமாங்களை நம்பிப் பாவ ம்—எந் தெய்மே—தங்களை எவ்வளவு இமிசை செய் தோம்! எங்களை ஒரே தூக்—கடலில் போட்டுவிடுங் கள்! அப்பாடீ எவ்வளவு கொடுமை செய்தோம்—எஞ் சாமீ சாமீ, சாமீ! எல்லாம் பொறுக்கணும். எங்களை மன்னிக்கணும்....எங்கள் அடிமைதீரவேணும்! நாக்கு ராசா—தாங்களே உலகராசா! சிவராச்சியம் வர வேணும் தெய்வமே!

வாகீசர்:—அன்பர்காள்! எழுந்து சிவனைப் பணியுங்கள்! உங்கள் மீது அப்போது இரக்கம், இப்போது அளவற்ற அன்பு பிறந்தது. எல்லாம் நலம்! பல்லவர் கோனே, கடவுள் உண்டா?

பல்லவன்:—ஆம் கடவுள் உண்டு.

வாகீசர்:—உள்ளன்பருக்கு அவனே உறு துணையா?

பல்லவன்:—ஆம் ஆம்! உள்ளன்பர் உள்ளத்தும் செயலி லும் அவனே உள்ளான்!

வாகீசர்:—அவன் அருளாட்சி அரசாட்சியின் மிக்கதா!

பல்லவன்:—ஆம் அருளாட்சி; பெரிது; அகந்தை அர சாட்சி அற்பம்!

வாகீசர்:—அவனை நம்பும் அன்பர் உய்வரா!

பல்லவன்:—ஆம். அவன் அன்பரே உய்வர், வெல்வர், புரப் பர், தழைப்பர்!

வாகீசர்:—சிவனருள் பெற்றார் அவனியிற் சிறந்தார்! அவ னடி யுடையார் அஞ்சார், தளரார்! அவனருள் பெற்றால் அனைத்துமாகும், என்பது தெளிந்ததா?

பல்லவன்:—அருளேவெல்லும்; அருளொளியை இருளகந் தை வெல்லாது! அடியார்க்கு அச்சமில்லை. அனைத்து மறிந்தேன். அருள் அரசே, நின் சேவகம் செய்ய என்னை யாட்கொள்ளுக! சிவனை நம்பினேன்! சிவப் பணி புரிவேன்! குணதரவீச்சுரத்தில் திருப்பணி தொடர்வேன்; அருள்க!

வாகீசர்:—அவ்வாறே யாகுக!

தண்டாயுதம்:—(அடிபணிந்து) எல்லாம் வல்ல அருளரசே! தாஸன் தண்டாயுதத்திற்கு ஒரு வழி காட்டவேண் டும். நாலுவேளைச் சாப்பாட்டை இரண்டே வேளை யில் சாப்பிட அருள்புரியவேண்டும். சாப்பிட்டதும் நித்திராதேவி தாஸனை ஆட்டிவைக்கிறாள். நல்ல உப

தேசங்களைக் கேட்கப்போனாலும் மேற்படியாள் வந்து தலையைச் சுழற்றுகிறாள்.

வாகீசர்:—சவவுறக்கமொழிக! சிவநினைவு பொலிக! சிவன் பணிபூண்டு, சிவனுக்கே வாழ்க! அன்பர்காள், நீவிரும் புனிதமுற்றீர். இதோ அன்பிற்கும், ஒளிக்கும் அறிகுறியான இச் சிவ சின்ன மணிந்து எங்கும் சிவமயங்கண்டு அன்பு செய்மின்! (எல்லாருக்கும் திருநீறளித்தல்)

பல்லவன்:—(விபூதி யணிந்து)

நாத்திகப் பிசாசமே செல்! செல்! செல்!
ஞானவான் ப்ரகாசமே வெல்! வெல்! வெல்!
வார்த்தையாடும் வாதமே செல்! செல்! செல்!
வாய்மையான நீதியே வெல்! வெல்! வெல்!
ஆத்திரக்கொடூரமே செல்! செல்! செல்!
அமைதியின்ப வீரமே வெல்! வெல்! வெல்!
நாய்ச்சின அகந்தையே செல்! செல்! செல்!
நல்லடியார் சிந்தையே வெல்! வெல்! வெல்!

தண்டாயுதம்:—(வயிற்றில் விபூதி தடவி)

தொந்திவிழுகும் சோம்பலே செல்! செல்! செல்!
தூங்கிவிழுகும் மந்தமே செல்! செல்! செல்!

அடியார் பெருமையால், தூக்கமும் தொந்தியும் இனி நம்மைத் தொல்லை செய்யா....ஹரஹரமஹாதேவ!

வாகீசர்:—

அத்தாவுன் னடியேனை அன்பா லார்த்தாய்
அருளனோக்கில் தீர்த்த நீ ராட்டிக்கொண்டாய்
எத்தனையும் அரிய நீ யெளியை யானாய்.
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்

பித்தனேன் பேதையேன் பேயே னுயேன்
பிழைத்தனக ளெத்தனையும் பொறுத்தா யன்றே
இத்தனையு மெம்பரமோ ஐய, ஐயோ
எம்பெருமான்திருக்கருணை யிருந்த வாறே!

(எல்லாரும் செல்லல்)

---

# அன்பின் அற்புதம்

—:(o):—

உ

## காட்சி 14.

[தில்லைச் சிற்றம்பலத்தில் அன்பர்குழாம்]

அன்பர்:—

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தன்எனக்கருளியவாறுஆர்பெறுவார் அச்சோவே!

[சிவநேசன் வருதல்.]

சிவநேசன்:—அடியார்களே! திருநாவுக்கரசு நாயனார் தில்லை சேர்ந்தார்! இதோ அம்பலக்கூத்தன் திருச் சந்நிதிக்கு வந்துகொண்டிருக்கிறார்.

ஒரு அன்பர்:—வாகீசப் பெருமான் வாழ்க! சிவன் அருள் வெல்க! அடியார் காட்சி அரனார் காட்சி! வழியில் ஏதேனும் அருள்விளக்க மாயிற்றோ?

சிவநேசன்:—அடியார் செல்லுமிடம் அருள்விளக்கமே. திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக் கோவலூர், முதலிய தலங்கள் புக்கு, பெண்ணாடகத் தில், திருத்தூங்கானை மாடம் ஆலயத்தில், அடிகள் இப் பாசுரம் அருளினார்:—

பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
[போற்றி செய்யும்,
என்னுவி காப்பதற் கிச்சையுண்டேல் இருங் கூற்றகல,
மின்னாரு மூவிலைச் சூலமென்மேற் பொறி மேவுகொண்டல்
துன்னூர் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே!

உடனே சிவபெருமான் அருளால், ஒரு சிவ பூதம் பிறர் காணாது வந்து, வாகீசர் தோளிலே சூலக்குறியும், காளைக் குறியும் பொறித்தது! பிறகு பல தலங்களைக் கண்டு, வாகீசர் இப்போது தில்லை வந்துளார்.

[திரைக்குப் பின்னால் அன்பர்குழாம் நாமாவளி பாடிவருதல்]

நடராஜா, நடராஜா, நர்த்தன சுந்தர நடராஜா!

சிவநேசன்:—இதோ அடியார் குழாம் புடை சூழ, சிவ முழக்கத்துடன் வாக்கரசர் வருகிறார்.

[வாகீசர் வருதல்]

அனைவரும்:—வாகீசர் வாழ்க! தமிழ் மறை வாழ்க! சிவ நெறி வாழ்க! திருச்சிற்றம்பலம்!

வாகீசர்:—[நடராஜர் சந்நிதி வருதல். தீபாராதனை]

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்குந் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

[பூசகர் வாகீசருக்கு விபூதி அளித்தல்.]

வாகீசர்:—சிற்சபேசா!

எல்லாரும்:—சிவசிதம்பரம்!

வாகீசர்:—சிற்றம்பலத்தில் ஒளி வளரும் திருநடத்தரசே, ஞாலத்திறைவா! சிற் சக்தியான கங்கை யணிந்தோய்! ஆத்மானந்தமாம் பிறை சூடியவா! ஆணவப் புலியை உரித்து அணிந்தோனே! ஐயனே! நாதப்பறையும், ஆன்மச் சோதியும், அபயமும், அருளும் மேவிய கையனே, போற்றி! மானெனத்துள்ளும் மனத்திற் கெட்டாத,துரியந் தன்னில் தூக்கிய திருவடி போற்றி! மாயையை நலிக்க ஊன்றிய திருவடி வாழ்க! இறைவனே! பாமாலை சூட்டிப் பணியால் உன்னை வழிபட அருள்.

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
யெத்தினாற் பத்தி செய்கேன் என்னைநீ யிகழவேண்டாம்
முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் னாடல் காண்பான் அடியனேன் வந்தவாறே!

[தியானம் செய்தல்.]

எல்லாரும்:—திருச்சிற்றம்பலம்! அடியார் வாழ்க!

[தீபாராதனை.]

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பல மேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே!
ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத்தார் கொள்கைச் சிற்றம்பல மேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத்தாற் பாட வல்லார் நல்லாரே!

வாகீசர்:—ஞானசம்பந்தர் வாக்கு உள்ளத்தை அள்ளு கிறது. இந்த அருட்குழந்தையைப் பெற, பகவதி யாரும் சிவபாத ஹ்ருதயரும் செய்த தவமென்னே! மூன்று வயதில் அம்மையப்பரை அழுதுகூவித் திரு முலைப்பாலுண்டு ஞானசம்பந்தரான ஆளுடைப் பிள்ளையார் போன்ற அற்புதக்குழந்தையைத் தமிழன் னையே அடைந்தாள். "பால் யார் ஊட்டியது?" என்று கேட்ட தந்தைக்கு மூன்று வயதுப் பிள்ளை "என் உள்ளங்கவர் கள்வன், பிரமாபுரம் மேவிய பெம் மான், தோடுடையசெவியன்" என்று தேவாரம் பாடி விடையளித்த அற்புதம் தமிழ்நாட்டிலன்றோ நிகழ்ந்தது. இறைவனிடம் பொற்றாளமும், முத்துச் சிவிகை, குடை முதலியனவும் பெற்று, திருக்கோயில் கள்தோறும் பாமாலையால் வழிபட்டு, நாட்டில் அரு ளுணர்வைப் பரப்பும் அக்குழந்தைப்பெரியாரைப் போற்றுவோம். அவர் பாசுரத்தை யாழிலமைத்து மீட்டும் திருநீலகண்டயாழ்ப்பாணர் பெற்ற பேறென்னே! இப்போதுதான் ஞானசம்பந்தருக்கு உபநயனமும், ஐந்தெழுத் துபதேசமும் நடந்தன. அவரை நாம் சென்று வணங்குவோம். ஞானசம் பந்தர் வாழ்க!

சிவபாதம்:—

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப்
பூதபரம் பரை பொலியப் புனிதவாய் மலர்ந் தழுத
சீதவள வயற் புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்!

வாகீசர்:—எல்லாம் தில்லைக்கூத்தன் அருள்விளக்கமே!

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை,
அருமறையின் அகத்தானை, அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தம் கோனை, மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

எல்லாரும்:—திருச்சிற்றம்பலம்!

சிவநேசன்:—வாக்கிற் கரசே, இவ்வொரு தேவாரமே நான்மறைப் பொருளையும் விளக்குகின்றதே! தமிழ் மொழி வாழ்க!

வாகீசர்:—தமிழும், சமயமும்வாழவே திருவருள் திருத் தொண்டருள் இறங்கி அற்புதப்பணிகள் செய்கிறது. அன்பர்காள்! இனி நாம் திருத்தலங்கள் சுற்றிச் சீர்காழி செல்வோம்.

அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே!
அல்லல் என்செயும்? அருவினை யென்செயும்?
தொல்லை வல்வினைத்தொந்தந்தா னென்செயும்?
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவ னூர்க்கு
எல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே!

தில்லை போற்றி! திருவருள் போற்றி!

அன்பர்:—நடராஜா, நடராஜா, நர்த்தனசுந்தர நடராஜா!

[அன்பர் நாமாவளி பாடிக் கொண்டே வாகீசர் பின் செல்லல்.]

**தண்டாயுதம்:**—எனக்கும் திருவருள் வந்துவிட்டது; எப்படி என்பீர்களா? இத்தனை பாட்டுக்களையும், ஞான மொழிகளையும் தூங்காமல் கேட்டேனல்லவா! தூங்குவார் தூக்கம் கெடுப்பாய் போற்றி! தூங்காதே விநியோகம் கொடுப்பாய் போற்றி! ஹர ஹர மஹா தேவ!

[போகிறான்]

## காட்சி 15.

[சீர்காழி - தோணியப்பர் கோயில் வாசல் - ஞானசம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணர், அன்பர்]

**ஞானசம்பந்தர்:**—[பாடும்போது யாழ்ப்பாணர் உடனே யாழ் மீட்டல். சம்பந்தர் கையில் பொற்றாளம் உள்ளது.]

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்,
எண்ணினல் லகதிக் கியாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வள நகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.
போதையார் பொற்கிண்ணத்தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

அன்பர்காள்! இன்று வாகீசப் பெருமான் வரும் புண்ணியநாள். நீற்றறையிலிருந்தும், விஷச்சோறுண்டும், மதயானைக்கு முன்னிருந்தும், கடலிற் கல்லைத்

தெப்பமாக்கியும், பல இடர்களைப் பொறுத்தும் நமது சமயத்தைக் காத்து, திருவருட் பெருமையை விளக்கிய வாகீசரை நாம் சிவகோஷத்துடன் வரவேற்போம்.

[திரைக்குப்பின்னே அன்பர் பாடிவருதல்]

நம்பொருள் நம் மக்களென்று நச்சியிச்சை செய்துநீர்
அம்பரம் அடைந்து சால அல்ல லுய்ப்ப தன் முனம்
உம்பர் நாதன் உத்தமன் ஒளிமிகுத்த செஞ்சடை
நம்பன்மேவு நன்னகர் நலங்கொள் காழி சேர்மினே!

பாவமேவும் உள்ளமோடு பத்தியின்றி நித்தலும்
ஏவமான செய்து சாவ தன் முனம் இசைந்துநீர்
தீபமாலை தூபமுஞ் செறிந்த கைய ராகிநம்
தேவ தேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே!

[வாகீசர், சிவநேசன், சிவபாதம், தண்டாயுதம் முதலிய அடியார் வருதல்; தண்டாயுதம் பரவசமாக நடனமாடி வருகிறான்]

வாகீசர்:—[தேவார முழக்கம்.]

மாதி யன்று மனைக்கிரு வென்றக்கால்
நீதி தான்சொல நீயெனக் காரெனுஞ்
சோதியார் தரு தோணிபு ரவர்க்குத்
தாதி யாவனுன் என்னுமென் தையலே

அம்மை யப்பனை அழுதணைத்துக்கொண்ட அரும் பெருஞ் செல்வரே! ஞானசக்தியின் திருப்பாலுண்ட சம்பந்தப் பெருமானே! அடியார்க் கடியேன் வணக்கம்.

[பணிதல்]

ஞானசம்பந்தர்:—சிவனருளால் வாக்கிற் கரசான வள்ளலே! நீற்றறையிலும் சிவ பெருமான் கருணை மலர்ப் பாதங்கண்ட சிவ நேசரே! நீலகண்டன் பெயரால் நஞ்சும் அமுதாகப் பெற்றவரே! மதயானையை அஞ்சாது வென்ற வீரசைவரே! ஐந்தெழுத்தின் பெருமையால் கல்லும் தெப்பமாகப் பெற்ற சிவ சித்தரே! தங்களைக் காணப்பெற்றதே பெருஞ்சிவப் பேறு! தங்கள் அன்பின் அற்புதம் வாழ்க!

[கைகளால் வாகீசரை எடுத் திறைஞ்சி]

அளப்பறுஞ் சிவப்பே றுடைய என் **அப்பரே! அப்பரே! அப்பரே! அப்பரே!**

வாகீசர்:—அடியேன்! அடியேன்! அடியார்க் கடியேன்!

எல்லாரும்:—அப்பர் வாழ்க! அப்பர் வாழ்க! அப்பர் வாழ்க! அப்பர் வாழ்க!

அப்பர்:—சிவஞானப் பிள்ளையாரே, தம்மைக் கண்டு அடி வணங்கும் பேறுபெற் றுய்ந்தேன்.

ஞானசம்பந்தர்:—அப்பரே! வாக்கின் மன்னரான தங்களைக் கண்டு மனங்குளிர்ந்தேன். தொண்டர்தம் பெருமை சொல்லவும் படுமோ! இருவரும் சிவநேசத்தால் ஒருவராகி அருட்பணி புரிவோம்.

சிவபாதம்:—இரு காந்தங்களின் வடகோடும் தென் கோடும் பொருந்துவது போன்றது அடியாரின் அன்புறவு. அப்பர் முதியவர். பாலகனை ஞான சம்பந்தப் பிள்ளையை வணங்கினர். ஞானசம்பந்தர் அந்தணர்; "**அப்பரே**" என்று வாகீசரை இறைஞ்சினர்;

அன்புப்பெருக்கில் வயது வருணவேற்றுமைக ளெல்லாம் வெள்ளத்தில் உப்பெனக் கரைந்து விடுகின்றன. உலக ஒற்றுமைக்கு இப் பேரின்பக் காதலன்றோ அடிப்படை? கடவுளுறவே உறவு? மனிதர்கள் ஆசையாலும் வேட்கையாலும், எத்தனையோ வகையாக உறவு கலக்கின்றனர். உலக ஒற்றுமைக்காக எத்தனையோ சீர்திருத்தங்கள் செய்கின்றனர். ஒற்றுமையின் உயிர்நாடி உள்ளமேயாம்; உள்ளத்தில் ஊன்றிய ஒற்றுமை உலகில் ஒரு பெரிய சக்தியாகும்.

ஞானசம்பந்தர்:—அப்பரே, தோணியப்பரைத் தரிசிக்கலாம் எழுந்தருள்க!

வாகீசர்:—அப்படியே!

எல்லாரும்:—சாம்ப சதாசிவ சாம்ப சதாசிவ ....

[எல்லாரும் நாமாவளி பாடிக்கொண்டு கோவிலுட் செல்லல்]

[தோணியப்பர் சந்நிதி—தீபாராதனை நடக்கிறது]

அப்பர்:—(மனமுருகி)

பார்கொண்டு மூடிக் கடல்கொண்டஞான்று நின்பாதமெல்லாம்
நாலைந்து புள்ளின மேந்தினவென்பர் நளிர்மதியுங்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித்தாடுங் கழுமலவர்க்கு
ஆளன்றி மற்றுமுண்டோ அந்த ணாழி யகலிடமே

அன்பர்:—திருச்சிற்றம்பலம்!

ஞானசம்பந்தர்:—வாக்கிற் கரசே! தங்கள் அருள் மொழிக் கனிவு என் உள்ளத்தை அள்ளுகின்றது. தங்களுடன் அருட்பணி புரிவதே பேரின்பமாகும்.

அப்பர்:—சொல்லும் பொருளும் சேர்ந்ததுபோல, நாம் அரன் பணி புரிவோம். சிவனருட் செல்வரே! நமது தமிழகம், புறச்சமய வாதிகளின் கையில் இடர்ப் பட்டு, அரு ளறிவுகுன்றி வருகின்றது! அமுதினும் இனிய தமிழரசி இன்று முகம் வாடிச் சோர்ந்திருக் கின்ருள்; தமிழர் எல்லாம் வல்ல பரம்பொருளை மறந்து, ஏதேதோ போலி ஒழுக்கங்களிற் புகுந்து மயங்கி நிற்கின்றனர். தமிழும், தமிழர் சமயமும், நாடும் உய்யப் பணிபுரிவோம்.

ஞானசம்பந்தர்:—இறைவன் கட்டளை அஃதே. தெய்வத் தமிழும், சிவநெறி விளக்கமும், தழைத்தோங்கவே, அவன் இக்காலத்தில் சிறந்த அடியார்களுக்கு அருட் சக்தி யளித்துள்ளான். அடியேன் அரன்பணிக்கே சிவ நெறிச் செழிப்பிற்கே,தமிழ்மறை விளக்கத்திற்கே பாமாலை சூட்டுகிறேன்; தாங்கள் சொற்கோ வாகிச் சுடர் ஞானக் கொழுந்தாகி அற்புதத் தொண்டு புரி கின்றீர். இதோ இன்னிசைத் தொண்டர் திருநீல கண்ட யாழ்ப்பாணர் யாழால் பணி செய்கிருர்.

அப்பர்:—இன்னிசைத் தொண்டருக்கு வணக்கம்.

திருநீலகண்டர்:—அடியார்க் கடியேன்!

ஞானசம்பந்தர்:—மதுரையில் நமக்கு ஏராளமான பணியுள் ளது.

அப்பர்:—ஆம். அரசன் கூன் பாண்டியனும் சிவ நெறிவழுவிப் புற சமயத்தைத் தழுவினன். அங்கே சிவச்சுடரைத் தூண்டவேண்டும்.

ஞானசம்பந்தர்:—நிலவில்லா இருளிலும் தாரகையால் ஒளி காட்டும் எப்பெருமான், பாண்டி நாட்டிலும் மங்கையர்க்கரசி, குலச்சிறை நாயனார் போன்ற உள்ளன்பரைப் படைத்துள்ளான்; குறைவில்லை. சைவச்சுடரோங்கும். இன்றும் தங்களிடம் மிகவும் அன்பு பூண்ட அப்பூதி யடிகள், சிறுத்தொண்டர், திருநீலநக்கர், முருகனார், குங்கிலியக் கலய நாயனார் முதலிய திருத்தொண்டர் அருட்பணி புரிகின்றனர். அடியார் மூலம் அரன் விருப்பம் நிறைவேறும்.

அப்பர்:—அப்பூதி யடிகளைப்பற்றிக் கேள்விப் பட்டுள்ளேன். இன்னும் சில தலங்களைச் சுற்றி, திருப்பழனஞ் சென்று, பிறகு அவரைக் காண்பேன். அடியார் காட்சி அமுதினும் இனிது. இப்போது சோழ நாட்டுத் திருப்பதிகளை வணங்க விருப்பம்.

ஞானசம்பந்தர்:—முதலில் திருக்கோலக்கா செல்வோம்.

அப்பர்:—அவ்வாறே.

ஞானசம்பந்தர்:—அம்மையப்பன் அருளுக!

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ!

[எல்லோரும் செல்லல்]

## காட்சி 16.

[அப்பூதியடிகள் வீட்டுமுன்]

[தண்டாயுதம் பலமான விபூதி சந்தனப் பூச்சுடன் நிற்கிறான்.]

**தண்டாயுதம்:**—ஹேவ், ஹேவ்....அப்படியல்லவா இருக்க வேண்டும்! அடியார்வழிபாடு....சாப்பாடு. திருவயிற் றப்பர் எவ்வளவு திருப்தியாயிருக்கிறார் பாருங்கள். திருத்தொண்டரை இனிப் பிரியமாட்டேன். திருத் தொண்டர் என்னென்னவோ அற்புதங்கள் செய் கிறார்கள். ஞானசம்பந்தர் தன் பாட்டிற்கு தாளம், முத்துச்சிவிகை, முத்துக்குடை மட்டுமல்ல பண மூட் டைகூடச் சிவபிரானிடமிருந்து வாங்கிவிட்டார். 'சூலமுத்திரை குத்து, அடியைத் தலைமேல்வை' என்று வேலைவாங்குகிறார் அப்பரும் சிவனிடம். நான் கேட் பது ஒரே வரந்தான். இந்தத் திருவோடு அக்ஷயபாத் திரமாக வேண்டும். அடியார் பத்து மைலுக்கு அப் பால் வரும்போதே,ஊருக்குள் வந்து, சாப்பாடு வகை யாயிருக்கிறதா என்று சுவைபார்க்கும் திருத் தொண்டே எனது பாக்கியம்.

பாருங்கள், இது அப்பூதியடிகள் வீடு. நானும் இரு பது ஆண்டுகளுக்கு முன் குடும்பத்தில் இருந்தேன். எத் தனையோ கடிமணங்களைப் பார்த்தேன். "கடிமணம்" என் றால் பல்லுக்கு வேலையுண்டா? அனுபோகத்தால் "இடி மணம்" என்று திருத்திக்கொண்டேன். முகம் கார்மேக மாகி, பல் மின்னல் தெறித்து, வாய்மழை பொழியாத நாளே கிடையாது. இடி, ஏச்சு, வசவு, கலகம், எல்லாம் நடக்கும். இதற்கிடையே நான் ஒரு அடியாரைக் கூட்டி

வந்ததும், 'போடா தடியா' என்று அவர்கள் திட்டியதும் நியாயந்தானே? இதெல்லாம் எவ்வளவோ பார்த்துப் பயந்துபோய், வீடு நமக்குத் திருவாலங்காடு தான் என்று கிளம்பினேன். இந்த வீட்டைப்பாருங்கள், அதிசயம்! அன்பு மயம், சிவமயம்....இதோ திருத்தொண்டர், அவர் களிடம் சொல்லுகிறேன் அதிசயத்தை.

[வருதல் அப்பர், சிவபாதம், சிவநேசன்]

அப்பர்:—

நினைந்துருகும் அடியாரை நையவைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்கவைத்தார்
சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார்; சிறந்து வானோர்
இனந்துருவி மணிமகுடத் தேறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடியென் தலைமேல் வைத்தார்
நல்லூரெம் பெருமானார் நல்ல வாறே!

நல்லூரில் திருவடி சூட்டிய சிவனே, திருப்பழனத்தில் நினது காட்சி கண்டு, திங்களூரில் நினது அடியார் காட்சி காண வந்தேன்.

தண்டாயுதம்:—ஹர ஹர மஹாதேவ! ஹேவ்! திருத்தொண்டர் வருக, வருக. இதுவே திங்களூர் அப்பூதி அடிகள் மனை. இங்கே எல்லாம் திருநாவுக்கரசுமய மாயிருக்கிறது.

அப்பர்:—ஆம்,வரும்வழியில், தண்ணீர்ப்பந்தலில்,அடியேன் பெயர் இருந்தது.

தண்டாயுதம்:—அதுமட்டுமா! திருநாவுக்கரசு கிணறு, திருநாவுக்கரசுகுளம், திருநாவுக்கரசுதோட்டம், திருநாவுக்கரசு வீடு, திருநாவுக்கரசுமாடு, எல்லாம் திருநாவுக்கரசு மயம். அதுமட்டுமா? அப்பூதியடிகள் மக்களுக்கும் பெரிய திருநாவுக்கரசு, சிறிய திருநாவுக்கரசு என்று பெயர் வைத்திருக்கிறார்....இதற்கெல்லாம் மேலே பாருங்கள் முதல்தரமான சாப்பாடு....வீட்டில் எல்லாரும் சிவப்பழங்கள். அன்பும் ஒற்றுமையும் இங்கே விளங்குகின்றன. அடியார் என்றால் ஓடிவருவார் பாருங்கள். திருத்தொண்டர் வரவைப்பற்றி இவன் ஒன்றும் இன்னும் சொல்லவில்லை. இதோவருகிறார் பாருங்கள்....

[செல்கிறான்]

[அப்பூதியடிகள் வருதல்]

அப்பூதியடிகள்:—சிவனடியார், வருக, வருக, வணக்கம்! நமச்சிவாய! சிவனடியார் எமது மனையெதிரே வந்தருளக் கருணை கூர்ந்தீர்; என்ன தவஞ் செய்தேன்!

அப்பர்:—அறநெறி மறையோய்! அரனடிக் கன்பீர், வணக்கம்; திருப்பழனங்கண்டு வருகின்றோம்; வழியில் தங்கள் தண்ணீர்ப் பந்தல் கண்டோம். தாங்கள் புரிகின்ற அறவினைகளைக் கேட்டு மகிழ்ந்தோம். சிவனடியார்க்கு நீர்வைத்த தண்ணீர்ப் பந்தலில், நும் பேர் எழுதாமல், வேறொரு பேர் எழுதியதேன்?

அப்பூதி:—நன்றருளிச் செய்தீர்! சொல்லொணு இடும்பைகள் பொறுத்து, சிவன் பெருமையை விளக்கிய அப்பர் பெயர் எனக்கமுதம். சிவனடித் தொண்டர் இம்மையிலுஞ் சீர் பெறுவர் என்று எம்

போலியர்க்குத் தெளியச் செய்து செம்மைபுரிந்த திருநாவுக்கரசரின் திருப்பெயரை எழுதியிருக்க, ஏன் இவ்வண்ணம் வெம்மையுறக் கேட்டீர்? ஐந்தெழுத்துப் பெருமையால் கல்லையுந் தெப்பமாக்கிக் கடலைக் கடந்த அவர் பெருமை அறியார் யார்? மங்களமான சிவ வேடத்துடனிருந்தும், இவ்வாறு நீர் மொழிந்தீர்! நீர் யார்?

அப்பர்:—(தனக்குள்) ஆ! அன்பிற் சிறந்த அடியார் இவர். அரனிடம் உள்ளம் வைத்து, சாதிச் செருக்கு சற்று மின்றி, அரனடியார் அனைவரையும் ஒரு குலமெனவும், அரன் வடிவெனவும் ஏற்று, விருந்திட்டுப் பணி செய்யும் இவ்வந்தணர் புனிதப் பெருமையென்னே! அன்பை அரனிடம் வைத்தார்க்கு ஒன்றே குலம், ஒருவனே தேவன்! (புறத்தில்) திருமறையோய், புற நெறியினின்று கரையேற்ற,எம்பெருமான் சூலை நோய் தந்து ஆட்கொண்ட தெருளுணர்வற்ற சிறுமையேன் யானே!

அப்பூதி:—[புளகித்து] ஆ! என்ன பேறுபெற்றேன்! போற்றி போற்றி! திருநாவுக்கரசே, போற்றி! போற்றி!

அடியனேன் வணக்கம்; நாவிற் கரசரே வணக்கம், இன்பத்
துடியனேன் வணக்கம்; அன்பு துலங்கிடுஞ் சிந்தையாலே
வடிகணீர் அருவி யாட்டி, மனமலர் சூட்டி நாளும்
அடைந்திட நினைந்தேன் காட்சி யளித்தனை யருளின் வாழ்
[வே!

அப்பர்:—அடியார் காட்சி அரனார் காட்சி! சிவ மயம்! சிவ மயம்!

அப்பூதி:—எம தில்லத்தைத் திருவடிகள் புனித மாக்குக!

[கால் கழுவி மனைக்குள் அழைத்துச் செல்லல்]

தண்டாயுதம்:—உண்டமயக்கம் தொண்டர்க்கும் உண்டல்லவா? இந்தக் கட்டையைக் கொஞ்சம் கீழே போடுகிறேன்........

[திண்ணையில் படுக்கிறான்]

## காட்சி 17.

அப்பூதி:—பெரிய திருநாவுக்கரசு, சின்னத் திருநாவுக்கரசு, எல்லாரும் அம்மாளைக் கூட்டிக்கொண்டு உடனே பூஜை யறைக்கு வாருங்கள்.

[பூஜையறையில் நாவுக்கரசர்]

சிவனடியார் இவ்விருக்கையில் எழுந்தருள்க!

[அப்பூதி யடிகள் மனைவி மக்கள் வருதல்]

நாம் நெடுநாள் காணக் காதலித்த சிவயோகச் செல்வர், திருநாவுக்கரசர், இதோ நாம் செய்த தவத்தால் நம்முன் விளங்குகின்றார்.

மனைவி:—வணக்கம். ஓம் சிவ சக்தி! ஓம் சிவ சக்தி!

மக்கள்:—வணக்கம். சிவ சிவ சிவ சிவ!

அப்பூதி:—வாகீசாய நம:

அப்பர்:—நமச்சிவாய, நமச்சிவாய! அன்பி லூன்றி, அருளாய் வளர்ந்து, சிவங்கனியும் இல்லறமாகிய நல்லறச் செல்வர்காள், உங்களுக்குச் சிவ சக்திக்கனலோங்குக! சிவனும் சக்தியும், யோகமும் போகமும் போலக்

கலந்து அன்பிற் பழுக்கும் இல்வாழ்வை, உலகம் உங்களிடமிருந்து கற்கட்டும். சிவநேசத்தில் மனமூன்றி, அருளும், பொருளும், வாய்மையும், தூய்மையும், அன்பும், பண்பும், ஆண்டவன் பணியும், ஆருயிர்ப் பணியும், கற்பும், பொறுமையும் நிறைந்த உங் குலப் பெருமை நீடுழி வாழ்க!

[திருநீறு அளித்தல்; மலர் தருதல்]

அப்பூதி:—எல்லாம் தங்கள் அருளால் ஆகுக!

திருநாவுக்கரசி! நல் விருந்து தயார் செய். பெரிய திருநாவுக்கரசு, நீ உடனே சென்று வாழை யிலை அறுத்து வா. [இருவரும் செல்லல்]

அப்பர்:—சிவ, சிவ, சிவ. (தியானித்தல்)

அப்பூதி:—அமுதிற்கு அழைக்கிறோம். அடிகள் நிஷ்டை நடக்கட்டும்.

[செல்கிறார்; அறைக்கதவு அடைக்கப்படுகிறது]

## காட்சி 18.

சிவபாதம்:—(அறைக்கு வெளியே) எங்கும் திருநாவுக்கரசு! எல்லாம் திருநாவுக்கரசு! அண்ணல் பெருமை யென்னே! இதோ அன்புப் பெருக்கால் அற்றது சாதி! அடியார் அடியை அந்தணர் வணங்கினர். அப்பருடனே அந்தணர் உண்பார்.

சிவநேசன்:—அன்பு வாழ்க! அன்புச் சமரசம் ஆணவத்தைவென்று உலகை ஒற்றுமைப்படுத்துக. அன்ப, ஒன்று உறுதியாகச் சொல்லுவேன்: நமது தமிழர் முன்னேற முடியாது முட்டுக்கட்டை போடும் சாதி

மதப் பூசல்களுக்கு மருந்து திருத்தொண்டர் வாழ்விலுள்ளது. அடியார் வாழ்வும், அவர் அருள் வாக்கும் தமிழர் உள்ளத்தில் பதிந்து, உயிரில் கலக்கவேண்டும்.

[அப்பூதியடிகள் வருதல்]

அப்பூதி:—பெரியார் அமுதுண்ண எழுந்தருள்க! (தனக்குள்) அந்தோ! நடந்த செய்தி யறிந்தால் பெரியார் அமுது செய்யாரே! என் செய்வது! மகன், இலைகொணர்ந்து, கடமையை முடித்து வீழ்ந்தான். பெரியார் அமுது செய்வது தடைப்படுமே யென்று வருந்துகிறேன். இருக்கட்டும். அவள் இரகசியமாக மூடி வைத்திருக்கிறாள். இறந்த வீட்டில் அழுகையும் கூக்குரலும், மாரடிப்பும், அமளிபடும்; சிவனருளால் நம் மனையில் அத்தகைய நாடகங்கள் இல்லை.

சிவனிச்சை உயிரைத் தருகிறது; சிவனிச்சை உயிரை வாங்கிக்கொள்ளுகிறது. இதற்கு அழுகையேன்! சிவபிரானே, நீ தந்த செல்வன் நின்னருள் சேர்ந்தான்! சிவனடியார் பணியில் இறந்தான்.

அப்பர்:—(பூஜை அறையினின்று வெளி வந்து) வெகுவிரைவில் அமுது தயாராக்கினீரே! செல்வோம் (மனதுள்) என்ன ஏதோ ஒரு உணர்வு? இங்கே ஏதேனும் நேர்ந்ததோ? சென்று வினவுவோம். அடியாரே, தங்கள் இரண்டு மக்களையும் அழைத்து வாருங்கள் உடனுண்ண!

அப்பூதி:—இதோ சின்னத் திருநாவுக்கரசை அழைக்கிறேன். மூத்தோன் உதவான். அடியார்களே எழுந்தருளுங்கள்!

அப்பர்:—ஏன் இப்படிச் சொல்லுகிறூர்? வினுவுவோம். சிவ பாதம், சிவ நேசன், வாருங்கள்.

[எல்லோரும் செல்லல்]

## காட்சி 19.

[கோயில் முன் அப்பர்]

அப்பர்:—என்ன அன்புறுதி! மகன் இறந்ததை மறைத்தும், மறந்தும், அடியார் பணியில் திடமாய் நின்றனரே! அடியார் துயரைத் தீர்த்தே அருந்துவோம்! அப்பூதி யடிகளுக்கு ஒப்பு வேறுண்டோ! பரமனே, அன்று பகீரதனுக்குக் கங்கையை யருளி, சாம்பலாய்ப் போன சகரரை எழுப்புவித்தாய். இலேக்கறியான சீராளனே உயிர்ப்பித்தாய்! நின்னருள் வல்லபத்திற்கு எதுதான் அரிது? இம் மெய்யடியாரின் அருமை மைந்தனே நீ எழுப்பித் தந்தருள வேண்டும்.

[அப்பூதியடிகள், மனேவி, பிணமாகிய மகனே மூடித் தூக்கிக்கொண்டு வருதல்]

அப்பூதி:—பெரியீர், இதோ தங்கள் கட்டளேப்படியே கொணர்ந்தோம். சிவன் செயல் நடக்கட்டும்.

[கீழே வைத்தல்]

அப்பர்:—அர வணிந்த அரனே! விடமுண்ட கண்டனே! அரவின் விடம் நீக்கி, நின்னடியார் திருப்பணிக் காளான இம் மைந்தனே, உயிரோடு எழுப்பியருள்.

[பாடிக்கொண்டே திருநீறிட்டுக் கையால் தடவல்]

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே!

பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுங்நெரிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்றலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே.

[பையன் மெல்ல வாயைத்திறந்து எழுந்து]

பையன்:—அம்மா! ....இதோ இலை....அடியார்க்கு அமுது செய்வியுங்கள்.

அப்பூதி:—மகனே நீ பிழைத்தாயா!

பையன்:—அப்பா இலை பறித்தேன், பாம்பு கடித்தது; பிறகு மயக்கத்துடனே ஓடிவந்து, அம்மாளிடம் இலை தந்தபிறகு என்ன நடந்ததென்று தெரியாது.

அப்பூதி:—மகனே, நமது குலதெய்வம், உனக்கு உயிர்ப் பிச்சை தந்தது.

பையன்:—ஆமாம் அப்பா. திடீரென்று ஒரு கனவுபோலத் தோன்றினது. யாரோ என்னைக் குலுக்கி எழுப்பியதுபோ லிருந்தது. பிறகு ஒரு உருவம் தோன்றியது.

அப்பூதி:—அவ்வுருவம் எப்படியிருந்த தப்பனே?

பையன்:—நீண்டசடை, அதிலே சந்திரன்; நெற்றியிலே விபூதி; மார்பிலே பாம்புமாலை; இடுப்பிலே புலித் தோல், தணல்மாதிரி நிறம்....

அப்பர்:—அன்ப, நீ பாக்கியம் செய்தாய்; சிவபிரானே உன்னை வந்து உயிர்ப்பித்தார்.

அப்பூதி:—ஆ! என்ன, வியப்பு! அடிகாள், இறந்தவன் எழுந்தான் இறைவனருளால், தமது தமிழின் தனித் திறத்தால்! சிவனருள் வாழ்க; செந்தமிழ் வாழ்க! பெரிய திருநாவுக்கரசே! எழுந்திரு; அப்பா, உன்னைச் சிவன் சித்தமென்று விட்டிருந்தேன்! சிவனருள் இம் மெய்யடியார் வாக்கினின்று உன்னைச் சிவத் தொண் டிற்காக உயிர்ப்பித்தது! அடிகாள், அமுது செய்ய எழுந்திருங்கள். தங்கள் அமுதிற்குத் தடையேற்பட் டமை எம்மை வருத்துகின்றது! அடிமையின் இல்லத் தில் சின்னு ளிருந்து, எம்மைப் புனிதராக்கி யருள வேண்டும்.

[சிவனுக்குத் தீபாராதனை நடக்கிறது.]

அப்பர்:—பரஞ்சுடர் போற்றி! பரம்பொருள் போற்றி!

அடியார்:—

சிவனருட் சோதி பொங்கித் திகழுக; வுலக மெல்லாம்
அவனரு ளாட லுக்கே அன்புகொண் டொன்று சேர்க!
தவநிலை யோங்கிச் சுத்த சத்தியச் சுடர்க ளான
சிவமயத் தொண்டர் வாழ்க, செந்தமிழ் வாழ்க மாதோ!

[விபூதிப் பிரசாதம் அருளல்.]

அப்பர்:—அடியார் விருப்பம் ஆகுக! சிறிது காலம் தங்கள் மங்கல மனையிலிருந்து, பிறகு திருப்பழனஞ் சென்று திருவாரூர் சேர்வோம்.

சிவபாதம்:—அடியாரே, திருஞான சம்பந்தர் திருப்புக லூருக்கு வரப் போவதாகத் தெரிகிறது; ஆங்கே திருநீல நக்கரும், சிறுத்தொண்டரும் இருக்கின்றனர்.

அப்பர்:—அவர்களைக் காணவேண்டும். திருஞானப் பெரியா ருடன் திருத்தலங்கள் சென்று பணிபுரிதல் இன்பம்; யாழுடன் குழல்சேர்ந்தது போல், இருவர் அன்பும் இணைந்துள்ளது. அதன் பின் திருவீழிமிழலை சேர் வோம். பணிபெரிது; நாள் சிறிது; தாமதங்கூடாது.

அப்பூதி:—அமுது செய்யப் புறப்படுவோம்.

அப்பர்:—திருப்பழனத்தானை இங்கே நினைக்குதும்:—

சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே.
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்
[சென்னிப்
பொன்மாலை மார்பனென் புதுநல முண் டிகழ்வானோ!

வஞ்சித்தென் வளை கவர்ந்தான் வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம் பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப்பூ வாய்நின்ற சேவடியாய் கோடியையே!

[எல்லோரும் செல்லல்]

[வருதல் தண்டாயுதம்]

தண்டாயுதம்:—அற்புதந்தான்! இறந்தபிள்ளையை அப்பர் தேவாரம் பாடி எழுப்பியது அற்புதமே. ஆனால் பாருங்கள், இந்தக் கட்டையைக் கீழே போட்டால், பீரங்கிச் சத்தம்கூட எழுப்ப முடிவதில்லை. கோயில்

மணியா இதைஎழுப்பும்? வினியோகம் போயிற்று.... இறந்தார் எழுந்திருக்கத் தேவாரம் பாடின அப்பர், தூங்கினர் எழுந்திருக்க ஒரு தேவாரம்பாட இன்று விண்பம் செய்துகொள்ளுகிறேன்.

[திரைக்குப்பின்னே]

[அடியார் திருஅமுது செய்ய வரட்டும்!]

இதோ வந்துவிட்டேன். உண்டேன் உறங்கினேன், எழுந்தேன் ; உண்பேன் உறங்குவேன் ; எழுந்திருப்பது திருவமுதனார் கிருபைதான்....மற்றக் கதை பிறகு....ஹரஹர மஹாதேவ.... [ஓடுகிறான்]

## காட்சி 20.

[சாலைவழி : சிவநேசன், சிவபாதம்]

சிவநேசன்:—பாலும் தேனும் கலந்தது போன்றது வாகீச-சம்பந்தர் அன்புறவு. இருவர் பணிகளாலும் தமிழர் விழித்தெழுந்தனர், தமிழ் மேன்மை பெற்றது. நாட்டிற் புகுந்த தீவினைகள் அஞ்சி ஓடுகின்றன. அன்பர் குழாங்கள் தழைத்தோங்குகின்றனர். திருப்புகலூர் முருகனார்மடத்தில்,அடியார்கூடி அன்புசெய்தகாட்சி, திருவாரூரில் இரண்டு பெரியாரும் தேவாரப்பணி புரிந்த சிறப்பு, சிறுத்தொண்டரும், திருநீலநக்கரும் நமது அருட்சுடர்களைக் கண்டு வணங்கிய காட்சி, திருக்கடையூரில் பாடிய பண்பு எல்லாம் எண்ண எண்ண உள்ளம் பூரிக்கிறது.

சிவபாதம்:— அனைத்தையும் விட, திருவீழிமிழலையில் படிக் காசு பெற்றுப் பஞ்சம் தீர்த்த அற்புதம் ஒப்பரிது....

[வருதல் தண்டாயுதம்]

தண்டாயுதம்:—அப்படிச்சொல்லு சிவபாதம்....நமது அப்பரும் சம்பந்தரும் எத்தனையோ தேவாரம் பாடினார்கள். சாப்பாடு போடுகிறவரையில் காது கேட்டுக்கொண்டிருக்கும். கட்டையைக் கீழேபோட்டால், அத்துடன் எல்லாம் மறந்துபோகும். இந்தத் திருவீழிமிழலையிலே பாடினாரே சம்பந்தர், அந்த இரண்டு அடிகளை என்றும் மறக்கமாட்டேன்.

"வாசி தீரவே....காசு....கா....சு....காசு...., காசு நல்குவீர்; மாசில் மிழலையீர்....ஏசல் இல்லையே."

பஞ்சாட்சரியுடன் இதைத் தினம் உருப்போட மறக்கமாட்டேன். "என்னப்பன் என்னைப்பாடினான்; சம்பந்தன் தன்னைப் பாடினான்" என்றார் இறைவர். இருவர் பாட்டிற்கும் படிக்காசு, பொற்காசு கிடைத்தது. என் ஜபத்திற்கு வெள்ளிக்காசு, இல்லை....செம்புக்காசு கிடைத்தாலும் போதும். அதில் முதல் வார்த்தைமட்டும் மாற்றுகிறேன்.

"ஆசை தீரவே—காசு நல்குவீர்...."

சிவநேசன்:—அடியார்களைக் காக்க அவர் காசு பெற்றார். உனக்கெதற்கு?

தண்டாயுதம்:—இதோ இவரைக் காப்பாற்ற (வயிற்றைக் காட்டி) எவ்வளவு சிரமப்படுகிறேன் தெரியுமா? திருவீழிமிழலைக்கு வந்ததும் மழையில்லை; கோடை, பஞ்சம்; வயிற்றில் பகீர் என்றது. நாவரசரே, சம்பந்தரே, நீங்கள் எத்தனையோ அற்புதம் செய்தீர்கள். அந்தக் கதையெல்லாம் நமது நண்பருக்குத் தெரியும். ஆனால் பஞ்சகாலத்தில் இந்த வயிற்றுக்குச் சோறு

போடும் மகான் இருக்கிருனே, அவன் செய்யும் அற்புதம் மிகப்பெரியது என்றேன். 'எண்சாண் உடம்பிற்கு ஒருச்சாண் வயிறே முதன்மை' என்று முன்பே நிலேநாட்டியிருக்கிறேன் அல்லவா? இப்போது "தொண்டர் கடமை உண்டல்" என்பதை நிலேநாட்டுகிறேன்.

சிவபாதம்:—உன் சாப்பாட்டு வேதாந்தத்தை விடமாட்டாய் போலிருக்கிறதே. நட விரைவாக. திருமறைக்காட்டில் அடியார்கள் இருக்கிருர்கள். நாளே மறைக் கதவு திறப்பார்கள்.

தண்டாயுதம்:—திருவீழியில் 'அமுது' மந்திரத்தால் என் விழிக்கதவைத் திறக்க அருள் புரிந்த அடியார்கள், மறைக்கதவைத் திறப்பது ஒரு ஆச்சரியமன்று. வயிற்றில் கனம் குறைந்தால், தலே அதிகமாகச் சுற்றுவதில்லே என்னும் உண்மை அங்கே விளங்கியது.

சிவபாதம்:—தண்டாயுதம் உறங்கினுல் யானேயை விட்டுத் தான் எழுப்ப வேண்டும்.

தன்டாயுதம்:—ஆம்; இனித் தேவார-யானேயைக் காதில் விட்டால் எழுந்து விடுவேன்.

சிவநேசன்:—தேவார யானேயா?

தண்டாயுதம்:—இல்லே, யானேத் தேவாரம்........

சிவநேசன்:—அதென்ன புதிதாயிருக்கிறது?

தண்டாயுதம்:—என்ன, அப்பர் பாடிய யானேத்தேவாரம் மறந்துபோனதா....போரானே ஈருரிவைப் போர்வை யானே; நீ பாடு....

சிவநேசன்:—நீதான் பாடேன்.

தண்டாயுதம்:—என் தொண்டையைக் கிளப்பினால் யானைக் கூட்டங்கள் பயந்து ஒளிந்து கொள்ளும்!

சிவநேசன்:—

போரானை யீருரிவைப் போர்வை யானைப்
புலியதளே யுடையாடை போற்றினானைப்
பாரானை மதியானைப் பகலா னானைப்
பல்லுயிராய் நெடு வெளியாய்ப் பரந்து நின்ற
நீரானைக் காற்றானைத் தீயா னானை
நினையாதார் புரமெரிய நினைந்த தெய்வத்
தேரானைத் திருவீழி மிழலை யானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே!

தண்டாயுதம்:—பார்த்தாயா எத்தனை யானைக்கூட்டங்கள் தேவாரத்தில் பூந்திருக்கின்றன.... போர் யானை, போர்வை யானை, பார் யானை, நீர் யானை, தேர் யானை, அறி யானை....சிந்தை யானை, நகத் தானை...இத்தனை யானைகள் புகுத்தாற் கூடவா இந்தக் கட்டை உணர்வு பெற்று விழிக்கதவு திறக்காது?

சிவபாதம்:—அதெல்லாம் யானையில்லை தண்டாயுதம். ஆன் என்ற ஆண்பால் விகுதியை ஐ என்ற உயிர் தழுவி, அவனை இவனை என்பது போன்று வழங்கியது........

தண்டாயுதம்:—சிவசிவா, இலக்கணம்வேண்டாம்; மண்டையிலே ஆணிவைத் தறைந்தாலும் நுழையாது. சரி, எல்லா யானையும் எம்பிரானையே குறிக்கிறதென்று வைத்துக்கொள்வோம். எம்பிரானே யானையாக வந்து எழுப்பினால், எழுந்திருக்காமலா போகும் இந்தக் கட்டை.

சிவநேசன்:—சரி; நட விரைவாய்........
சிவமயம், சிவமயம்....

(செல்லல்.)

## காட்சி 21.

[திருமறைக்காடு - கோயில் முன் அப்பர், ஞான சம்பந்தர் யாழ்ப்பாணர், சிவநேசன், சிவபாதம், தண்டாயுதம் அடியார் கணம்]

ஞான சம்பந்தர்:—அப்பரே, முன்னுளில் இக்கோயில் திருக்கதவு, திருமறைகளால் திருக்காப்புச் செய்யப்பட்டது. நீண்ட காலம் இது மூடி யிருப்பதால், அன்பர் பின்புறம் சென்று வணங்கி வருகின்றனர். இன்று இக்கதவு திறக்கப் பாடி யருளுக?

அப்பர்:—உள்ளமே கோயில். அதன் ஞான வாயிலைத் திறக்குஞ் சொல்லே வேதம். ஓம், நமச்சிவாய!

பண்ணினேர் மொழியாள் உமை பங்கரோ
மண்ணி ஞர்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி ஞல்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம் மினே!

அரனே, இன்னும் இரக்க மில்லையோ? அடியார் வேண்டு கோளுக் கிரங்கிக் கதவு திறந்தருள்!

அரக்கனை விரலால் அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானிரே

சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க விக்கத வந்திறப் பிம்மினே!

[கதவு திறத்தல். சிவசந்நிதி விளங்குகிறது.]

ஞானசம்பந்தர்:—இதோ கதவு திறந்தது! தமிழ்மறை வாழ்க! வாக்கின் மன்னவரே, இனி நாம் சிவனை வணங்குவோம்.

[தீபாராதனை நடக்கிறது.]

எல்லோரும்:—ஹர ஹர ஹர ஹர மஹாதேவ!

அப்பர்:—

இந்திர னோடு தேவர் இருடிகள் ஏத்துகின்ற
சுந்திர மானார் போலும், துதிக்கலாஞ் சோதி போலும்;
சந்திர னோடுங் கங்கை அரவையுஞ் சடையுள் வைத்து
மந்திர மானார் போலும் மாமறைக் காட னாரே!

[விபூதி வாங்கிக்கொண்டு வெளியே வரல்]

அப்பர்:—திருஞான வள்ளலே, இக்கதவு திறக்கவும் மூடவும் இயல வேண்டும்; ஆதலின் இது மூடுதற்குப் பதிகம் அருளுக.

ஞானசம்பந்தர்:—அம்மை யப்பா! நின்னருள் நிறைவேறுக!

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காட் டுறை மைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே

[கதவடைத்தல்]

அப்பர்:—ஆ! சிவஞானச் செல்வரே, ஒரே பாவிற் கத வடைத்ததே. தமது அருட்பெருமை யென்னே! இப் போது கதவு மூடவும் திறக்கவும் வல்லது.

தண்டாயுதம்:—எங்கே பார்க்கிறேன்....உண்மை தான்.

அடியார்கள்:—இவ்வற்புதச் செயலை இயற்றிய அருந் தமிழ் வாழ்க! அடியார் திறம் வெல்க!

ஞானசம்பந்தர்:—அன்பர்காள், வேதம் கடவுளறிவு; மூவ் வழுக்கற்ற முத்தருக்கு, சிவனருட் சித்தருக்கு, அத் தன், தானே வேதப்பொருளை விளக்குவான். உள்ள றிவு மலர்ந்த அருளன்பர் திருவாக்கே, உலகனைத்தை யும் நடத்தும் திருமறை. தமிழ் வாழ்க! சிவம் வாழ்க!

அப்பர்:—சிவஞான வள்ளலே, நாம் திருவாமூரைத் தரிசித் துப் பின்பு சில நாட்கள் திருமறைக் காட்டில் இருப் போம். பிறகு திருவருள் நோக்கப்படி செய்வோம்.

ஞானசம்பந்தர்:—நாம் பாண்டி நாடு செல்லவேண்டும். அங்கே பெரும்பணி யுள்ளது. கூன் பாண்டியனைச் சிவ நெறிக்குத் திருப்பித் திருவருளை விளக்க வேண் டும். தமிழகத்தைப் பிடித்த நாத்திகப் பேயையும், ஆணவ மலத்தையும் ஒழித்துப் புனிதமாக்கப் பெரும் பணி யுள்ளது! தங்கள் இச்சை யென்ன?

அப்பர்:—அடியேன் திருவாவடுதுறை, பழையாறை, வட தளி, பின்பு திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி, திருப் பைஞ்ஞீலி, திருவண்ணாமலை, திருவேகம்பம், திருவொற் றியூர், திருக்காளத்தி, முதலியவற்றை வணங்கிப் பின்பு திருக்காசி வணங்கி, ஆங்கிருந்து திருக் கைலாயம் செல்ல எண்ணம். திருவருள் நடத்துக!

ஞானசம்பந்தர்:—நன்று! அடியார் பணி வெல்க! நாம்இனித் திருவாமூர் செல்வோம்.

[செல்லுதல்]

தண்டாயுதம்:—உம் உம், உம் (அழுகிருன்)

சிவநேசன்:—என் அழுகிருய் தண்டாயுதம்?

தண்டாயுதம்:—அப்பர் கைலாசம் போகிருராம்; தொந்தி யப்பர் மலேயேறமாட்டார்; அப்பர் கூட்டத்துடன் சென்று இத்தனை நாள் வாடாமல் சாப்பாடு கிடைத்தது; இனி....உம், உம்........

சிவநேசன்:—படி யளப்பவன் பரமன். கவலேப் படாதே.

தண்டாயுதம்:—திருவோட்டைச் சிவபெருமான் முன்பு வைத்து விட்டு, விழிக்கதவை மூடிவிடுவேன்; திறக்கும்போது அது நிரம்பி யிருக்கவேண்டும்; அது தான் அடிமை வேண்டும் வரம்.

[செல்லல்]

## காட்சி 22.

[இமயமலே - அப்பர் உருண்டு உருண்டு மேற் சென்று ஒரு குளத்தருகே கை கால் சோர்ந்து புலம்பல்.]

அப்பர்:—

பண்ணின் இசையாகி நின்ருய் போற்றி!
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி!
எண்ணும் எழுத்துஞ் சொல் லானுய் போற்றி!
என் சிந்தை நீங்கா இறைவா போற்றி!

விண்ணு நிலனுந் தீ யானாய் போற்றி!
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி!
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி!
கயிலைமலை யானே போற்றி! போற்றி!

[இப்பாட்டை மெல்ல மெல்ல அயர்ந்தயர்ந்து பாடவேண்டும்]

நமச்சிவாய, நமச்சிவாய! இறைவனே, திருக்கயிலையில் நினது அருட் கோலங் காணக் காதல் கொண்டேன் - சிவபெருமானே, நினது வானோங்கும் அரியணையாகி, நின் பெருமை போல நிவந்து விளங்கும் இவ்விமய மலைமீது இம்மட்டும் உறுதி கொண்டு எப்படியோ வந்துவிட்டேன். இவ்வுடலுயிர்ப் பற்றும் நீங்கினேன். கந்த மூலப்பலங்கள் உண்பதுவுந் தவிர்த்தேன். இரவும் பகலும் ஊர்ந்தேன்; நின் அன்பையே துணைக்கொண்ட அடியேனைத் தீய விலங்குகளும் எதுவுஞ் செய்யவில்லை; நாக மணிப் பாம்புகளும் விளக்கெடுத்தன. நடந்து நடந்து கால்களும் தேய்ந்தன! பசைத்தசை தேய்ந்தது; ஆயினும் மங்கை பாகா, நினது வெள்ளி மால்வரை மீது வைத்த சிந்தை மறவாது, கைகளால் தாவிச் சென்றேன். கைகளும் மணிப்பந் தசைந்து தேய்ந்தன; எனது உயிரிற் கலந்த அன்பே, மார்பினால் வருந்தி உந்தினேன். மார்பும் நைந்து வருந்தி எலும்பு முறிந்தது; பிறகு உடலாற் புரண்டு சென்றேன்! அங்கமெல்லாந் தேய்ந்தன - சிவனே, சிவனே, கைலைப் பெருமானே, இனிச் செல வறியேன். சிவசக்தி விளக்கமே, இமயமே, சித்தருந் தேவரும் சுடரோங்கும் அருளாலயமே! சிவலிங்கம் போன்று கங்கை சூடி நிற்கும் தெய்வமாண்பே, கைலை நாதனைக் காணுங் காதலால் வந்தேன். அன்று திருவாமூருக்கு வாவென்று வழிகாட்டி மறைந்த மாதவனே! வடதளிக் கோயிலில் நின் மூர்த்தியை மீட்டல்

லது உண்ணேன் என்றிருக்க, அவ்வாறே சமணரிட மிருந்து மீட்டுக் கொடுத்த வேந்தனே! திருப்பைஞ்ஞீலி செல்லும் வழியில், எனது பசி யறிந்து, பொதிசோறு கொணர்ந்தீந்த புண்ணியனே! நீயே துணை! நீயே கதி, இனிச் செயலில்லேன்! சிவாய நம! நமச்சிவாய! சிவா அஅ! சிவா! அஅ! [சோர்தல்]

[ஒரு முனிவர் வருதல்]

முனிவர்:—என்னே இவன் அன்புறுதி! ஐயோ, அங்கமெல்லாம் நொந்து நைந்ததே! இன்னும் கைலையின் காதல் கடந்திலன். ஐய! ஐய!

அப்பர்:—முனிவ, வணக்கம்!

முனிவர்:—உறுப் பழிந்து சிதைந்தும் இம் மலைமீது செல்வதேன்?

அப்பர்:—வற்கலையும், நூலும், சடை மௌலியும், பால் வெண்ணீறும் பூண்டு, சிவக்கோலந் துலங்கும் முனிவர் பெரும, சிவனுஞ் சிவையும் கைலை மீது விளங்கும் திருக்கோலத்தை என் கண்ணாற் கண்டு கும்பிடக் காதலானேன்.

முனிவர்:—கைலையை மானிடர் காண்பது அரிது; தாங்கள் கைலைக்குப் போகமுடியாது; இத்துடன் மீண்டு செல்வதே கடனாகும்.

அப்பர்:—என் செவி இம்மொழி கேளற்க!

ஆளுநாயகன் கயிலையி லிருக்கைகண் டல்லால்
மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன் முனிவரனே!

[முனிவர் மறைதல்]

சிவாய நம, சிவாய நம: முனிவர் மறைந்தாரே!

[விண்ணில்]

நினது அன்புறுதியை வியந்தேன்! நாவிற் கரசே எழுந்திரு!

அப்பர்:—என்ன வியப்பு! உடல் சிதைவற்று முன்போல் திண்மையுற்றதே! இனிக் கைலை செல்வேன்.

அண்ணலே யென்னை ஆண்டுகொண் டருளிய அமுதே!
விண்ணிலே மறைந் தருள்புரி வேதநா யகனே!
கண்ணினல் திருக் கயிலையி லிருந்த நின் கோலம்
நண்ணி நான்தொழ நயந்தருள் புரிகசிற் பரனே!

[விண்ணில்]

அன்பனே, இப்பொய்கையில் மூழ்கி யெழுந்திரு! கைலையில் நாமிருக்கும் வண்ணமே திருவையாற்றிற் காண்பாய்!

அப்பர்:—இறைவ, அவ்வாறே செய்கிறேன்; நமச்சிவாய, நமச்சிவாய!

[முழுகுதல்]

# காட்சி 23.

[ஐயாற்றுக் கோயிலில் சிவநேசன், சிவபாதம், தண்டாயுதம். ஒரு வாவியினின்று அப்பர் எழுந்து வருதல்]

சிவபாதம்:—இதென்ன வியப்பு, இந்த வாவியினின்றும் அப்பர் எழுந்து வருகிருர்!

அப்பர்:—சிவமயம்! சிவமயம்! கைலையின் காட்சி எங்கும்! எங்கும்சக்தியுஞ் சிவனும்! ஓம் சிவ சக்தி, ஓம் சுத்தசக்தி!

சிவநேசன்:—கைலை சென்றவர் இறைவ னருளால் இங்கு வந்தெழுந்தார்! அப்ப மூர்த்திக்கு வணக்கம்!

தண்டாயுதம்:—என் வயிறு குளிர்ந்தது! அப்பர் வாழ்க!

அப்பர்:—அடியார் வாழ்க! கோயிலிற் கைலைகாண்கின்றேன். தேவர் சித்தரெல்லாம் முன் விளங்கிப் பூத வேதாளங்களோடு சிவனைப் போற்றுகின்றனர். கங்கை காண்கிறேன்! வெள்ளி மலையுடன் பவளமலை யிருப்பதுபோல், சிவனுஞ் சிவையுந் திகழக் காண்கிறேன்! என் வள்ளலே! இன்பம்! பேரின்பம்! யாரே எனதின்பத்தை அளப்பார்!

ஓசை யொலி யெலா மானாய் நீயே!
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே!
வாச மலரெலா மானாய் நீயே!
மலையான் மருகனாய் நின்றாய் நீயே!
பேசப் பெரிதும் இனியாய் நீயே!
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே!
தேச விளக்கெலா மானாய் நீயே!
திருவையா றகலாத செம்பொற் சோதீ!

[தீபாராதனை யாதல்.]

எல்லாரும்:—ஹர ஹர ஹர ஹர ஹர மஹா தேவ!

அப்பர்:—ஓம் சிவ சக்தி! எங்கும் சிவசக்தி, எல்லாம் சிவ சக்தி! ஓம் சுத்த சக்தி!

மாதர்ப் பிறைக்கண்ணி யானை, மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்.
யாதுஞ் சுவடு படாமல், ஐயா றடைகின்ற போது,
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்;
கண்டேன் அவர் திருப் பாதம் கண்டறி யாதன
[கண்டேன்!

ஓம் சிவசக்தி! ஓம் சுத்தசக்தி!

வளர்மதிக் கண்ணியி னானை, வார்குழ லாளொடும் பாடிக்
களவுப டாததொர் காலங் காண்பான் கடைக்கணிக்
[கின்றேன்.
அளவு பாடாததொ ரன்போ டையா றடைகின்ற போது,
இளமண நாகு தழுவி, யேறு வருவன கண்டேன்
கண்டே னவர் திருப்பாதம் கண்டறி யாதன கண்டேன்!

எல்லாரும்:—நாவுக்கரசர் வாழ்க, அரனருளால் ஐயாற்றிற் கைலை கண்ட அப்பர் வாழ்க!

[திரை விழுதல்]

## காட்சி 24.

[பூந்துருத்திக் கருகே ஞான சம்பந்தர், அன்பர் வெற்றி கூறச் சிறப்புடன் முத்துப் பல்லக்கில் வருகிறார். ஒருவருக்கும் தெரியாது அப்பர் சிவிகை தாங்குகிறார்.]

எல்லோரும்:—

வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்,
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக!

ஆழ்க தீய தெல்லாம் அரன் நாமமே ;
சூழ்க வையக முந் துயர் தீர்கவே!

பரசமய கோளரி வாழ்க! தமிழுஞ் சைவமும் தழைக்க வந்த சம்பந்தப் பெருமான் வாழ்க! முத்தமிழ் விரகர் வருக!

ஞானசம்பந்தர்:—அன்பர்காள், இதோ பூந்துருத்தி வந்தோம்; அப்பர் எங்குற்றுர்?

அப்பர்:—இதோ, உம்....அடியேன்....உம் அடிகள் தாங்கி வரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று, இங்குற்றேன்! ஞான வள்ளலே, தங்கள் வெற்றிக் கோலங் காணுங் காதலால் முன்னரே வந்தேன், வணக்கம்!

ஞானசம்பந்தர்:—ஆ, தாங்களோ எளியேன் சிவிகையைத் தாங்குவது....?

அப்பர்:—இந்தப் பாக்கியத்தை எளியேனுக்கு அளித்த ஏழைப் பங்காளனை வணங்குகிறேன்.

ஞானசம்பந்தர்:—தங்கள் எளிய வாழ்வும், அன்புப் பெருக்கும், அரிய பணிவும், இந்த முதுமையில் தாங்கள் செய்யும் அரிய பெரிய அருட்பணியும் உலகோர்க்கு என்றும் உதாரணமாகுக! அப்பரே, தங்களை நினைக்க நினைக்கத் திருவருளின்பம் பொங்குகிறதே....!

அப்பர்:—திருஞானச் செல்வரான தங்களை உன்ன உன்ன உள்ளம் பூரிக்கிறது. மதுரையில் தாங்கள் பெற்ற வெற்றியை அடியார் முழக்கமே காட்டுகிறது....

ஞானசம்பந்தர்:—மங்கையர்க் கரசியாரும் குலச்சிறையாரும் அரிய துணை புரிந்தனர். சிவபிரான் தோன்றுத் துணையாயிருந்து வேதமும், சைவமும், தமிழும் வெற்றி

பெறத் திருவருள் பாலித்தான். பாண்டியனும் அன்பனுனன்.

அப்பர்:—எல்லாம் சிவன் செயல்!

அன்பர்குழாம்:—பரசமய கோளரி வாழ்க! முத்தமிழ் விரகர் வாழ்க! திரு நீற்றின் மாண்பினுல் பாண்டியன் சுரந் தீர்த்த அருட் பிள்ளை வாழ்க! நின்னருள் வாக்கால், எரியில் எரியாதிருந்தது செந்தமிழ்! ஏறும் வெள்ளத்தை எதிர்த்தது நந்தமிழ்! தமிழின் அழியாத் தன்மையைக் காட்டினை! இளந்தமிழ் இனிமேல் இசைபெற்ருேங்கும்! தமிழுக்குற்ற தடைகள் நொறுங்கும்! அமுதத் தமிழின் அருளழகொளிரும்! பாண்டியன் சிவனடி பணிந்திடச் செய்தாய்! பொலியுக சைவம்! நிலவுக செந்தமிழ்! வளருக இன்பம், வாழ்க சம்பந்தர்!

அப்பர்:—ஞானச் செல்வரே, இதோ திருமடம் வந்து விட்டது. அனுட்டானங்களை முடித்து, ஆலயம் புகுந்து, அமுதுண்டு இளைப்பாறிய பின், தங்கள் வெற்றி வரலாற்றை முழுதுங் கேட்கவேண்டும். தங்கள் வெற்றிக் கொடி வளரும் பாண்டி நாட்டிற்கு யான் விரைவிற் செல்ல விருப்பம்.

ஞானசம்பந்தர்:—அவ்வாறே ஆகுக!

அன்பரெல்லாரும்:—

வீடலால வாயிலாய் விழுமி யார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவ நின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானு நீ தொடர்ந் திலங்கு சோதி நீ
கற்றநூற் கருத்துநீ அருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் உரைப்பதென் முகம்மனே.

[அடியார் நடன மாடிச் செல்லல்]

[தண்டாயுதம் ஆவேச நடனம் செய்கிருன்]

# காட்சி 25.

[அப்பர்-சிவநேசன்-சிவபாதம், தண்டாயுதம்; திருப்புகலூர்க் கோயிலில் உழவாரப் பணி செய்கின்றனர்]

அப்பர்;—

முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி,
முதிருஞ் சடைமுடி மேல் முகிழ்வெண் டிங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணுக் கோத்துத்
துளைத்தானைச் சுடுசரத்தாற் றுவள நீறுத்
தூமுத்த வெண்முறுவல் உமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடற் றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் யானே !

சிவபாதம்:—அப்ப மூர்த்தி, தாங்கள் பாண்டிநாட்டில் மிகவும் அருமையான பதிகங்கள் அருளிச்செய்தீர்! திருப்புத்தூர், திருவால்வாய், திருப்பூவணம், இராமேஸ்வரம், திருநெல்வேலி, திருக்கானப்பேர் முதலிய தலங்களில் பாடியவை அருமையா யிருக்கின்றன! அதனினும் இத் திருப்புகலூரில் நிலைத்துத் தாங்கள்

அருளும் திருத்தாண்டவங்கள் மனத்தை உருக்குகின்றன. அடியார் சிவானந்தத்தேன் பருகுகின்ளும்.

சிவநேசன், சிவபாதம்:—(பாடுதல்)

வென்றிலேன் புலன்கள் ஐந்தும், வென்றவர் விளாகந் தன்
சென்றிலே னுத லாலே, செந்நெறி யதற்குஞ் சேயேன் [னில்
நின் றுளே துளும்பு கின்றேன் நீசனேன் ஈசனேயோ
இன்றுளேன் நாளை யில்லேன் என்செய்வான்தோன்றினே
[னே!

பரம குருவே, இதுவே எமது குறை!

அப்பர்:—சிவனை அன்பு செய்மின்! அன்பும் பணியுமே அடியார் கடன்! அவனருளில் ஊன்றினோர் எதனுலும் கேடிலர். சிவானந்த முண்டவர் செம்பொன்னில் மயங்கார். திருவிளம்பெண்டிர் வலையிற் சிக்கார்.

[பொன்னும், வைரமும் காணல்]

சிவபாதம்:—இதென்ன! பெரியோய், உழவாரம் நுழைந்த இடமெல்லாம் பொன்னும் மணியுமாய்ப் பொலிகின்றதே! இதென்ன வியப்பு!

அப்பர்:—இதென்ன! இப்பொன்னிற்கும் நவரத்தினங்களுக்கும் இங்கென்ன வேலை! ஓகோ! ஒருக்கால் அவற்றை இவன் விரும்புவானென்று சோதிக்க வந்தன போலும்! இதோ இவற்றை உழவாரத்திலேந்திப் புல்லொடும், கல்லொடும் பொய்கையிற் பெய்குதும்.

தண்டாயுதம்:—ஐய! ஐய! வேண்டாம்; "ஆசை தீரவே காசு நல்வீகுர்...." (பாடுகிருன்)

(அப்பர் குப்பைகொட்டி வருதல்)

[திடீரென்று அரம்பை மாதர் சூழ்ந்து பாடியாடுதல்]

அரம்பையர்—

காதல் காதல் காத லென்று காத லின்பம் பேசடா!
காத லின்றி யின்ப மில்லே; கட்டையந்த வாழ்வுதான்
பூத யாக்கை போந்ததும் புவி வளந் தழைப்பதும்
வேத நீதி யாதலும் விரும்பு காத லாலடா!

அப்பர்:—இதென்ன கூத்து! மற்ருேர் சோதனையா? வந்து பார்க்கட்டும். நமச்சிவாய, நமச்சிவாய!

அரம்பையர்:—ஐயா! ஏனிந்த வரட்சி? வாழ்வை வாழாமல் இப்படித் துறந்ததேன்? ஐயா துரையே! இதோ காதலே யளிக்கிருேம். எம்மைப் பார்! எமதழகைப் பார்! எமது சேல்விழியைப் பார்! எமது மின்னிடை பார்! வாள்நகையைப் பார்! இதோ பார் எங்கள் மார்பை; இன்பம் எம்மிட முள்ளது; எமதின்பம் அரிது; வலுவில் உனக் கெய்தியது; வா வா! காதலின்பமே இன்பம்—துரையே! உன்பால் மையல் கொண்டோம், வா! இதோ விண்ணுலகை எம தின்பத்திற் காண்.

இன்ப மாகுங் காதலே யிகத்தினிற் பரந்தரும்.
துன்ப மாங் கவலேயைத் துரத்திடும் மருந்திதே.
அன்பனே மனமுவந் தணைந்து பா ரதிசயம்!
முன்பு மின்று மென்று மாம் முடி வறுஞ் சுகத்தினே.

அப்பர்:—புறஞ்செல்மின் பொய்ப்பேய்காள்! உங்கட்கு யான் ஆட்படேன்! என்னே நீர் அடிமைசெய்ய முடியாது! மதன வாடை இங்கேசெல்லாது. இது சிவ மணச்சோலே!

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள், தீவினைகாள், திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலைமகனைத் தண்ண லாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்ற னடித்தொடர்வா னுழிதர்கின்றேன்
இடையிலேன் கெடுவீர்கா ளிடறேன் மின்னே!

அரம்பையர்:—வள்ளலே! உமது வைராக்யத்தைச் சோதிக்கவே இவ்வாறு நாங்கள் வந்தோம். மன்னித்திடுக.

[வணங்கி மறைதல்]

தண்டாயுதம்:—என்னைக் கலியாணம் பண்ணிக்கோங்கோ. வரதட்சிணை கேட்கவில்லை; திருவோடு நிறைந்தால் போதும்.

[விண்ணில்]

வெல்லற்கரிய பெண் ஆசையை வென்ற, திருநாவுக்கரசே, உனக்குச் சிவானந்த மாகுக!

சிவபாதம்:—அப்பமூர்த்தி! பொன், பெண் இரண்டையும் வென்ற தமக்கு என்ன குறை? தங்கள் வெற்றித் திறனைப் பரமனே சோதித் தறிந்தான்.

அப்பர்:—இனிப் பரமன் எம்மை ஆட்கொள்வான்.

[கோயில் மணி யடித்தல்]

இதோ வழிபாடு தொடங்கிற்று.

மைப்படிந்தகண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்
ஒப்புடைய னல்லன், ஒருவனல்லன், [லான்;
ஒரூர னல்லன் ஓர் உவமனில்லி;

அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே!

## காட்சி 26.

[திருப்புகலூர்ச் சந்நிதி]

அப்பர்:—பரமனே! இவ்வுடற் சட்டை தளர்ந்தது! உணர்வுடனுள்ள போதே உன்னைத் துதித்து அறிவுடன் நின் கழலடைகின்றேன்! என்னை ஆட்கொள்! சிவமும் தமிழுஞ் செழித்தோங்க, நின் திருவருளாணை இதன் வாயிலாக வேண்டும் பணி புரிந்தது. இனியிச்சட்டை மறைக! ஓம் சிவம், ஓம் சிவம்! சிவாய நம! சிவமயம்! சிவோஹம்!

எண்ணுகேன் என்சொல்லி யெண்ணுகேனோ!
எம்பெருமான் திருவடியே யெண்ணி னல்லால்,
கண்ணிலேன் மற்றோர் களைக ணில்லேன்;
கழலடியே கைதொழுது காணி னல்லால்,
ஒண்ணுளே யொன்பது வாசல் வைத்தாய்
ஒக்க வடைக்கும்போ துணர மாட்டேன்;
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றேன்;
பூம்புகலூர் மேவிய புண்ணியனே!
நமச்சிவாய, சிவமயம்! சிவோஹம்!

[ஒரு சோதி தோன்றல், திருவுரு மறைதல்]

சிவநேசன்:—என்ன சோதி! மறைந்தார் அப்ப மூர்த்தி!

சிவபாதம்:—(பார்த்து) சிவபத மடைந்தார்! இப்போது தான், சிவன் கழலடையப் போவதாகச் சொன்னார். உடனே சிவன் அவரை ஆட் கொண்டான். சிவ பெருமானே! நினது பெயரையும் பெருமையையும் உலகிற் சிறக்கச்செய்து, தமிழும் சமயமும் வாழவே வாழ்ந்த ஒரு மாப்பெரும் அடியாரை ஆட்கொண்டாய்! இப்படிப் பல அடியார்களை உலகில் நிலவச் செய். உருகும் அன்பர் ஒளியாய் மறைவர்! வாகீசப் பெருமானே, சிவம் தமிழ் இரண்டிற்கும் அருட் பணி புரிந்தே எமது வாழ்வு திருவடி சேர்க!

வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுணர் வுள்ளந் தோறும்
சென்றுளே அமுத மூற்றும் திருவருள் போற்றி! யேற்றுக்
குன்றுளே யிருந்து காட்சி கொடுத்தருள் கோலம் போற்றி!
மன்றுளே மாறி யாடும் மறைச் சிலம் படிகள் போற்றி!

## சமயவாழ்த்து

[நாடக பாத்திரரெல்லாம் கூடி முடிவில் இதைப்பாடி வட்டமிட்டு நடனமாடுக]

எல்லாரும் வாருங்கள்! எல்லாரும் சேருங்கள்!
இன்பவிண் ணுள்ள திங்கே!
எல்லாரும் பாடுங்கள்! எல்லாரும் ஆடுங்கள்
எல்லார்க்கும் ஓர்சமயம்!
பல்மதச் சண்டைகள் ஓய்ந்தன; தூய
பரமனை வாழ்த்திடுவோம்!
எல்லா வுயிர்களும் ஈச னருளுடல்,
எல்லாரும் ஓர்குலமே!

எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கு நிறைந்தவன்
இல்ல மியற்கை யுடல்!
ஒள்ளிய வுண்மை யறிவின்பத் தெய்வம்
உயிர்க்குயி ரென் றுணர்வோம்!
உள்ளத்தை யள்ளிடுந் தெள்ளமு தத்தமிழ்
ஓது மறையொலிப்போம்!
அள்ளிப் பருகுவோம் அன்பருள் வெள்ளத்தை
ஆனந்தத் தோழர்களே!
பல்வகைப் பாருக்குப் பார்வை யளிக்கும்
பகலன்ன தெங்கள்மதம்!
பரம னருளிற் பழுத்தவர் பாடிப்
பரப்பிய தெங்கள் மதம்!
இல்லையென் பார்க்கும் இருக்கு முறுதி
யிலக்குவ தெங்கள் மதம்;
இல்லறத் திற்செய்ய நல்லறமேன்மை
இணைத்த தமிழ்ச் சமயம்!
தில்லைப் பொதுவினிற் சித்தர்கள் முத்தர்
சிவானந்தச் செல்வர்கணம்
திருவுறு தெய்வச் செயல்கள் பல்லாயிரஞ்
செய்வித்த தெங்கள் மதம்!
எல்லையில் லாத் துரி யாதீதப் பால்வெளி
யெட்டிய தெங்கள் மதம்
எல்லாரும் இன்புற் றிருக்க வழைக்கும்
இயல்மதம் வாழியவே!

ஓம் சிவம்!

---

# சுத்த சன்மார்க்கம்

1. எல்லா உயிர்க்கும் இறைவன் ஒருவனே. உண்மை, அறிவு, இன்பம், தூய்மை, அருள் இவையே அவன் விளக்கமாம். இவற்ருல் அவனை அடையலாம்.

2. சாதிமதம், சாத்திரம்,கோத்திரம், நாடு, நிறம், சடங்கு, மொழி, ஆண், பெண், ஏழை, செல்வன் என்ற வேறுபாடில்லாமல் எல்லாரும் இறைவனை அடையலாம்.

3. உலகம் முழுதும் அவன் அருளாலயமாம். ஒவ்வொருவர் உள்ளமும் அவன் அரியணையாம். உட்குவிந்த தியானத்தால் அவனை அனைவரும் கூடலாம்.

4. வெளிச் செல்லும் புலன்களையும் மனத்தையும் உள்ளிழுத்து,சித்தச்சலனத்தை நிறுத்தி,இதயத்துடிப்பையே நாளைக்கு ஒருமணிநேரம் கவனிக்கவும். அப்போது 'இதோ என் இறைவன், அவனுடன் நான் கலந்து நிற்கிறேன்' என்று நினைக்கவும். வேறெந்த நினைப்பிற்கும் இடங்கொடாதிருக்கவும். இதுவே தியானம் நிலைக்கும் வழியாம்.

5. உடலை இறைவன் மாளிகையாக நினைத்து, அதன் ஒவ்வொரு பாகத்தையும் சுத்தமாகவும், உறுதியாகவும் வைத்திருந்து, பக்தியும், பரோபகாரமும் செய்க. அந்தக்கரண சுத்தி, வாயடக்கம், தூய நினைப்பு, தூய செயல், இரண்டு வேளை தூய சைவவுணவு, மாதம் ஒரு பட்டினி, தினம் ஒருமணிநேரம் இயன்ற உடற் பயிற்சி, விந்தடக்கம் இவை உடலுறுதிக்கு வழியாம்.

6. நல்லறிவு வளர்ச்சி, அன்புறுதி, அடியார் நேயம், அருட்பணி, தூய்மை, நேர்மை, நாண், ஒப்புரவு, ஈகை, அமைதி, உயிர்க்கருணை, பிழைப்பிற்கு ஒரு நற்றெழில், புலனடக்கம், இறைவனருளைக் கூவி முறையிடுதல் ஆகிய பதி

ணைந்து ஒழுக்கங்களால் சித்தசுத்தி எய்தும்- அதனால் இறைவனருள் இறங்கி வரும்.

7. சித்தசுத்தி, ஆத்ம சுதந்திரம், சர்வாத்ம ஸமத்துவம் இவையே சன்மார்க்கத்தின் மூலக் கொள்கையாம், அவரவர் உள்ளத்தைக் கோயிலாக்கி இறைவனைத் தியானத்தாலும், கானத்தாலும், அருட்பணிகளாலும், ஞானத்தாலும், மந்திர ஜபத்தாலும், தவயோகசாதனங்களாலும் வழிபடலாம். புறத்தோற்றம் எப்படியானாலும், பேதபுத்தி கொள்ளக்கூடாது. இதயமும், இறைவனும் எல்லாருக்கும் பொது. சன்மார்க்க உண்மையும் பொது. எல்லாரும் அருட்பொதுவில் கூடி வாழலாம்.

8. செய்யும் பணிகளையெல்லாம் அவாவின்றி, சமசித்தத்துடன், உலகிறைவனுக்குத் திருத்தொண்டாகச் செய்க. காரியசித்திக்கு அறிவு, மனவுறுதி, இவைனருள் மூன்றையும் துணைக்கொள்க. வாழ்வில், ஞானம், பக்தி, கர்மம் மூன்றும் இணைந்திருக்கவேண்டும்.

9. சன்மார்க்கத்தை ஒவ்வொருவரும் கருத்தூன்றிப் பயில்க. சுற்றிலுமுள்ள சகோதர சகோதரிகளுக்கும் அவரவர் தாய்மொழியில் சன்மார்க்கத்தை விளக்கி, அவ்வழியில் நடக்கத் தூண்டுக- வீதிதோறும், கிராமந்தோறும் அருட்பாடல்களை முழங்குக. வறுமை நீங்கும் நற்றொழில், மடமை நீங்கும் நற்கல்வி, ஆத்மசுத்தி யெய்தும் சன்மார்க்கம் இம்மூன்றையும் ஒவ்வொரு அறவோரும் இயன்றவரையிற் பரப்பிப் பணிசெய்க.

10. தினம் ஒருமணிநேரம் அன்பர் கூடி, 'உலகுயிர்களெல்லாம் நன்றாயிருக்கவேண்டும், நாடு செழிக்கவேண்டும், எல்லாருக்கும் இறைவன் அருள் பாலிக்கவேண்டும்' என்று தோத்திரம் செய்து வழிபடுக. அன்பர் முறையீட்டை ஆண்டவன் கேட்டருள்வான்.

**எல்லா வுயிர்களும், இன்புற் றோங்குக !**

**ஓம் சுத்தசக்தி.**